பக்கங்கள்: இருபத்தெட்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 13 செவ்வாய்க்கிழமை (30.08.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 277



14 நாவாந்துறையில் அரங்கேறிய நாடகம்



21 திரையுலகம் போராட்டம்



23 அல் குவைதாவின் தலைவர் மரணம்



25 பயப்பீதியில் இந்திய வீரர்கள்



ஜனாதிபதி மஹிந்தவின் நெருங்கிய சகாவும் லிபிய ஜனாதிபதியுமான கடாபி மீதும் போர்க் குற்றச்சாட்டுக்களை மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுமத்தியுள்ளது. கடாபியின் மகனால் நடத்தப்பட்ட படைகளினால் மரண தண்டனைப் பாணியில் நடத்தப்பட்ட படுகொலைகளில் இறந்தவர்களின் எச்சங்கள் இவை என கண்காணிப்பகம் ஆதாரங்களை நேற்று வெளியிட்டது. கடாபியின் வீழ்ச்சி குறித்து ஜனாதிபதி இதுவரை எந்தக் கருத்தும் வெளியிடவில்லை.

## கச்சதீவுக் கடலில் இந்திய மீனவர் மீன்பிடிக்க அனுமதிக்கமாட்டோம்

### இந்தியாவுக்கான தூதர் காரியவசம் தெரிவிப்பு

பெங்களூர், ஒக. 30

கச்சதீவில் மீன்பிடிக்க தமிழக மீனவர்களை அனுமதிக்க மாட்டோம் என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் பிரசாத் காரியவசம் தெரிவித்தார்.

இது குறித்து சனிக்கிழமை அவர் பெங்களூரில் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

இந்தியா-இலங்கை ஒப்பந்தப்படி இலங்கைக்கு அளிக்கப்பட்ட கச்சதீவில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்க அனுமதிக்க மாட்டோம். ஒப்பந்தத்தில் கூறியுள்ளபடி அங்குள்ள புனித அந்தோனியார் ஆலயத்திற்கு பொதுமக்கள் ஆண்டுக்கு ஒரு முறை சென்று வழிபாடு நடத்த மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.

பக் 27

## ஒரே நாளில் இரு சிறுமிகளை காணோம்

யாழ்ப்பாணம், ஒக. 30

மானிப்பாய் மற்றும் வடமராட்சியில் இரு சிறுமிகள் நேற்றுத் திடீரெனக் காணாமல் போயுள்ளனர்.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் தரம் 8 இல் கல்வி பயிலும் கனகலிங்கம் லக்சிகா (வயது 13) என்ற சிறுமியை நேற்று நண்பகல் முதல் காணவில்லை என்று வல்வெட்டித்துறைப் பொலிஸில் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடைக்குச் சென்று வருவதா

பக் 27

## நல்லூரிலும் நேற்று சிறுமி ஒருத்தி மாயம்

நல்லூர், ஒக. 30

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பெருந் திருவிழாவின் கடைசி நாளான நேற்று, பூங்காவனத்தின் காலைப் பூசை வழிபாடுகளுக்கு என ஆலயத்துக்கு வந்த 6 வயதுச் சிறுமி ஒருத்தி காணாமல்போயுள்ளார் என்று பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

புதிய செம்மணி வீதி, பாரதிபுரத்தைச் சேர்ந்த வேலன் வேணிகா (வயது 6) என்ற

பக் 28

# ஜெயலலிதா கைவிரிப்பு தகர்ந்தது எதிர்பார்ப்பு

### தூக்குத் தண்டனையை எதிர்த்து போராட்டம் வலுக்கிறது

சென்னை, ஒகஸ்ட் 30

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரின் தண்டனையைக் குறைக்கத் தனக்கு அதிகாரம் ஏதும் இல்லை என்று தெரிவித்துள்ளார் தமிழக முதல்வர் ஜெயலலிதா. இதனால் அவர்களது தண்டனைக் குறைப்புத் தொடர்பாக நிலவி வந்த பெரும் நம்பிக்கை தகர்ந்துள்ளது. இன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் வரும் வழக்கு விசாரணை ஒன்றே எஞ்சியிருக்கும் நம்பிக்கை என்று மூவரின் தண்டனைக்கு எதிராகப் போராடும் குழுவினர் தெரிவித்துள்ளனர். இதற்கிடையே தண்டனைக் குறைப்பை வலியுறுத்தி தமிழகம் எங்கும் எதிர்ப்புப் போராட்டங்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மூவரின் தண்டனைக் குறைப்புத் தொடர்பாகத் தமிழக சட்டசபையில் நேற்று முதல்வர் ஜெயலலிதா அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.



சட்டப் பேரவையின் 110ஆவது விதிமுறையின் கீழ் முதல்வர் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டதாவது:-

ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் 3 பேரின் தூக்குத்தண்டனை தொடர்பான கருணை மனுக்களை ஜனாதிபதி நிராகரித்துள்ளார். அவர் நிராகரித்த பின்னர் அந்தத் தண்டனையை இரத்துச்செய்யும்

பக் 27

## அரசியல் கைதிகளின் வழக்குகள் இனி சாதாரண சட்டங்களின் கீழ்

### அமைச்சர் வாசுதேவ கூறுகின்றார்

கொழும்பு, ஒக. 30

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப்பட்டு, சாதாரண சட்டங்களின் ஊடாகவே இனி விசாரணைக்கு உட்படுத்தப்படுவர்; புதிய சட்டங்கள் எதுவும் கொண்டு வரப்படமாட்டாது என்று தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நேற்று உதயன் பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ள போதிலும், அதற்குப் பதிலாக நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சில ஒழுங்கு விதிகளை அரசு அறிமுகம் செய்யவுள்ளது என்று செய்திகள் வெளியாகியிருந்தன. அப்படிப் புதிய சட்டங்கள் எவையும் கொண்டுவரப்படமாட்டா என்று வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்ததாவது-

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சில ஒழுங்கு விதிகளைக் கொண்டுவந்து, சிறை வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளைத் தொடர்ந்தும் தடுத்து வைக்க வேண்டிய தேவை ஒன்றும் அரசுக்குக் கிடையாது. அவ்வாறு புதிய ஒழுங்கு விதிகளும் கொண்டுவரப்பட மாட்டாது.

அவசர காலத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, தடுப்பில் வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மீது தற்போதைய சாதாரண

பக் 27

## தூக்குத் தண்டனை மேன்முறையீடு உயர்நீதிமன்றில் இன்று விசாரணை

சென்னை, ஒக. 30

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு இன்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வருகிறது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் மரண தண்டனையை ரத்துச் செய்யக்கோரி பிரமாண வாக்குமூல மேன்முறையீட்டு மனுக்களை சட்டத்தரணி சந்திரசேகர் தாக்கல் செய்தார். மனுக்கள் மீது உடனடியாக விசாரணை நடத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

உயர் நீதிமன்ற நீதியரசர் போல் வசந்தகுமார் இதை ஏற்றுக்கொண்டு இன்று விசாரணை ஆரம்பமாகுமென நேற்று அறிவித்தார்.

இதில் ஆஜராகி வாதாடுவதற்காக சட்டத்தரணிகள் ராம்ஜெத் மலானி, யுக்முகுக் வாகித் சௌத்திரி, காலின் கான்சிலிஸ் ஆகிய மூவரும் இன்றிரவு சென்னை வருகிறார்கள். கிண்டியில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் இவர்கள் தங்குவார்கள்.

இவர்களில் ராம்ஜெத் மலானி மூத்த சட்டத்தரணியாவார். இந்திய

பக் 27

## படையினருக்கு களங்கம் ஏற்படுத்தும் சதிமுயற்சியே கிறீஸ் பூத வதந்திகளாம்

### முறைப்பாடு ஏதுமில்லை என்கிறார் பொலிஸ் அதிகாரி

கொழும்பு, ஒக. 30

''படைத்தரப்புக்குக் களங்கம் ஏற்படுத்த முயற்சிக்கும் சதிகாரர்களே கிறீஸ் பூத வதந்தியைப் பரப்பி வருகின்றனர். மர்ம மனிதன் தொடர்பாக யாழ்ப்பாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு இதுவரை எந்தவொரு முறைப்பாடும் கிடைக்கவில்லை. அப்படி இங்கு எதுவும் நடைபெறவுமில்லை.'' -இப்படிக் கூறுகின்றார் வடபகுதிக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி சில்வா.

பக் 28

## 3 இலங்கையர் சென்னையில் மாயமாகினர்

இந்தியாவுக்கு புனித யாத்திரை சென்ற பௌத்த யாத்திரிகர்கள் மூவர் சென்னையில் காணாமற் போயுள்ளனர் என்று

பக் 28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்

தொடர்புகளுக்கு

ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் வானம் மேகமூட்டத்துடன் காணப்படக்கூடிய சாத்தியம்

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு பி.ரி.ஐ. பக்ரீரியா விசிறும் நடவடிக்கை

## பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக.30

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து அதனைக் கட்டுப்படுத்தும் ஒரு முயற்சியாக 'பி.ரி.ஐ.' பக்ரீரியாக்களை விசிறும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

இந்த வருடத்தில் யாழ். மாவட்டத்தில் இதுவரை 140 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். ஒகஸ்ட் மாதத்தில் மட்டும் 19 டெங்கு நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் இறந்துள்ளார்.

2009ஆம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதி மற்றும் 2010 ஆம் ஆண்டின் ஆரம்ப காலங்களில் டெங்கு நோயினால் 23 பேர் வரையில் மரணமானார்கள். இதே போன்றே தற்போதும் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துச் செல்கின்றது.

அரியாலை மாணவன் இறந்தமைக்கு அவர்களின் அக்கறையின்மையே காரணம். அந்த மாணவனது வீட்டில் இறப்பதற்கு சில வாரங்களுக்கு முன்னர் வெளிநாட்டவர்கள் வந்து தங்கிச் சென்றுள்ளனர். அவர்களுக்கு ஏற்பட்டிருந்த டெங்கு நோய் மாணவனுக்கு பரவியதாலும், மாணவன் பரீட்சை காரணமாக காய்ச்சலை கவனிக்காமல் விட்டதுமே அவரின் இறப்புக்குக் காரணமாகும்.

தற்போது விடுமுறைக் காலமென்பதால் தென்பகுதியிலிருந்து பலர் யாழ்ப்பாணம் வந்து செல்கின்றனர். அதே போன்று எமது மக்களும் தென்பகுதிக்குக் குறிப்பாகக் கொழும்புக்குச் சென்று வருகின்றனர். தற்போது கொழும்பு மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் பல மடங்கு அதிகரித்துள்ளது. எனவே, இவ்வாறு சென்று வருபவர்களால் இது பெருமளவில் பரவலடைகின்றது.

இதைத் தடுப்பதற்காக புகையூட்டல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இதனால் இந்தப் பகுதிகளில் கூடுதலான அளவில் டெங்கு தடுப்புத் திட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம்.

தனியார் கல்வி நிலையங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தமது சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறு அறிவுறுத்தல் வழங்கியிருக்கின்றோம். அதேபோன்று பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதும் ஆரம்பமாகி 3 நாள்களுக்குப் பாடசாலை சூழலை சுத்தப்படுத்துமாறு அறிவுறுத்தியிருக்கின்றோம் - என்றார்.

(த-15)

# பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் சந்நிதியானுக்கு நேற்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஒக. 30

வரலாற்றுப் பெருமை வாய்ந்த தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தின் பெருந்திருவிழா நேற்று திங்கட்கிழமை ஆயிரக் கணக்கான பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

காலை 9.20 மணியளவில் ஆரம்பமான கொடியேற்றத் திருவிழாவில் யாழ். மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் வெளி மாவட்டங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

நேற்றைய கொடியேற்றத் திருவிழாவில் கலந்துகொண்ட பக்தர்கள் தமது நேர்த்திக் கடன்களைக் செலுத்துவதில் அதிக ஆர்வத்துடன் ஈடுபட்டதைக் காணக் கூடியதாகக் இருந்தது.

ஆலயச் சூழலில் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டனர். பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் சுகாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா இடம்பெறும். தினமும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் நடவடிக்கைகள் சந்நிதியான் ஆச்சிரம மண்டபம் உட்பட அனைத்து மடங்களிலும் இடம்பெறவுள்ளன.

திருட்டுச் சம்பவங்களைத் தடுக்க பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு கோரும் அறிவுறுத்தல்களை ஒலி பெருக்கிகள் மூலம் ஆலய நிர்வாகத்தினரும், பொலிஸாரும் மேற்கொண்டு வருகின்றனர்.

(த-319-236)

# திருத்தப் பணி காரணமாக மின்தடை

யாழ்ப்பாணம், ஒக. 30

வீதி அகலிப்பு மற்றும் உயர முத்த மின் விநியோக நடவடிக்கைகள் இடம்பெறுவதால் குறிப்பிடப்படும் இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 5 மணிவரை தென்மராட்சிப் பிரதேசத்தில் மின்சாரம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை புதன்கிழமை மற்றும் எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன் மணல் பிரதேசம், யாழ். பட்டிணப்பகுதி பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

முதலாம் திகதி வியாழக்கிழமையும் எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-313)

# 15 சதவீத நிலப்பரப்பில் அபாயகரமான மிதிவெடிகள்: 85 சதவீதமான பகுதியில் பணிகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், ஒக. 30

யாழ். மாவட்டத்தில் தற்போது மிதிவெடி அகற்றுவதற்கு ஒப்படைக்கப்பட்ட பிரதேசங்களில் 84.39 வீதமான பகுதிகளில் மிதிவெடி அகற்றும் செயற்பாடுகள் நிறைவடைந்துள்ளதாக பிராந்திய மிதிவெடி அகற்றல் செயற்பாட்டு நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

மிகுதியாக உள்ள 15 சதவீத நிலப்பரப்பில் அபாயகரமான மிதிவெடிகள் உள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

அந்த வட்டாரங்கள் இது தொடர்பாக மேலும் தெரிவித்தமை வருமாறு:

மிதிவெடி அகற்றும் நடவடிக்கைகள் பாதிக்கப்படும் அபாயத்தை எதிர்நோக்கியிருந்தாலும் நாம் தற்போதுள்ள வளங்களைப் பயன்படுத்தி அதனைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றோம்.

நாகர்கோயில் பிரதேசத்தில் 3.2 சதுரகிலோ மீற்றர் பரப்பில் கண்ணிவெடி அகற்றுவதற்கு 3 வருடங்களாவது செல்லும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசம் மிகமிக ஆபத்தான பிரதேசமாக உள்ளது.

மிகப்பெறுமதியான கண்ணிவெடி அகற்றும் வாகனம் முதல் முறையாக அந்தப் பிரதேசத்தில் தாங்கி எதிர்ப்பு மிதிவெடியில் சிக்கி முற்றாகச் சேதமடைந்துள்ளது.

அத்துடன் எஞ்சியுள்ள 15 வீத நிலப்பரப்பு மிக ஆபத்தான பகுதிகள்தான். எனவே இந்தப் பிரதேசங்களில் மிதிவெடி அகற்றல் செயற்பாடு மிகக் கடினமானதாக இருக்கும். தற்போது காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளிலும் மிதி வெடி அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இராணுவத்தினர் கேட்டுள்ளனர். அதிலும் தமது இராணுவ முகாம்களைச் சுற்றி புதைக்கப்பட்டு உள்ள பிரதேசங்களிலும் கண்ணி வெடிகளை அகற்றுமாறு அவர்கள் கோரியுள்ளனர்.

இதனால் கண்ணிவெடி அகற்றும் பிரதேச எல்லை மேலும் விரிவடையலாம் என்று தெரிவித்தன.

(த-15)

COLOMBO STOCK EXCHANGE

பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம்.
389/1, ஆஸ்பத்திரி வீதி. 2221455.
ஆவணி 29, 2011

பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6,837.35↓
மிலங்கா(MPI) 6,222.94↑

உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 2,598.27Mn
பங்குகளின் அளவு(No.) 83.51Mn
வியாபாரம்(No.) 21,833

விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
எச்.வி.எ பூட் 44.80
சி.எவ்.ஐ 308.80
அஸ்கோட் கோல்டிங் 122.30
செரன்டிப் ஹொட்டல(X) 22.10
சிற்றி கவுசிங் 26.20

குறைவு(Top 5 losers) - விலை Rs.
றேடியன்ற் ஜெம்ஸ் 84.80
சி.டி.ஐ.சி 361.00
அபான்ஸ் பைனான்ஸ் 73.50
கொக்கோ லங்கா(X) 50.50
றிவரினா ஹொட்டல் 106.20

மேலதிக தகவல்கள்- www.cse.lk

# நிகழ்வுகள்

### கையளிப்பு நிகழ்வு இன்று

யாழ்ப்பாணத்தில் ஆஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட மீன் சந்தை மற்றும் உபகரண களஞ்சிய மண்டபத்தினை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள மாதகல் கிராமிய மீனவர் அமைப்புக்கு ஐ.ஓ.எம். நிறுவனம் இன்று கையளிக்கின்றது. (எ)

### பிரஜைகள் பாதுகாப்புக் கூட்டம்

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரஜைகள் பாதுகாப்புக் குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சங்கரத்தை வை.எம்.எச். ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர், வலி. மேற்கு பிரதேச செயலர், பிரதேச சபைச் செயலாளர் மற்றும் பிரதேச கிராம அலுவலர்கள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-313)

### சமூகமளிக்கவும்

யாழ். இணுவில் மத்திய கல்லூரியில் கல்விகற்கும் 2011 க.பொ.த. சாதாரண தர மாணவர்களையும் மற்றும் ஆசிரியர்களையும் இன்று காலை 8.30 மணிக்கு பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு யாழ். இணுவில் மத்திய கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (எ-323)

### நாரந்தனை மனோன்மணி கொடியேற்றம் 2ம் திகதி

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத் திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை மு.ப. 10.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

ஆலய கொடியேற்றத்தைத் தொடர்ந்து எதிர்வரும் 10ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் 11ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 12ஆம் திகதி சமுத்திர தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

(எ-323)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களை தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்தனராம் கூட்டமைப்பினர்

## சொல்பவர் முன்னாள் கருணா

களுவாஞ்சிக்குடி, ஓக. 30
மர்ம மனிதன் பீதியை பெரிதுபடுத்தி மக்களைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்தவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களே என்று மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி, கொக்கட்டிச்சோலை, வெல்லாவெளி பொலிஸ் பிரிவுகளின் சிவில் பாதுகாப்புக்குழுக்கள், அரசியல்வாதிகள் கலந்துகொண்ட விசேட கூட்டம் களுவாஞ்சிக்குடியில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

மர்ம மனிதன் பீதி மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டமை அனைவரும் அறிந்ததே. ஆனால் இந்த மர்ம மனிதனை நேரடியாகக் கண்டவர்கள் எவரும் இல்லை. எல்லாம் வதந்தியாகும். இவற்றையெல்லாம் பெரிதுபடுத்தி மக்களைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்தவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்பதை அடித்துக் கூறுகின்றேன்.

தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்தவர்களால் இன்று கைது செய்யப்பட்டவர்களை வெளியில் எடுக்க முடிந்ததா? தூண்டிவிடப்பட்டமையினால் அப்பாவிகள் பொலிஸ் நிலையத்தை உடைத்து சட்டத்தைக் கையிலெடுத்துக் கொண்டதால் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் குடும்பங்களைக் கவனிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களால் முடியுமா? ஜனாதிபதியால் அவசர காலச்சட்டம் நீக்கப்பட்டுள்ளது. தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் என்னகூற முடியும்- எனவும் கேள்வி எழுப்பினார்.

(உ-10)

# இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை 7,400 ஆகக் குறைவடைந்தது

கொழும்பு, ஓக. 30
உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை 7,422 ஆக குறைவடைந்து உள்ளதாக ஜனாதிபதி செயலகத்தின் கொள்கை ஆய்வு மற்றும் தகவல் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மெனிக்பாம் நிவாரண கிராமத்தில் உள்ள ஆனந்த குமாரசுவாமி முகாமில் 4,103 பேரும் மற்றும் கதிர்காமர் முகாமில் 3,319 பேரும் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

துரித மீள்குடியமர்த்துகைத் திட்டத்தின் கீழ் அரசு இதுவரை 2 இலட்சத்து 73ஆயிரத்து 88 பேரை மீளக்குடியமர்த்தி அல்லது முகாம்களில் இருந்து விடுவித்து உள்ளதாக அறிக்கை கூறுகின்றது.

வவுனியா, மன்னார், திருகோணமலை மற்றும் ஏனைய மாவட்டங்களில் 2 இலட்சத்து 35ஆயிரத்து 517 பேர் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

மனிதாபிமானக் காரணங்களுக்காக 27,720 பேர் அரசினால் விடுவிக்கப்பட்டுள்ளனர். வயது முதிர்ந்தோர், பல்கலைக்கழக மாணவர்கள் கைக்குழந்தைகளுடனான குடும்பம், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு கொண்டோர்களே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் 9,851 பேர் அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில், சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் நண்பர்கள், உறவினர்கள் மற்றும் வாடகை வீடுகளில் தங்கி இருக்கும் இடம்பெயர்ந்தவர்களின் விவரங்கள் அடக்கப்படவில்லை. கடந்த ஏப்ரல் மாத நிலவரப்படி இவர்களையும் சேர்த்து ஒரு லட்சம் பேர் இடம்பெயர்ந்து வாழ்கின்றனர் என்று ஐ.நா. அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

(உ-10)

# பிரதியமைச்சர் முரளிதரன் கூற்று அரசியல் நாகரீகமற்றது: கூட்டமைப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்களிடையே மர்ம மனிதன் என்ற பீதியை மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களே தூண்டி விட்டதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கூறியிருப்பது அரசியலில் அவரது முதிர்ச்சியற்ற தன்மையை காட்டுவதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் களுவாஞ்சிக்குடி, கொக்கட்டிச்சோலை மற்றும் வெல்லாவெளி ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்கான சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டத்தில் வெளியிட்ட இந்தக் கருத்து தொடர்பாக தமது அதிருப்தியையும், கண்டனத்தையும் வெளியிட்டுள்ள மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா, பா.அரியநேத்திரன் மற்றும் சீ.யோகேஸ்வரன் ஆகியோர் கூட்டாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மர்ம மனிதன் பீதி காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் கடந்த இருவாரங்களுக்கு மேலாக அச்சமும் பீதியும் நிறைந்த சூழலில் வாழ்ந்தார்கள் என்பதை அந்த நேரத்தல் மக்களோடு மக்களாக இருந்திருந்தால் இந்தக் கருத்துக் கூறிய பிரதியமைச்சர் உண்மை நிலையை அறிந்திருப்பார்.

அப்படியானால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான மக்கள் மர்ம மனிதனின் அச்சுறுத்தல்கள் இருப்பதாக கூறியிருப்பது பொய்யா? மர்ம மனிதனை நேரடியாக கண்டு அவர்களை துரத்திச் செல்லும் போது அண்மையில் உள்ள பொலிஸ் நிலையங்களிலும், இராணுவ முகாம்களிலும் புகுந்திருப்பதாக மண்டூர், புதூர், களுவன்கேணி, திகிலிவெட்டை, தாண்டியடி, குறிஞ்சாமுனை, ஈச்சந்தீவு, ஊறணி, கொக்கட்டிச்சோலை, துறைநீலாவணை, செங்கலடி, காத்தான்குடி உட்பட இன்னும் பல கிராமங்களைச் சேர்ந்த தமிழ் பேசும் மக்கள் கூறுவது வதந்தியா? அல்லது பிரதியமைச்சர் கூறுவது வதந்தியா? என்பதை மக்கள் நன்கு உணர்வார்கள்.

மர்ம மனிதன் விவகாரத்தை மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களே தூண்டினார்கள் என்றால், அம்பாறை, திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் மட்டுமல்ல. புத்தளம் ஆகிய மாவட்டங்களில் தூண்டியது யார்? இதற்கு பிரதியமைச்சர் அழிக்கும் பதில் என்ன. எனவும் அந்த நீண்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-10)

# புகைத்தல், மது அருந்துதல் தொடர்பில் காட்சிகளை ஒளிபரப்ப புதிய விதிகள்

தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளில் மதுபானம், புகையிலை என்பவற்றை நுகரும் காட்சிகள் மீதான தடை எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து நீக்கப்படும் எனவும் அதற்குப் பதிலாக புதிய விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும் புகையிலை மற்றும் மதுசார தேசிய அதிகார சபை அறிவித்துள்ளது.


இச்சபையின் சட்டம் நடைமுறைக்கு வந்த கடந்த 12.01.2006 ஆம் திகதிக்கு முன் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகள் நிபந்தனையுடன் ஒளிபரப்ப அனுமதிக்கப்படும். இதன்படி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஆரம்பிப்பதற்கு முன், 20 செக்கன்களுக்கு புகையிலை மற்றும் மதுசார பாவனையால் ஏற்படும் ஆபத்துப் பற்றி தேசிய அதிகார சபை வழங்கும் செய்தியை எவ்வித இடையூறும், விமர்சனங்களுமின்றி ஒளிபரப்ப வேண்டும் என அதிகாரசபையின் தலைவர் கார்லோ பொன்சேகா தெரிவித்தார்.

புதிய விதிகளின்படி ஒளிபரப்பாகும் நிகழ்ச்சியில் புகைத்தல், மதுபானம் அருந்தும் காட்சிகள் வரும்போது அதிகாரசபை வழங்கும் செய்தியும் சேர்ந்து வரவேண்டும். இந்தச் செய்தி திரையின் 1/5 பகுதிக்குக் குறையாமல் இருக்கவேண்டும்.

புகையிலை, மதுசார அதிகார சபை வழங்கும் எச்சரிக்கை செய்திகளில், புகைத்தல், மதுபானம் அருந்துவதால் வரக்கூடிய நோய்களை காட்டும் படங்களும் இடம்பெறும் என அவர் கூறினார்.

(உ-10)

## உதயன் கேலிச் சித்திரம்




# புதிய கட்சி ஆரம்பிக்கிறார் சந்திரிகா

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் அரசின் முக்கிய அமைச்சர்கள் சிலர் சேர்ந்து புதிய கட்சி ஒன்றை அமைப்பதற்கான இரகசியப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர் எனத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீண்டும் அரசியலில் ஈடுபட நாட்டம் கொண்டுள்ளமை காரணமாக அவர் புதிய கட்சியின் ஊடாகத் தனது அரசியல் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளார்.

இது தொடர்பில் அண்மையில் அவரது தலைமையில் முக்கிய கூட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இந்தக் கூட்டத்தில் முக்கிய அமைச்சர்கள் மற்றும் அரசுக்கு நெருக்கமானவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் பங்கேற்று புதிய கட்சி தொடர்பில் ஆராய்ந்தனர் என மேலும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது

கொழும்பு, ஒக.30

கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது என்று இந்திய வெளி விவகார அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா அறிவித்துள்ளார்.

கச்சதீவு இலங்கையின் எல்லைப் பகுதிக்குள் இருப்பதாக இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.


1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் கடல் எல்லை குறித்து இரு நாடுகளுக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கச்சதீவை இலங்கையிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென காலத்துக்குக் காலம் தமிழக அரசியல் வாதிகள் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கச்சதீவில் வலைகளை உலர வைப்பதற்கும், புனித அந்தோனியார் திருவிழாவில் கலந்து கொள்வதற்கும் இந்திய மீனவர்களுக்கு உரிமை இருப்பதாக அமைச்சர் கிருஸ்ணா குறிப்பிட்டுள்ளார்.



எனினும், குறித்த தீவை அண்டிய பகுதிகளில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)



நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர்களுக்கான முதலாவது கூட்டம் நல்லூர் பிரதேச சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. பிரதேச சபைத் தலைவர் ப.வசந்த குமார் உரையாற்றுகிறார் சபையின் உபதலைவர் திருமதி கோமதி ரவீந்திரதாஸ், செயலாளர் மே.சாந்தசீலன் மற்றும் உறுப்பினர்கள் உள்ளனர். (ம-7)

# கச்சதீவில் மீன்பிடிக்க தமிழக மீனவர்களுக்கு அனுமதியில்லை

## இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் இப்படிக் கூறுகிறார்

கொழும்பு, ஒக.30

கச்சதீவில் மீன் பிடிக்க தமிழக மீனவர்களை அனுமதிக்க மாட்டோம் என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் பிரசாத் கரியவாசம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பெங்களூரில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியா - இலங்கை ஒப்பந்தப்படி இலங்கைக்கு வழங்கப்பட்ட கச்சதீவில் தமிழக மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்க மாட்டோம்.

ஒப்பந்தத்தில் கூறியுள்ளபடி அங்குள்ள புனித அந்தோனியார் ஆலயத்துக்கு பொதுமக்கள் ஆண்டுக்கு ஒரு முறை சென்று வழிபாடு நடத்த மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.

கடந்த ஆண்டுவரை தமிழக மீனவர்கள் இலங்கை இராணுவத்தினரால் சந்தேகத்தின் பேரில் தாக்கப்பட்டது உண்மைதான்.

ஆனால் கடந்த 6 மாதமாக ஒருசில சம்பவங்களைத் தவிர வேறு எந்தவித அசம்பாவிதமும் கடல் பகுதியில் நடக்கவில்லை.

சீனா எங்கள் நட்பு நாடு. இந்தியா எங்கள் உறவு நாடு. இந்தியாவின் உறவுடன் வர்த்தகத்தை மேம்படுத்த விரும்புகிறோம். இதனால்தான் பெங்களூரில் இலங்கை கௌரவப் பிரதிநிதி அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கௌரவப் பிரதிநிதியாக கே. சுதாகர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்தியா எமது வர்த்தகத்துக்கும், சுற்றுலாவுக்கும் பெரிதும் உதவுகிறது.

எனவே இந்தியாவுடனான வர்த்தக உறவை மேலும் பெருக்க விரும்புகிறோம் - என்றார் அவர். (ம)

# முன்னாள் பிரதம நீதியரசர் நடத்தை பற்றி விசாரிக்க குழு

1999 ஆம் ஆண்டுக்கு முன்னரும் 2009 ஆம் ஆண்டு அப்போதைய பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவின் பரிபாலனத்தின் கீழும் நீதித்துறையில் இடம் பெற்றுள்ள சம்பவங்கள் குறித்தும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கடந்த வெள்ளிக் கிழமை ஜனாதிபதியை சந்தித்த ஓய்வு பெற்ற நீதிபதிகள் 14 பேர் கோரிக்கையொன்றை முன் வைத்துள்ளனர்.

முன்னாள் பிரதம நீதியரசர் சில்வாவின் செல்வாக்கின் காரணமாக 42 நீதிவான்கள் கட்டாயமாக ஓய்வு பெறும்படி செய்யப்பட்டனர் என அவர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர். அவ்வாறு ஓய்வு பெற்றவர்களில் சிலர் தற்கொலை செய்ய நேர்ந்ததென்றும் இன்னும் சிலர் மனநோயாளர்கள் ஆனார்கள் என்றும் ஜனாதிபதியிடம் அவர்கள் தெரிவித்துள்ளனர். ஓய்வு பெற்ற இந்த நீதிவான்களின் முறைப்பாடுகளைக் கருத்தில் கொண்டு நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமித்து விசாரணைகளை நடத்துவதற்கு அரசு தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகின்றது. சரத் என் சில்வாவின் செயற்பாடுகள் குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்க அரசு திட்டமிட்டு வருவதாகக் கூறப்படும் அதேவேளை நாம் ஓய்வுபெற்று இரண்டு வருடங்கள் ஆகிவிட்டதாகவும், தமது பணிகளைப் பாராட்டி ஜனாதிபதியே சான்றிதழ் வழங்கியிருப்பதாகவும் சரத் என் சில்வா கருத்து வெளியிட்டிருக்கிறார். (ப)

# அரச நிறுவனங்களுக்குப் புதிய தலைவர்களை நியமிக்கத் திட்டம்

கொழும்பு, ஒக.30

அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் அதிகார சபைகள், வங்கிகள் போன்ற அரச நிறுவனங்களுக்கு புதிய தலைவர்களை நியமிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய முப்பது வரையான அரச நிறுவனங்களின் தலைமைப் பகுதிகளில் மாற்றங்கள் ஏற்படக் கூடும் எனவும் உயர் மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசால் மேற்கொள்ளப்படும் இந்த மறு சீரமைப்பில் செயற்றிறன் அற்ற மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள நிறுவனங்களின் சில தலைவர்கள் பதவி நீங்கம் செய்யப்படவுள்ளனர் எனவும் தெரிய வருகின்றது.

அரசின் சிரேஷ்ட அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின் பின்னர் ஜனாதிபதியால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களை மறு சீரமைக்கும் குறிக்கோள் மீதே இந்தப் புதிய தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தொடர்சியாகப் பல ஆண்டுகள் ஒரே நிறுவனத்தில் தலைமைப் பகுதியை வகித்துள்ள கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் வங்கிகள் பலவற்றின் தலைவர்களை இந்த மறுசீரமைப்பு நடவடிக்கையின் கீழ் வேறு நிறுவனங்களுக்கு நியமிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த மாற்றத்தின் போது அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அமைச்சுக்களின் உத்தரவுகளுக்கு முரணாகச் செயற்பட்டுள்ள சில தலைவர்கள் நிச்சயமாக பதவி நீக்கம் செய்யப்படுவர் எனவும் உயர் மட்டத் தகவல் தெரிவிக்கின்றது. (ம-22)

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை முருகேசு (கனகு)



எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும் மிருசு விலை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப் பிள்ளை முருகேசு (கனகு) 29.08.2011நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- நாக முத்து தம்பதியரின் அன்புப் புதல்வனும் நல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை வாரித்தம்பி, இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சத்தியநாதன் மற்றும் சிவநாதன் (இத்தாலி), ஜெகநாதன் (இத்தாலி), தவநாதன் , மஞ்சுளா (இத்தாலி), காலஞ்சென்ற சியாமளா மற்றும் சர்மிளா ஆகியோரின் பாசமிகு தந்தையும் உதயராணி, பகவதி, விஜயலட்சுமி (இத்தாலி), இந்திரலேகா, நந்தகுமார் (இத்தாலி), தெய்வேந்திரம் ஆகியோரின் அன்பு மாமனும் ஸ்ரீகாந், நீலவண்ணன், ஜனனி, டிலானி, டிசாந்தன், கஜீபா, கௌசிகா, மார்வின், ஜீவிதா, ஆர்த்திகா, அபிசயா, றஷ்னா, றிஷாப், இலட்சிகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2011) முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மிருசுவில் வடக்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
மிருசுவில் தெற்கு, கொட்டிகை அம்மன் கோயிலடி, மிருசுவில்

தகவல்:
தவநாதன் (மகன்).

### மாரிமுத்து சிதம்பரம் (சீர்காழி)



தொண்டமானாறைப் பிறப்பிடமாகவும், காங்கேசன் துறையை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து சிதம்பரம் நேற்று (29.08.2011) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

39, கம்பஸ் லேன்,
திருநெல்வேலி.

தகவல்:
கஜன்(பேரன்).

**Alliançe Francaise de Jaffna Cordially invites you For a literary Meeting in English:**


**PUBLIC READING & DISCUSSION**
**With**
**SHYAM SELVADURAI**
**Author of Funny Boy**

*Venue: Alliance Francaise de Jaffna.
*Day: Tuesday 30 th August.
*Time: 3 to 5 pm.

*All are Welcome.*

af ALLIANCE FRANÇAISE DE JAFFNA
61, Kachcheri- Nallur Road, Jaffna, Phone:0212228093,
E-mail: alliance jaffna@yahoo.com

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 22.02.1939
உதிர்வு 28.08.2003

(திதி:30/08/2011)

அமரர்
**தம்பிஐயா குணபாலசிங்கம்**

அன்பான உள்ளம் அமைந்த பெம்மானே
ஆண்டுகள் எட்டு ஆனதுவோ நீர்சென்று
பண்பான உம்வாக்கும் பணிசெய்யும் உம்மனமும்
பார்தனில் யார்க்குவரும் குணமணிக் குன்றமே

நாகேஸ்வரம், அளவெட்டிமேற்கு, அளவெட்டி.

குடும்பத்தினர்.

**வீடு விற்பனைக்குண்டு**

287A, நெல்லண்டை வீதி(மணியகாரர் சந்தி), தும்பளை, பருத்தித்துறையில் சகல வசதிகளுடனான சுற்றுமதிலுடன் கூடிய வீட்டுடன் 9 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொ.பே- 0777302714

**காணி விற்பனைக்கு**

கசூரினாபீச் காரைநகரில் கடற்கரை அருகில் தென்னங்கன்றுகளுடன் ஐம்பது (50) நிலப்பரப்பு காணி விற்பனைக்குண்டு. (உறுதி இல.11780-/04/03/2010)

தொடர்பு [illegible]

**றிச்கேக் ஓடர்கள்செய்து கொடுக்கப்படும்**
**விலை:-ரூபா-30**
தொடர்புகளுக்கு 0755629308

**கார்சாரதி தேவை**

பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றி இறக்குவதற்கு 50 வயதுக்கு மேற்பட்ட கார்சாரதி தேவை

தொடர்பு: 0212228437

**தாதி தேவை**

எமது வைத்திய நிலையத்துக்கு தாதிதேவை. பயிலுனர்களும் விண்ணப்பிக்கலாம்

தொடர்பு: 0776284687

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## முதுகுவலி போய் திருகு வலியா?

இன்று செவ்வாய்க்கிழமை, 2011 ஒகஸ்ட் மாதம் முப்பதாம் திகதி நள்ளிரவுடன், 2005 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் பன்னிரண்டாம் திகதி நடைமுறைக்கு வந்த அவசரகாலச் சட்டம் காலாவதியாகிறது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வியாழக்கிழமை (ஒகஸ்ட் 25 ஆம் திகதி) நாடாளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரையில் அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படமாட்டாது என்று அறிவித்திருக்கிறார்.

எனினும், சில சட்ட விவகாரங்களுக்காக அவர் இம்மாதம் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் அடுத்த மாதம் (செப்ரெம்பர்) பதினான்காம் திகதி வரை அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பிரகடனத்தை வெளியிடக்கூடும் என்று பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவசரகாலச் சட்டத்தை நீக்குவதற்கு முன்னர் மேற்கொண்டிருக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படாமையால் சில சட்டச் சிக்கல்கள் உருவாகும் என்று இப்போது கண்டறியப்பட்டுள்ளதாம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டமை தானாக நீங்கிவிடும், புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் பணிமனை இயங்க முடியாது, தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப் புலிப் போராளிகளை விடுவிக்க நேரி டும், நாடு முழுவதிலும் இயங்கி வரும் உயர்பாதுகாப்பு வலயங்கள் செல்லுபடியற்றவை ஆகிவிடும் என்பன எதிர்கொள்ள நேரிடும் சட்டச்சிக்கல்களில் பிரதானமானவையாகும்.

அதனைக் கருத்தில்கொண்டு, மேற்கூறிய பாதகமான நிலைமை ஏற்படாமல் தடுப்பதற்கு ஒரே வழி, குறிப்பிட்ட சட்ட விதிகள் செல்லுபடியாகக் கூடியதாக அவசரகாலச் சட்டத்தை இரண்டு வார காலத்துக்கென மட்டும் புதிதாக நாடாளுமன்றில் நிறைவேற்றும் யோசனை அரசுக்கு உண்டெனக் கருதப்பட்டது.

எனினும், அவ்வாறு செய்வதன் மூலம் சட்டச் சிக்கல்களும், பாதகமான விளைவுகளும் உருவாகலாம் என்பதனால், இப்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்துடன், அவசர காலச் சட்டத்தை நீக்கியதால் அரசுக்கு உண்டாகக் கூடிய பாதிப்புக்களை - இழப்புக்களைத் தவிர்ப்பதற்கு அவசர காலச் சட்ட விதிகளை சேர்த்துக்கொள்வது என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்திருப்பதாக அறியப்படுகிறது.

அவசரகாலச் சட்டத்தை மட்டும் நீக்கியதால், தமிழ் மக்களுக்குத் தொடர்ந்து விளைவிக்கப்பட்டு வரும் வாழ்வியல் பாதகங்கள் ஒழிந்துவிடமாட்டா. பயங்கரவாதத் தடைச் சட்டமும் நீக்கப்பட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் நிலைப்பாடு என்று ஏற்கனவே இப்பத்தியில் எடுத்தியம்பி இருந்தோம்.

ஆனால் அரசு, தமிழர்களைக் கடித்துக் குதறுவதற்கான நாசகாரமான சட்ட ஏற்பாடுகளை கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டத்துடன் சேர்த்துக்கொள்வது மேலும் இடி விழுந்த நிலையை உருவாக்கப் போகிறது. தமிழ் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளைக் கூடத்துடைத்து எறிந்துவிடும் அரசின் போக்கு, அதன் பிந்திய முடிவுடன் ஆரம்பமாகிவிடும் என்று எதிர்பார்க்கலாம்.

ஜனநாயகத்தை - மக்கள் ஆட்சியை - மலினப்படுத்த அர சாங்கம் துணிந்துவிட்டது என்பதற்கு அதன் இந்த ஏற்பாடு கட்டியம் கூறுகிறது. அவசர காலச் சட்டமானது ஜனநாயக ஆட்சிக்கு ஊறு விளைவித்து வருகிறது என்பதாலேயே அதனை அகற்ற வேண்டும் என்று உலக நாடுகள் அழுத்தம் கொடுத்து வந்தன.

அவற்றுக்குச் செவிசாய்ப்பதாகக் காட்டிக்கொண்டு, பயங்கரவாதச் சட்டத்தில் அவசரகாலச் சட்டத்தின் கொடூரமான பகுதிகளைச் சேர்த்துக்கொள்வது என்பது, ஜனநாயக விழுமியங்களை இலங்கை அரசு ஊறுபடுத்தும் செயலன்றி வேறில்லை. இது வெளிநாடுகளின் - சர்வதேசத்தின் - காதில் பூச்சுற்றும் தந்திரமுமாகும்..

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் எவர் ஒருவரையும் காரணம் தெரிவிக்காமலே கைது செய்து தடுத்து வைப்பது போன்ற பல கர்ணகொடூர அதிகாரங்கள் பொலிஸாருக்கும் படையினருக்கும் வழங்கப்பட்டுள்ளன. அவர்கள் மேற்கொள்ளும் கைதுகள் குறித்து நீதிமன்றங்கள் கண்காணிக்கவோ கட்டுப்படுத்தவோ வகை செய்யும் அதிகாரம் மிகவும் அற்பமானது.

இவ்வாறு பல கூரிய பற்கள் கொண்ட பயங்காரவாதச் சட் டத்துக்குள் அவரகாலச் சட்டவிதிகளை இறுக்கிச் செருகுவதால், நல்லாட்சி என்றால் என்ன விலை என்ற கேள்வி மேலெழும் நிலையை உருவாக்கும்.

சட்டத்தைப் போர்த்திக்கொண்டு மனித உரிமைகளைக் காலின் கீழ்ப் போட்டு மிதித்து அராஜகத்தைக் கட்டவிழ்த்து விடுவதற்கு வழிகோலவும் அரசின் புதிய மாற்று ஏற்பாடு வகை செய்யும். ஜனநாயகத்தின் பெயரில் எதனையும் சீரறுக்கலாம் என்ற நிலையை உருவாக்கும் என்பதிலும் கேள்விக்கு இடமில்லை.

ஒரு முகப்படுத்திச் சொல்வதானால், அவசரகாலச் சட்டத்தில் உள்ள கூரிய விதிகளை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் உள் வாங்கிக்கொள்ளும் அரசின் உத்தேசம் (அதுவே முடிவு என்றும் சொல்லலாம்) மக்களுக்குப் பெரும் பயங்கரமான பாதிப்புக்களையே கொண்டு வரும்.

இதனால் தமிழர்களை மட்டுமன்றி ஆட்சியிலுள்ளோருக்கு மாற்றுக்கருத்துடைய சிங்கள மக்களையும் தலைவர்களையும் சட்டத்தின் பெயரால் அடக்கி ஒடுக்கும் அட்டூழியங்களும் [illegible] வரும்.

மொத்தத்தில் முதுகுவலி போய்த் திருகு வலி வந்த கதையாகிவிட்டது!

## யாழ்ப்பாணம் - சங்குப்பிட்டி வீதி மோசமாகச் சேதமடைந்த நிலையில்

### வாகனச் சாரதிகள், பொதுமக்கள் சிரமம்

கொழும்புத்துறை, ஒக. 30

யாழ்ப்பாணம் - கேரதீவு - சங்குப்பிட்டி வீதியாகிய ஏ-35 வீதி படுமோசமாகச் சேதமடைந்து போக்குவரத்து மேற்கொள்ள முடியாதுள்ளதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

தச்சன்தோப்பு முதல் கேரதீவுவரை இந்த வீதியில் பெரிய குழிகள் ஏற்பட்டு வீதி கற்குவியல்களும், மண்குவியல்களுமாக காட்சி தருகின்றது.

அதேபோன்று சங்குப்பிட்டியில் இருந்து உயிலங்குளம் சந்திவரை மிகவும் கரடுமுரடான பாதையாக காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து மன்னாருக்குச் செல்லும் குறுகிய மார்க்கமான இந்தப் பாதையால் இலங்கை போக்குவரத்துச்சபை பஸ்கள் மற்றும் தனியார் வாகனங்களின் சேவை நடைபெறுகின்றது.

பாதை சீரின்மையால் வாகன சாரதிகளும் பொதுமக்களும் பல சிரமங்களையும், உடல் உபாதைகளையும் எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

கேரதீவு - சங்குப்பிட்டிக்கு மேம்பாலம் அமைக்கப்பட்டுள்ள போதிலும் இந்த வீதிகள் சீரின்மையால் பெரும்பாலான மக்கள் இந்தப் பாதையூடான போக்குவரத்தை தவிர்த்து வருகின்றனர்.

அடுத்து வரும் மழைகாலத்தில் இந்த வீதியால் பயணிக்க முடியாத நிலை தோன்றும். எனவே விரைவாக இந்த வீதியை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-135)

## தீவுப்பகுதி வைத்தியசாலைகளுக்கு விரைவில் நான்கு வைத்தியர்கள்

யாழ்ப்பாணம், ஒக.30

தீவுப் பகுதியில் கடமையாற்ற நான்கு வைத்திய அதிகாரிகள் விரைவில் நியமிக்கப்படவுள்ளதாகவும், நான்கு அம்புலன்ஸ் வாகனங்கள் வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படும் எனவும் ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வேலணை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வைத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வேலணை அரசினர் வைத்தியசாலைக்கு தாதியர்களையும் ஏனைய பணியாளர்களையும் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தாதியர்கள் நியமிக்கப்படுவார்கள் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், வட மாகாண பிரதம செயலாளர் ஆ. சிவசுவாமி மற்றும் அமைச்சுக்களின் செயலாளர், திணைக்களத் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர். (த-7)

## மாதாந்த உதவிப்பணம் 1000 ரூபா

கொழும்பு, ஒக.30

அரசால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் மாதாந்த உதவிப்பணம் (பிச்சைச் சம்பளம்) அடுத்த மாதம் முதல் ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இவ்வாறு மாதாந்த உதவிப்பணம் வழங்குவதற்கு ஆண்டொன்றுக்கு 299 கோடி 4 இலட்சத்து 45 ஆயிரத்து 600 ரூபா செலவாவதாகவும், 2 இலட்சத்து 63 ஆயிரத்து 301 பேர் நாடு முழுவதும் இந்த மாதாந்த உதவிப் பணத்தைப் பெற்றுவருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இவர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் 100 ரூபாவுக்கும் 300 ரூபாவுக்கும் இடைப்பட்ட தொகை போதுமானது அல்ல என்பதால் அத்தொகையை 500 ரூபாவாகவும் 1000 ரூபாவாகவும் உயர்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது எனவும் அவர் கூறினார்.

அமைச்சரவையின் தீர்மானத்துக்கு அமைய, 2012 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் இந்த அதிகரிப்பை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் தெரிவித்தார். (த-22)

## அல்வாயில் முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், ஒக.30

அல்வாய் வடக்கு இளங்கோ சனசமூக நிலையத்தின் 79 ஆவது ஆண்டு நிறைவு தினவிழாவை முன்னிட்டு நடத்தப்படும் முத்தமிழ் விழா எதிர்வரும் 3 ஆம், 4 ஆம், திகதிகளில் மாலை 5.15 மணிக்கு அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையின் ஜெயபாலன் அரங்கில் நடைபெறவுள்ளது.

முதல் நாள் நிகழ்வு இளங்கோ சன சமூக நிலையத்தின் தலைவர் ந. நிர்மலன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினரான பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஐ. வரதீஸ்வரன் கலந்துகொள்வார்.

அத்துடன் கொழும்பு சிருஷ்டி ஆடற் கழகம் நடத்தும் தாய்மொழி வாழ்த்து நடனம், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ஆர்.கே. கருணாகரன் நிகழ்த்தும் கர்நாடக இசை விருந்து, அகில இலங்கை அமுதசுரபி கலாமன்றம் வழங்கும் '' குற்றவாளிக் கூண்டில் யாழ்ப்பாணப் பெற்றோர்கள்'' எனும் தலைப்பிலான வழக்காடு மன்றம், வசந்த கான சபா வழங்கும் அரிச்சந்திர மயான காண்டம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்வில் ''இன்றைய சமூகத்துக்கு பெரிதும் வழிகாட்டும் இலக் கியம் கம்பரின் இராமாயணமா? வில்லியின் பாரதமா? இளங்கோவின் சிலப்பதிகாரமா?'' எனும் தலைப்பிலான சிறப்புப்பட்டிமன்றம், ''இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே'' எனும் தலைப்பிலான கவியரங்கம், வட அல்வை நக்கீரன் சனசமூக நிலையம் வழங்கும் ''நட்பு'' சிறுவர் நாடகம், அல்வாய் மனோகரா சனசமூக நிலையம் வழங்கும் ''பூதத்தம்பி'' இசை நாடகம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இளங்கோ சனசமூக நிலையத்தின் போஷகர் வே. சிவயோகன் தலைமையில் நடைபெறும் இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக சட்டத்துறை தலைவர் கலாநிதி த.கலாமணி ஆகியோர் கலந்துகொள்வர். (த-313)

## அரச அதிபர் பிலிப்பைன்ஸுக்கு

யாழ்ப்பாணம், ஒக. 30

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நடைபெறும் உலக உணவுத் திட்டத்தின் கருத்தரங்கில் பங்கு கொள்வதற்காக இலங்கையிலிருந்து 4 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இன்று செவ்வாய்க்கிழமை முதல் அடுத்த மாதம் 8ஆம் திகதிவரை இந்தக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது. இதில் ஒரேயொரு தமிழ் அதிகாரியாக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொள்ளவுள்ளார். மேலும் உலக உணவுத் திட்டத்தின் பணிப்பாளர் மற்றும் அதன் திட்டப் பணிப்பாளர், பொலநறுவை அரச அதிபர் ஆகியோரும் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (த-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றினால் படகு கவிழ்ந்து மீனவர் மரணம்

## மற்றொருவர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஓக.30

கடற்றொழிலுக்குச் சென்று கொண்டிருந்தபோது கடும் காற்றுக் காரணமாக மீன்பிடிப் படகு கவிழ்ந்தமையால் அதில் பயணித்த இருவரில் ஒருவர் கடலில் மரணமானார். மற்றையவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டு தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவம் மண்டைதீவில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

சம்பவத்தில் மண்டைதீவு 5ஆம் வட்டாரத்தைச்சேர்ந்த நிக்ஷன் என அழைக்கப்படும் யாக்கோப்பு நிலானியஸ் (வயது-32) என்பவரே கடலில் மரணமானார். இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத் தைச் சேர்ந்த அன்ரனி லியூட்ஸ் (வயது-49) என்பவரே சிகிச்சைக்கென யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

வழமைபோன்று நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இயந்திரம் இணைக்கப்பட்ட 'பிளாஸ்ரிக், படகில்' பிரஸ்தாப இருவரும் தொழிலுக்குச் சென்றுள்ளனர். மாலை 6 மணியாகியும் கடலுக்குச் சென்றவர்கள் கரை திரும்பவில்லை. இதனால் நேற்றைய தினம் காலை 5 மணிக்கு தொழிலாளர்கள் அந்த இருவரையும் தேடிக் கடலுக்குச் சென்றனர்.

இந்த நிலையில் கரையிலிருந்து சுமார் 20 கிலோமீற்றர் தொலைவில் அவ்விருவரும் மீன்பிடி வலை மிதப்பில் பிடித்த வண்ணம் உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்தனர். தேடுதலில் ஈடுபட்டவர்களும் அந்த இடத்தைச் சென்ற டைந்தனர். எனினும் அவர்களில் நிலானியஸ் என்பவர் வலை மிதப்பைப் பிடித்தவாறே உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டார். மற்றையவர் உயிருடன் மீட்கப்பட்டார்.

உடனடியாக உயிருடன் மீட்கப்பட்டவரையும் இறந்தவரது சடலத்தையும் மீனவர்கள் கரைக்குக் கொண்டு வந்தனர் மீனவர்களால் உயிருடன்மீட்கப்பட்டவர் கடற்படையினரின் அம்புலன்ஸ் மூலமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் உடனடியாக சேர்க்கப்பட்டார்.

இது தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டார். ஊர்காவற்றுறை நீதிவான் வைத்தியசாலையில் மரண விசாரணை மேற்கொண்டனர். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(த-4-15)

# தேசிய சமாதானப் பேரவையின் அமைதிப் பிரார்த்தனை இன்று

## யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில்

கொழும்புத்துறை, ஓக.30

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் அமைதிப் பிரார்த்தனை ஒன்று யாழ்ப்பாணத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கையின் அனைத்து மாவட்டங்களில் இருந்து வரும் சர்வமதத் தலைவர்கள் இந்த அமைதிப்பிரார்த்தனையில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இன்று செவ்வாய்க்கிழமை யாழ். றிம்மர் மண்டபத்தில் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் இந்தப் பிரார்த்தனை நண்பகல் 12 மணி வரை நடைபெறவுள்ளது.

நாட்டில் வன்முறைகள் நீங்கி அனைத்து இன மக்களும் சமாதான சகோதரத்துவத்துடன் வாழும் சூழலை உருவாக்க வேண்டும் என்ற கருப்பொருளின் கீழ் இந்த அமைதிப் பிரார்த்தனை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்த அமைதிப் பிரார்த்தனையில் இந்து, கிறிஸ்தவ பௌத்த இஸ்லாமிய மதத் தலைவர்கள் மற்றும் தேசிய சமாதானப் பேரவையின் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

அமைதியை விரும்பும் அனைவரையும் இந்தப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு தேசிய சமாதானப் பேரவையின் யாழ். மாவட்ட சர்வமதப் பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

(த-135)

# நயினாதீவு- குறிகாட்டுவான் இடையே நேற்று 50 படகுகள் சேவையில்

யாழ்ப்பாணம், ஓக.30

நயினாதீவுக்கும் குறிகாட்டுவான் துறைமுகத்துக்கும் இடையில் நேற்று மேலதிக படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

நயினாதீவுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளில் எண்ணிக்கை அதிகரித்ததை அடுத்தே நேற்று மேலதிகமான படகுகள் சேவையில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை முதல் 50 படகுகள் வரை இந்தச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

அத்துடன் சுற்றுலாப் பணிகள் அதிகரிப்பால் நயினாதீவு, குறிகாட்டுவான் இறங்கு துறைகளில் நேற்று பெரும் நெருக்கடி நிலவியது.

இதனையடுத்து பயணிகள் விரைவாகச் சென்று வருவதற்கான ஏற்பாடுகள் அங்கு மேற்கொள்ளப்பட்டன.

படகுகளில் ஏற்றப்படும் அனைத்துப் பயணிகளுக்கும் பாதுகாப்பு அங்கிகள் அணிவிக்கப்பட்ட பின்னரே படகுகள் புறப்பட்டுச் செல்கின்றன.

(த-26)

# ஜெய்ப்பூர் செயற்கை அவயம் பொருத்தும் சிகிச்சை முகாம்

## நாளை மறுதினம் கோண்டாவிலில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 30

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் வடமாகாண சுகாதார அமைச்சின் ஒருங்கிணைப்புடன் செயற்கை அவயங் களைப் பொருத்தும் விசேட சிகிச்சை முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

இந்தச்சிகிச்சை முகாம் நாளை மறுதினம் முதலாம் திகதி வியாழக்கிழமை முதல் ஒருமாத காலத்துக்கு கோண்டாவில் பிரதேச வைத்தியசாலையில் இடம்பெற உள்ளது. வடமாகாணத்தைச் சேர்ந்த செயற்கை அவயங்கள் பொருத்தப்பட வேண்டியவர்கள் இந்தச் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்தச் சேவையைப் பெற விரும்புபவர்களின் பட்டியல் ஏற்கனவே வடமாகாணத்தைச் சேர்ந்த ஐந்து மாவட்டங்களிலும் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே தமது பெயர்களைப் பதிவு செய்தவர்களுக்கு அந்தந்த பிரதேசத்துக்குரிய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மூலம் இந்தச் சேவையைப் பெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

இந்தச் சேவை தேவைப்படுபவர்கள் இதுவரை தமது பெயர்களைப் பதிவு செய்யத் தவறியிருப்பின் உடனடியாக உங்கள் அருகில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம் எனப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

(த)

## மக்கள் சேவைக்கு...



தயார்: சாவகச்சேரி நகரசபையின் ஆளும்கட்சியான தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நகரசபை உறுப்பினர்கள் அண்மையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர். இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி மங்கல விளக்கேற்றுகிறார். புதிதாகத் தெரிவான உறுப்பினர்கள் அருகில் உள்ளனர்.

(த-4)

# சூதாட்டத்தில் ஈடுபட்டவர்கள் எச்சரிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஓக.30

நல்லூர் ஆலயச் சுற்றாடலில் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த சிலரைக் கையும் மெய்யுமாகப் பிடித்த பொலிஸார் அவர்களை எச்சரிக்கை செய்து விடுவித்தனர்.

தேர்த்திருவிழா அன்று நல்லூரில் பருத்தித்துறை வீதியில் சிலர் பணம் வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதனை வேடிக்கை பார்ப்பதற்காக அந்தப் பகுதியில் பெரும்கூட்டம் கூடியது. இதுதொடர்பாக அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

உடனடியாக அந்தப் பகுதிக்குச் சென்ற பொலிஸார் அந்தக் கூட்டத்தைக் கலைத்ததுடன் சூதாட்டத்தில் ஈடுபட்டவர்களைப் பிடித்து எச்சரிக்கை செய்த பின்னர் விடுவித்தனர். (த26)

# வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் 81 காணிப் பிணக்குகளுக்குத் தீர்வு

யாழ்ப்பாணம், ஓக.30

வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் பொது மக்களால் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் காணி தொடர்பான 81 பிணக்குகள் இரு தரப்பினரின் சம்மதத்துடனும் சமாதானமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் காணிப் பிணக்குகள் அதிகரித்துள்ள நிலையில் காணிப்பிணக்குகளை இரு பகுதியினரின் சம்மதத்துடன் பொலிஸார் தீர்த்து வைத்துள்ளமை அந்தப் பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

குறிப்பாக எல்லைப் பிணக்குகள், குத்தகைப் பிணக்குகள் மற்றும் உரிமைப் பிரச்சினைகள் ஏனப் பல்வேறு பிரச்சினைகளும் பொலிஸாரின் முயற்சியின் மூலம் தீர்வை எட்டியுள்ளன.

வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வழிகாட்டலின்கீழ் பொதுமக்களுடைய ஒத்துழைப்புடனும் இத்தகைய பிணக்குகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-66)

# வேலணை மக்களுக்கு குடி தண்ணீர் உடன் நடவடிக்கை எடுக்கப் பணிப்பு

## உழவு இயந்திரங்களும் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஓக.30

வேலணைப் பிரதேசத்தின் குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பணித்துள்ளார்.

வேலணைப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை வேலணைப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் வேலணைப் பிரதேசத்திலுள்ள மக்கள் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் உள்ள சிரமங்களை எடுத்துக் கூறியதைத் தொடர்ந்து பிரதேச சபைக்கு நான்கு உழவு இயந்திரங்கள் வழங்கப்படும் என ஆளுநர் தெரிவித்தார்.

உடனடியாக அந்த உழவு இயந்திரங்களைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநர் கூறினார். பிரதேச சபையின் குடிதண்ணீர் சேவைக்கென இரண்டு உழவு இயந்திரங்களும், கழிவு அகற்ற இரண்டு உழவு இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

(த-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகர சபையாக நல்லூர் பிரதேசத்தை தரம் உயர்த்தக் கோரும் தீர்மானம்

## நேற்று முதலாவது கூட்டத்தில் நிறைவேறியது

யாழ்ப்பாணம், ஒக.30

தற்போது அமைச்சு மட்டத்தில் அங்கீகாரத்துக்காகக் காத்திருக்கும் நல்லூர் பிரதேச சபையை நகர சபையாகத் தரம் உயர்த்தும் தீர்மானத்தை உடன் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என நல்லூர் பிரதேச சபையின் முதலாவது கூட்டத்தில் சபையின் உப தலைவர் திருமதி கோமதி ரவிதாஸ் சமர்ப்பித்த பிரேரணை சபை உறுப்பினர்களின் ஒருமித்த ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

நல்லூர் பிரதேச சபையின் முதலாவது மாதாந்தக் கூட்டம் நேற்றுச் சபை மண்டபத்தில் பிரதேச சபைத்தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த பத்து உறுப்பினர்களும் நேற்றைய கூட்டத்துக்குச் சமுகமளித்திருந்தனர். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் இருவரும் இந்தக் கூட்டத்துக்குச் சமுகமளிக்கவில்லை.

முன்னதாகத் தலைவர் வசந்தகுமார் நல்லூர்ப் பிரதேசத்தின் அபிவிருத்திக்காகவும் வளர்ச்சிக்காகவும் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படுவோம் எனவும் சகல உறுப்பினர்களும் வேறுபாடுகளின்றி ஒற்றுமையாகச் செயற்பட்டு மக்களின் தேவைகளை நிறைவேற்றுவோம் எனவும் கேட்டுக்கொண்டார்.

சபையின் நிதிக்குழு, சமூக அபிவிருத்தி, வீடமைப்பு, சூழல் பாதுகாப்பு, தொழில்நுட்பக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் தெரிவின்போது கூட்டத்துக்கு இன்று சமுகமளிக்காத உறுப்பினர்களின் அனுமதிகளைப் பெற்று குழுக்களின் உறுப்பினர்களாக அவர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார்.

உறுப்பினர்கள் இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டனர்.

நேற்றைய கூட்டத்தில் பொது மக்களின் பங்களிப்புடன் வீதிகளுக்குத் தேவையான மின் விளக்குகளைப் பொருத்தவும், நகரின் அபிவிருத்தி தொடர்பாகத் திணைக்களத் தலைவர்களைக் கொண்ட கூட்டங்களை நடத்தவும், திருநெல்வேலி பொதுச்சந்தை குறித்து முழுமையான ஆய்வுகளை மேற்கொண்டு அதனை வர்த்தகர்களுக்கும் பொது மக்களுக்கும் உகந்தமுறையில் அமைப்பது குறித்தும்,

யாழ்ப்பாணத்தில் மலசல கூடம் இல்லாத வீடுகள் உள்ள பகுதியாகக் கோண்டாவில் பகுதியில் சில இடங்கள் உள்ளமையால் அதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் சபை ஏகமனதாகத் தீர்மானங்களை நிறைவேற்றியது.

திருநெல்வேலிச் சந்தைக் கட்டடம் தொடர்பாகப் பிரதேச சபையின் செயலாளர் மே.சாந்தசீலன் உறுப்பினர்களுக்குத் தெளிவான விளக்கம் அளித்தார்.

(த-7)

# கரவெட்டி பிரதேச சபையின் முதலாவது கூட்டம்


யாழ்ப்பாணம், ஒக.30

கரவெட்டிப் பிரதேச சபையின் முதலாவது கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு சபைத்தலைவர் பொன்னையா விஜயகேசு தலைமையில் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதேச உறுப்பினர்களும் கலந்துகொள்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பான பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாகவும் முக்கிய திட்டங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(த-236-319)

## மக்கள் சேவைக்கு...



தொழிநுட்பம்: யாழ் .கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியால் 'செய்மதி உபகரணம் இயக்கும் பயிற்சி நெறி' நடத்தப்பட்டபோது உதவி அலுவலர் எஸ்.மிரேஸ் பயிற்சி பெறுபவர்களுக்கு விளக்கமளிக்கிறார். (த-160)

# கல்லுண்டாய் வெளியில் தினமும் குவியும் கழிவுகள்

## வீதியில் பயணிப்போர் அசௌகரியம்

சங்கானை, ஒக.30

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லுண்டாய் வெளிப் பிரதேசங்களில் யாழ். மாநகர சபையால் சேகரிக்கப்படும் குப்பை கூழங்கள், கழிவுகள் பெருந்தொகையாக ஒவ்வொரு நாளும் கொட்டப்பட்டு வருகின்றன.

இதனால் அந்தப் பாதையை உபயோகிப்போர், அயலிலுள்ள குடும்பங்கள், நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் பெரும் சிரமங்களையும், சுகாதாரச் சீர்கேட்டையும் எதிர்கொண்டுள்ளனர்.

அத்துடன் அந்தப் பகுதியில் சூழல் மாசடைந்து வருவதாகவும், அதிகளவிலான பொலித்தீன், உணவு எச்சங்கள் போன்றவற்றினால் துர்நாற்றம் வீசுவதால் அந்த வீதியால் பயணிப்போர் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மக்கள் வட்டுக்கோட்டைப் பொலிஸ் அதிகாரி, யாழ்.மாநகர சபை முதல்வர் உட்பட, வலி. மேற்கு பிரதேச செயலர் ஆகியோருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளனர்.

இவ்வாறு குப்பை கூழங்கள் கொட்டப்படுவதைத் தடுத்து உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் கேட்டுள்ளனர்.

(த)

# வலி.கிழக்குப் பிரதேசத்தில் விழிப்புக்குழுக்களுக்கு புத்துயிர்

யாழ்ப்பாணம், ஒக.30

அண்மைக்காலமாக குடாநாட்டின் பல இடங்களிலும் இனந்தெரியாதோரின் நடமாட்டம் காரணமாக அச்சநிலை ஏற்பட்டுள்ளதை அடுத்து வலி.கிழக்குப் பிரதேசத்தில் விழிப்புக் குழுக்களுக்குப் புத்துயிர் அளிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வலி.கிழக்குப் பகுதிகளான இருபாலை, கோப்பாய், நீர்வேலி, அச்சுவேலிப் பகுதிகளில் விழிப்புக் குழுக்களை மீளமைத்துச் செயற்படுத்தும் நடவடிக்கைகளில் அந்தப் பகுதி இளைஞர்கள், முதியவர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இரவில் மக்களுக்கு ஓர் அச்சமற்ற நிம்மதியான சூழலை ஏற்படுத்துவதற்காக இந்த விழிப்புக்குழுக்களை அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த விழிப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டன.

மேற்குறித்த சம்பவங்கள் கட்டுப்பாட்டில் வந்ததை அடுத்து விழிப்புக் குழுக்களின் செயற்பாடுகள் கைவிடப்பட்டிருந்தன.

எனினும் தற்போது இனந்தொரியாதோரின் நடமாட்டம் குறித்து அச்சநிலை தோன்றியுள்ளதையடுத்து இந்த விழிப்புக்குழுக்களை மீளமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை -

கோப்பாயில் கடந்த வெள்ளி இரவு வீடொன்றில் ஜன்னல் ஊடாக இனந்தெரியாத ஒருவர் எட்டிப் பார்த்ததால் வீட்டில் இருந்தவர்கள் கூச்சலிட்டுள்ளனர்.

இதனையடுத்து அந்தப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது. உடனடியாக அங்கு வந்த அந்தப் பகுதி இளைஞர்கள் தேடுதல் மேற்கொண்ட போதும் எவரும் பிடிபடவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

(த-26)

# சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தீவுப் பகுதியில்

கொழும்புத்துறை, ஒக.30

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஒன்றைத் தீவுப் பகுதியில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வேலணைப் பிரதேச சபையின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போது இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த வருடம் ஜனவரியில் இந்தப் பணிமனைக்கான கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

வேலணை, நெடுந்தீவுப் பகுதிகளையும் ஊர்காவற்றுறை, காரைநகர்ப் பகுதிகளையும் உள்ளடக்கிய இரு பிரிவுகளாக இந்தச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அமைக்கப்படும் என அந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஒன்றை அமைக்குமாறு விடுவிக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே ஆளுநரால் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

(த-7)

# யாழ்.பல்கலை விரிவுரைகள் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக.30

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடத்தின் கல்வி ஆண்டு 2009/2010 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் அரையாண்டு கலைமாணி, நுண்கலைமாணி, சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய அனைத்துப் பாடங்களுக்குமான விரிவுரைகள் நேற்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கலைப் பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானகுமரன் அறிவித் துள்ளார்.

மாணவர்களை விரிவுரைகளுக்குச் சமூகமளிக்குமாறு பேராசிரியர் தெரிவித்தார்.

(த-313)

# எழிலூரில் குடிதண்ணீர் தட்டுப்பாடு நீண்ட தூரம் அலையும் மக்கள்

கொழும்புத்துறை, ஒக.30

கொழும்புத்துறை எழிலூர்ப் பகுதியில் குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். தினமும் குடிதண்ணீருக்காக நீண்ட தூரம் அலைந்து செல்ல வேண்டியுள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

இந்தப் பகுதிக்கு யாழ். மாநகர சபையின் குழாய் நீர் விநியோக மூலம் அமைக்கப்பட்டுள்ள பொது நீர்க்கம்பம் ஒன்றின் மூலம் மட்டுப்படுத்தப்பட்ட நேரத்தில் குடிதண்ணீர் வழங்கப்படுகின்றது எனினும் அந்த நேரத்துக்குள் அனைவரும் தண்ணீரைப் பெறமுடியாமல் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது இந்தப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்து தமது இருப்பிடங்களைச் சீர் செய்து வருவதால் இந்தப் பகுதியில் சன நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதேவேளை இந்தப் பகுதியில் முன்னர் நீர்த்தாங்கிகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்த நீர்விநியோகம் நிறுத்தப்பட்டுத் தாங்கிகள் சில வேறிடங்களுக்கு மாற்றப்பட்டமையால் இந்தப் பகுதி மக்கள் போதிய குடிதண்ணீர் இன்றிச் சிரமப்படுகின்றனர்.

இந்தப் பகுதியில் நிலக்கீழ் நீர் உவர்த்தன்மையுடையதால் தாம் குடிதண்ணீரைச் சீரான முறையில் பெற்றுக்கொள்ள ஆவன செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(த-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ராஜீவ் கொலைக் குற்றவாளிகளின்

# மரணதண்டனைக்கு மன்னிப்புச் சபையின் ஜேர்மன் கிளை வன்மையாகக் கண்டனம்

மரண தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் வழக்கு செயல்முறையை மனிதாபிதமான முறையில் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அவர்களுக்கு விதிக்கப்பட்ட கொடுமையான மரணதண்டனையை சர்வதேச மன்னிப்புச் சபையின் ஜேர்மன் கிளையின் மரண தண்டனைக்கு எதிரான ஒருங்கிணைப்புக் குழு வன்மையாகக் கண்டித்துள்ளது.

மேற்படி மக்கள் அவை விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:


காஞ்சிபுரம் மாவட்டச் செயலகம் முன்பு செங்கொடி என்ற வீரத் தங்கை, மரண தண்டனை விதிக்கப்பட்ட முருகன், பேறறிவாளன், சாந்தன் ஆகியோரை தூக்கிலிருந்து விடுவிக்க வலியுறுத்தி, தீக்குளித்து தற்கொலை செய்துகொண்டார். தனது உயிரை அர்ப்பணித்து மூவரின் தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வலியுறுத்தி, முதல்வர் ஜெயலலிதாவுக்கு கடிதமும் எழுதியுள்ளார். சத்தியத்துக்காக சாகத் துணிந்து விட்டால் ஒரு சாதாரண மனிதப் பிறவியும் சரித்திரத்தைப் படைக்க முடியும் .

முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோரின் விடையங்களில் கடந்த வாரங்களாக முற்கூட்டியே ஜேர்மனிய மனித உரிமை அமைப்புகளிடம் பரப்புரையை மேற்கொண்டிருக்கிறோம்.

அந்த வகையில் சர்வதேச மன்னிப்புச் சபை ஜேர்மன் கிளையின் மரண தண்டனைக்கு எதிரான ஒருங்கிணைப்புக் குழு இந்த விடயத்தை தனது கவனத்தில் எடுத்துள்ளதோடு. ஜேர்மனிய மக்களை இவர்களின் மரண தண்டைனைக்கு எதிராக இந்தியத் தூதரகத்துக்கு மனு கையளிக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளது .

எமது இலக்கை எட்டும் வரை வீரமங்கை செங்கொடி விட்டுச் சென்ற போராட்டத்தைத் தொடர்வோம் என்ற உறுதியோடு தமிழக மக்களின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் ஜேர்மனியில் தொடர்ந்து கவனயீர்ப்பு நிகழ்வுகளை நடத்தவுள்ளது.

இவ்வாறு அந்த கண்டன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



பொன்னாலை வரதராஜ பெருமாள் ஆலய தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றது. சுவாமி தேரில் எழுந்தருளி வீதியுலா வருகின்றார்.

## இந்தியாவில் காணாமல் போன இலங்கை யாத்திரிகர்களில் ஒருவர் மீட்பு

இந்தியாவில் காணாமல் போன இலங்கை யாத்திரிகர்களில் ஒருவர் மீட்கப்பட்டுள்ளார். சில தினங்களுக்கு முன்னர் இந்தியாவுக்கு யாத்திரை மேற்கொண்ட மூன்று இலங்கையர்கள் காணாமல் போயிருந்தனர். காணாமல் போனவர்களைத் தேடும் நடவடிக்கைகள் ராஜதந்திர ரீதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஐந்து நாள்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்த ஆனந்த குணரட்ன என்ற நபரே மீட்கப்பட்டுள்ளதாக இந்தியாவுக்கான இலங்கை தூதரகம் அறிவித்துள்ளது.

குறித்த நபர் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.காணாமல் போன ஏனைய இருவரைத் தேடும் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

## மதுபான எச்சரிக்கை அறிவுறுத்தல் கையளிப்பு

தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் மது மற்றும் புகைத்தல் காட்சிகளின் போது ஒளிபரப்பப்பட வேண்டிய எச்சரிக்கை அறிவுறுத்தல்களை தேசிய புகைத்தல் மற்றும் மதுபான அதிகாரசபை நேற்று ஊடகங்களிடம் கையளித்துள்ளது.

இது தொடர் பில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த ஊடகவியலாளர் மாநாட்டின் போதே இவை ஊடகங்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் குறித்த எச்சரிக்கை அறிவுறுத்தல்கள் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

## கொரியாவுக்கான வேலைவாய்ப்பு; காத்திருப்போர் பட்டியலில் 1800 பேர்

கொரியாவில் வேலை வாய்ப்புக் கோரி காத்திருப்போர் பட்டியலில் தற்போது கொரிய மொழி பரீட்சையில் சித்தியடைந்த 1800 பேரின் பெயர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மேற்படி வேலை வாய்ப்புப் பணியகம் கூறுகையில்:

இந்த வருடம் இதுவரை 4471 பேர் வேலைவாய்ப்புக்காக கொரியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அடுத்த மாத காலப்பகுதியில் 500 பேரை அனுப்பி வைக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதேவேளை 2004 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் 21000 பேர் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக கொரியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

**21 ஆவது பிறந்த தினமும் 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்**

| இனிது இருக்க வந்தது | | நினைத்திருக்க சென்றது |
|---|---|---|
| 30 ★ 08 ★ 1990 |  | 15 ★ 08 ★ 2008 |

**செல்வி கணேசலிங்கம் பத்மஜா**
(யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை பழைய மாணவி)

ஆனதோ ஆண்டுகள் மூன்று
பிள்ளை என்ற உறவு மடிந்து
அன்று முதல் அலைகின்றோம்
அன்பெனும் ஆலயம்தேடி
ஆறிவிட்ட தடியம்மா உன் உடலின் ஈரம்
ஆறவில்லையம்மா எம் இதயத்தின் பாரம்
ஆண்டவன் அடி சேரும் வரை அழிவின்றி
நடந்திடுவோம்.
*ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி!!!*

புத்தூர் கிழக்கு, புத்தூர். (C/3345 குடும்பத்தினர்.

**29ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 06 . 11 . 1948 |  | 02 . 08 . 2011 |

**அமரர் இராமையா சின்னராசா**
**(கெங்காதரன்)**

மாதமொன்று ஆனாலும் ஆறவில்லை
உங்கள் பிரிவின் துயர்
அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (30.08.2011)செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி யளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அதில் கலந்து கொண்டு ஆத்ம சாந்திப்பிரார்த் தனையிலும் அதனை தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குமாரலிங்கம் வீதி,
இணுவில் கிழக்கு. (7378) சி.விஜிதன் (மகன்)

**எங்கள் அன்புத் தெய்வத்திற்கு ஆண்டுகள் ஐந்து**

**அமரர்**
**சுப்பிரமணியம் பசுபதி**
தோற்றம் மறைவு
29-11-1935 26-08-2006
திதி : திருதியை
(30-08-2011)



ஆண்டுகள் ஐந்து ஆனதுவோ - அப்பா நீங்கள்
அருகிருந்தெம் மனம் நிறைந்த ஆதரவுக் கேங்குகின்றோம்
வழிகாட்டும் ஒளியாய் - எம் விழியாய் உம் வார்த்தைகள் எம்மோடு என்றும்
வாழும்... வணங்குகின்றோம்

பசுபதியம், கலாசாலை வீதி,
திருநெல்வேலி. குடும்பத்தினர்

**நான்காம் ஆண்டு நினைவஞ்சலி**

**செல்வன் கண்ணதாசன் ரஜந்தன் (அன்பு)**
(தரம் 4 மாணவன் - யா/ இணுவில் இந்துக்கல்லூரி)

அன்னை மடியில் 25.06.1998
பரமன் அடியில் 30.08.2007



ஆறவில்லை மகனே எங்கள் இதயம்
ஆற்றொணா துயர் நிறைந்த காயம்
இனி நாம்வாழ்ந்திடும் காலமெல்லாம்
மறப்போமா உம் அன்பு முகத்தை
ஆசையாய் உம்மை வளர்த்து அறிவூட்டி
வளமுடன் வாழ வைக்க நினைத்த வேளை
நித்தமும் உம் நினைவினை
எம்முடன் விட்டு விட்டு
நீர் மட்டும் இடை வழியில்
எம்மை விட்டுச் சென்றாயோ
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

இணுவில் கிழக்கு,
இணுவில். குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினால் விசாரணைகளைச் செய்ய முடியாது

## முன்னாள் பிரதம நீதியரசர் கூறுகிறார்

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினால் எனது நடவடிக் கைகளை விசாரணை செய்ய முடியாது என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித் ததாவது:

நல்லாட்சி மற்றும் ஊழல் ஒழிப்பு தொடர்பில் கண்டி திருத்துவக் கல்லூரியில் நடை பெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டபோதே இவ் வாறு தெரிவித்துள்ளார்.

பதவியிலிருந்து ஓய்வுபெற்று இரண்டு ஆண்டுகள் கடந்துள் ளன. தமது சேவையை பாராட்டி ஜனாதிபதி எழுத்து மூலமான கடிதத்தை வழங்கியுள்ளார்.

பிரதம நீதியரசராக நாட் டுக்கு ஆற்றிய அளப்பரிய சேவையை பாராட்டுவதாகத் தெரிவித்து இந்தக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல், ஊழல் ஒழிப்பு மற்றும் நல்லாட்சி தொடர்பாகக் குரல் கொடுத்து வரும் காரணத்தினால் தம்மை குற்றவாளியாக்க சதித் திட்டங் கள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன. அதன் ஓர் அங்கமாக இந்த நாடாளுமன்றத் தெரிவுக் குழு விசாரணைகளை நோக்க வேண்டியுள்ளது.

பிரதம நீதியரசராகக் கடமை யாற்றிய காலத்தில் சில நீதி வான்களுக்கு அநீதி இழைக்கப் பட்டதாக ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது. தமக்கு எதிராக விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதி நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்கத் தீர்மானித் துள்ளார் என்பதனைப் புரிந்து கொண்டுள்ளேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் னர் ஓய்வுபெற்றுக் கொண்டுள்ள தால் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினால் தம்மை விசாரணை செய்ய முடியாது. சாதாரண குடிமகனாகவே தான் கருத்துக் களை முன்வைத்து வருகின்றேன்.

தற்போது ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்கும் ஜனக பண்டார என்பவரினால் ஜனாதிபதி யிடம் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது.



இந்த நபர் பதில் நீதிவானாகக் கடமையாற்றியதாகவும் அந்தக் காலத்தில் அவருக்கு எதிராக பல்வேறு முறைப்பாடுகள் செய் யப்பட்டன. இதன் காரணமாக சுய விருப்பின் அடிப்படையில் ஜனக பண்டார பதவியை இராஜி னாமா செய்துள்ளார்.

இந்த நபருக்கு திறைசேரி யிலும் பின்னர் மத்திய கிழக்கு நாடொன்றில் தூதர் பதவியும் வழங்கப்பட்டது. ஜனக பண் டார தொடர்பில் ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவித்துள் ளேன். இந்த விடயங்கள் பற் றிய ஆதாரங்கள் உள்ளன- என் றார். (ச)

# விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட அரச அதிகாரிக்கு பதவி உயர்வு

## ஜனாதிபதி விசாரணை செயலணி தகவல்

கொழும்பு, ஓக. 30

நிதி மோசடியில் ஈடுபட் டார் என்ற சந்தேகத்தின் பேரில் ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள வட மேல் மாகாணத்தின் அரச உயரதிகாரிக்கு விசாரணை முடியும் முன்பே சொகுசு வசதி களுடன் பதவியுயர்வு வழங்கப் பட்டுள்ளதாக ஜனாதிபதியின் விசேட விசாரணை செயலணி ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளது.

ஜனாதிபதியின் விசாரணை செயலணி ஏற்கனவே மேற் கொண்ட விசாரணைகளின் பின் நிதிமோசடி சம்பந்தமாக இந்த அதிகாரியின்மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ததை யடுத்தே அவர் ஒழுக்காற்று விசா ரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

விசாரணை நடந்து கொண்டி ருக்கும்போதே வடமேல் மாகா ணத்தின் இரண்டு முக்கிய அரச நிறுவனங்களில் உயர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அதேசமயம் ஒழுக்காற்று விசாரணை நடந்து கொண்டிருக்கும்போதே அவர் இரண்டுமுறை வெளிநாட் டுக்கு சென்றுள்ளார்.

நிதிமோசடியில் ஈடுபட்ட இந்த அதிகாரிக்குப் பதவியுயர்வு வழங்கப்பட்டமையும் வெளி நாட்டு சுற்றுப் பயணங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டமையும் அரச நிறுவனங்களின் சட்ட திட் டங்களை மீறும் செயல் என்று ஜனா திபதி விசேட விசாரணை செய லணி தெரிவித்துள்ளது. (ச-5)

# புத்தளத்தில் அமைதியை ஏற்படுத்த பெரிய பள்ளிவாசல் வேண்டுகோள்

புத்தளம்,ஓக.30

புத்தளத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம் பெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் மீண்டும் அமைதியையும் சமாதா னத்தையும் ஏற்படுத்துவதற் காக அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படுமாறு பொதுமக்களி டம், புத்தளம் பெரிய பள்ளி வாசல் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

எந்தச் சந்தர்ப்பத்திலும் வதந் திகளை நம்பவோ, பரப்பவோ வேண்டாம். வீதியோரங்களில் கூடி நின்று கதைத்துக் கொண் டிருக்க வேண்டாம். அநாவசிய மாக வெளியில் நடமாடுவ தைத் தவிர்த்து வீட்டில் இருப் பதன் மூலம் மக்களின் பாது காப்பை உறுதிப்படுத்துங்கள்.

எதிர்வரும் நோன்புப் பெரு நாளை அமைதியான முறையில் கொண்டாடுவதற்கு எல்லா முயற் சிகளையும் பொறுப்புணர்வுடன் மேற்கொள்ள வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# மதுபானம் விற்பனை; இலங்கைப் பெண் கைது

குவைத்தில் மதுபானம் தயாரித்து விற்பனை செய்த குற்றச்சாட்டில் இலங்கையைச் சேர்ந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பெண்ணைத் தேடிக் கண்டுபிடித்துக் கைதுசெய்யு மாறு பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் அவர் கைதுசெய்யப்பட்டார்.

இந்தப் பெண்ணின் மதுபான விற்பனைக்கு உதவியளித்த தாகத் தெரிவிக்கப்படும் இரு வர் கைதுசெய்யப்பட்டு பொலி ஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட் டுள்ளனர். (ச)



முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பாதுகாப்புக்கு மத்தியில் தனது சகோதரனான கித்சிறி மஹிந்தலால் பொன்சேகா வின் மகள் பெனிக்கா சத்துராணியின் மரணச் சடங்கில் கலந்துகொண்டார்.

# பிரிட்டனில் இலங்கை மாணவர்கள் வேறு கல்லூரிகளில் கற்க வாய்ப்பு

பிரிட்டனில் திடீரென மூடப்பட்ட கல்லூரிகளினால் தவித்து வரும் இலங்கை மாணவர்களை வேறு கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ள பிரிட்டிஷ் அரசு உடன்பட்டுள்ளது. பிரிட்டன் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் இலங்கை தூதரக பிரதி நிதிகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் பின்பு இவ்வாறான உடன்பாடொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

முறைகேடுகள் காரண மாக பிரிட்டனில் 3 பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டதை அடுத்து 80 இலங்கை மாணவர்கள் அசௌகரியங் களுக்கு உள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. (ச)

# எதிர்க் கட்சிகள் கோரிக்கை விடுத்தால் தேசிய அரசை அமைக்கத் தீர்மானம்

## பிரதமர் தெரிவிப்பு

எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத் தால் தேசிய அரசை அமைப்பது குறித்து கவனம் செலுத்த முடியும் என்று பிர தமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

மூன்று தசாப்த காலமாக யுத்தம் இடம்பெற்று வந்த நாட்டில் நல்லி ணக்கத்தை ஏற்படுத்த தேசிய அரசு ஒன்று அவசியமானது என்று அவர் தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும், தேசிய அரசை அமைப்பது குறித்து அரசு இதுவரையில் எதிர்க்கட்சிகளுக்கு எவ்வித அழைப்பையும் விடுக்கவில்லை.

தேசியப் பிரச்சினைகள் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையில் பொது வான இணக்கப்பாடு எட்டப்பட வேண் டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

தேசிய அரசை உருவாக்குவதன் மூலம் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக் கும் இடையில் வலுவான பிணைப்பை ஏற்படுத்தும் என்று அவர் தெரிவித் துள்ளார்.



இதேவேளை, புலம்பெயர் தமி ழர்கள் இதுவரை யில் அரசுடன் பேச்சு நடத்துவது குறித்து எவ்வித கருத்துக்களையும் வெளியிட்டதில்லை என்று அவர் கூறியுள்ளார். புலம்பெயர் தமிழர்களுடன் அரசு பேச்சு நடத்தத் தயார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், நாடாளுமன்றத் தெரிவுக் குழு தொடர்பிலான கருத்துக்களை முன் வைத்தால் மட்டுமே புலம்பெயர் தமிழர் களுடன் அரசு பேச்சு நடத்தும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# சார்க் நாடுகளில் பொறியியலாளர்களது பணிகள் மட்டுப்படுத்தப்படக்கூடாது

## அமைச்சர் றிஸாத் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 30

அதி வேகமாக அபிவிருத்தி கண்டு வரும் சார்க் நாடுகளில் பொறியிய லாளர்களின் பொறுப்பும், பணியும் தமது நாட்டுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாக அல்லாமல் வலய நாடுகளினது அபிவிருத்திகளுக்கும் இன்றியமையாத தாக இருக்கவேண்டும் என்று கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் றிஸாத் பதியு தீன் தெரிவித்துள்ளார். சார்க் டிப்ளோமா பொறி யலாளர் ஒன்றியத்தின் 5ஆவது தொழில் நுட்ப மாநாடு கொழும்பில் இடம் பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

ஈராக் டிப்ளோமா பொறியியலாளர் கள் ஏனைய நாடுகளின் பொறியிய லாளர்களுடன் கலந்துரையாடல்களை நடத்துவது எமது பிராந்தியத்தின் அபிவி ருத்திக்கு இன்றியமையாததாகும். அதை நாட்டினது வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானதொன்றாகக் கருதுகின்றேன்.

இலங்கையானது கடந்த 3 தசாப்த காலமாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடாகும். வேறு நாடுகளைப் பார்க்கிலும் கட்டட மற்றும் புனரமைப்பு பணிகளுக்கு முன்னுரிமையளித்து செயற்பட வேண்டி யுள்ளது. நிலையான பொருளா தார அபிவி ருத்திக்கான அடித்தளத்துக்கு எமது பொறி யியலாளர்களின் பங்களிப்பு தேவைப் படுகின்றது- என்றார்.

# ஊழியர்களை நியமிக்க போட்டிப் பரீட்சை

கொழும்பு, ஓக. 30

அரச வங்கிகளில் ஊழியர்களை நியமனம் செய்வதற்கு அவர்களை விசேட போட்டிப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்த அரசு தீர்மானித்துள்ளதாக நிதி திட்ட மிடல் பிரதியமைச்சர் கீதாஞ்சன குணவர்தன கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன் றத்தில் தெரிவித்துள்ளார். இலங்கைவங்கி நிர்வாக சேவைகளுக்கு கடந்த வருடம் பரீட்சைகள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் ஆயிரம் பேர் சித்தி யடைந்துள்ளனர். அவர்களுள் 300 பேர் நேர்முகப் பரீட்சைகளின் பின் நியமனம் பெற்றுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். மாத்தறை மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன எழுப்பிய கேள்வியொன்றுக்கும் குருநாகல் மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிரி ஜயசேகர எழுப்பிய குறுக்குக் கேள்விக்கும் பதிலளித்தபோதே பிரதியமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ச-5)

# புத்தளத்தில் மீண்டும் பாதுகாப்பு

புத்தளத்தில் கடந்தவாரம் இடம்பெற்ற அசம்பாவித சம்பவத்தையடுத்து நகரில் மீண்டும் பொலிஸாரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் வாகனங்கள் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. புத்தளம் நகரில் இருந்து கொழும்பு வீதி ஊடாக செல்லும் வாகனங்கள் பொலிஸ் நிலையம் முன்பாக நிறுத் தப்பட்டு தலைக்கவசம், வாகன அனுமதிப் பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் என் பன உள்ளனவா என்று பொலிஸார் சோதனைக்கு உட்படுத்தி வருகின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த.தே.கூட்டமைப்பைச் சேர்ந்த பிரதேச சபைத் தலைவரால் துணுக்காய் பிரதேசத்தின் அபிவிருத்தி முன்னெடுக்கப்படும்

## துணுக்காயில் நாமல் ராஜபக்ஷ உரை

கிளிநொச்சி,ஓக.30

துணுக்காய்ப் பிரதேச சபைத் தலைவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தெரிவு செய்யப்பட்டிருப்பினும் அவர் மூலம் இந்தப் பகுதியின் அபிவிருத்தி முன்னெடுக்கப்படும். இவ்வாறு தெரிவித்திருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷ.

முல்லைத்தீவு துணுக்காய்ப் பிரதேசத்தில் என்றிப் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பிரதான பஸ் நிலையம், இதனோடு இணைந்த பொதுச் சந்தை என்பனவற்றைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் துணுக்காய்ப் பிரதேச சபையின் செயலாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பஸ் நிலையத்தின் பெயர்ப் பலகையை நாமல் திரை நீக்கம் செய்து வைத்துப் புதிய பஸ் நிலையத்தையும் அதனோடு இணைந்த பொதுச் சந்தையையும் திறந்து வைத்தார். வரவேற்புரையைத் துணுக்காய் பிரதேச சபைத் தலைவர் வீரகத்தி இராசரத்தினம் நிகழ்த்தினார்.

தொடர்ந்து இங்கு உரையாற்றிய நாமல் ராஜபக்ஷ இது உங்களுடைய பிரதேசம். உங்களுக்கான தலைவரை நீங்கள் தெரிவு செய்துள்ளீர்கள். அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவராக இருப்பினும் அவர் மூலம் இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும். பின் தங்கிய பிரதேசங்களின் அபிவிருத்தியை விரைவுபடுத்த வேண்டிய பெரிய பொறுப்பு எல்லோரது கைகளிலும் தங்கியுள்ளது. பழைய கசப்பான அனுபவங்களை மறந்து எல்லோரும் புதிய பாதையில் பயணிப்போம்.

கிறீஸ் பூதம் என்பது வெறும் கட்டுக் கதையே. அது சில விஷமிகளால் கட்டிவிடப்பட்ட கட்டுக்கதையேயன்றி வேறொன்றுமில்லை.

தொடர்ந்து பிற்பகல் 3 மணியளவில் யோகபுரத்தில் அமைக்கப்பட்டிருந்த தபாலகத்தையும் அவர் திறந்து வைத்தார். (க-6)

# பதின்மூன்று பாடசாலைகளில் அபிவிருத்தி

கிளிநொச்சி,ஓக.30

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளை மேம்படுத்துவதற்காக கொரிய கல்வி நிதியம் 500 மில்லியனை வழங்கியுள்ளது.

இந்தப் 13 பாடசாலைகளிலும் 105 வகுப்பறைகள், 13 பாடசாலை அலுவலங்கள், 12 ஆசிரியர் தங்குமிட அறைகள் என்பன அமைக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரி, சிவநகர் அ.த.க.பாடசாலை, பாரதி வித்தியாலயம், அக்கராயன் த.க.பாடசாலை, இராமநாதபுரம் மகாவித்தியாலயம், வட்டக்கச்சி மகாவித்தியாலயம், இராமநாதபுரம் மேற்கு த.க.பாடசாலை, பிரமந்தனாறு ம.வி, முருகானந்தா ம.வி, வேரவில் இந்து மகாவித்தியாலயம், இரணைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலை, கிராஞ்சி அ.த.க.பாடசாலை, தர்மபுரம் மகாவித்தியாலயம் ஆகியவற்றிலேயே இவை அமைக்கப்படவுள்ளன. இதற்கான ஒப்பந்தம் கல்வியமைச்சில் அமைச்சர் பந்துல குணவர்த்தன முன்னிலையில் கைச்சாத்தானது.

இந்த ஒப்பந்தத்தில் கொரிய நிறுவனத்தின் வதிவிடப் பிரதிநிதி, கல்வியமைச்சரின் செயலாளர் ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

கடந்த போரினால் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் பலவும் சேதமடைந்து வசதிகளின்றி இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

# வாகன இலக்கத் தகடுகள்

கிளிநொச்சி,ஓக.30

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் மோட்டார் போக்குவரத்துக் கிளையில் விண்ணப்பித்தவர்களுக்கான வாகனத் தகடுகளின் ஒரு தொகுதி தமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாக அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

அலுவலக நேரத்தில் வாகனப் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதி மற்றும் அதன் புகைப் படப்பிரதி, தேசிய அடையாள அட்டை, பழைய இலக்கத் தகடுகள் (பழைய பதிவேடுகளுக்கு மாத்திரம்) ஆகியவற்றைச் சமர்பித்து இலக்கத் தகடுகளைப் பெற்றுச் செல்லுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

JT-5980,QB-2963,JL-2133,QE-5408-HW-9759,QD-9825,QB-8898,QF-8397,QB-4881,GC-6766,YF-9456,JA-2668,GY-2135,HQ-8314,LA-5651,HF-4811,GL-6574,JP-0007,GB-7767,GN-5579,LD-8276,LC-7125,LB-2069,JO-9418,GE-1412,HI-5454,HI-9827,LA-9370,GY-0926,JF-4098,LA-9370,HP-2070,LE-5685,PA-7730,LA-0480,HG-3283,JP-9132,QG-3887,QG-8183,QG-6144,QD-0383,HH-8475,QD-1498,HS-1310,JW-2475,HV-9977,HI-5131,QD-9407,YF-6092,YF-6469,YF-7970,YG-3221,YG-3474,QJ-1512,GO-7744,KA-6929,YC-3923,HB-5051,JH-6366,KC-2994,HB-1481,JV-6028,QG-7095,QE7814,KB-3914,JN-4084,QA-0231,QD-7208,QF-8298,JV-5280,KA-5867,RA-2726,JD-0011,GC-8794,H.V-4976,HC-8089,RA-8767,HF-0199,HS-3598,RA-3912. (க)

## நல்ல சுவை...



கைகொடுக்கும் கற்பகதரு : வன்னியிலுள்ள வெள்ளாங்குளம் பகுதி வீதியொன்றில் பனம் பழத்தைச் சுவைத்தவாறு சிறுமிகள் சிலர் காணப்படுகின்றனர். (135)

# அவல வாழ்க்கையில் உழலும் மீள்குடியமர்ந்த மக்கள்

கிளிநொச்சி,ஓக.30

கிளிநொச்சி மாவட்டத்தின் வெவ்வேறு கிராமங்களிலும் மீள்குடியமர்ந்து வாழ்கின்ற பல குடும்பங்கள் தொடர்ந்தும் அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றார்கள்.

மீள்குடியமர்வு நடைபெற்று இரண்டு வருடங்கள் கழிந்து விட்ட நிலையிலும் தறப்பாள், தகரக் கொட்டகைகளில் வாழ்ந்து அவலப்படும் மக்களின் துன்பங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

கொடிய யுத்த அழிவுகளால் சொத்துக்களையும் வீடுகளையும் இழந்த மக்களுக்கு அரசினால் புதிய நிரந்தர வீட்டுத் திட்டங்களும், தற்காலிக அரை நிரந்தர வீடுகளும் வழங்கப் பட்டு வருகின்றன.

ஆனாலும் மீள்குடியமர்ந்து இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் அவலப்படும் மக்களில் பலருக்கு இன்றுவரை தற்காலிக அரைநிரந்தர வீடுகள் கூட வழங்கப்படவில்லை. இவர்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டவர்களாகவே உள்ளனர்.

இவர்கள் குடியிருக்கும் காணிகளுக்கு காணி உறுதிப்பத்திரம் இல்லை என்பதே இதற்குக் காரணமாகக் கூறப்பட்டு வருகின்றது.

ஆனால் இக்காணிகளில் குடியிருக்கும் மக்கள் தாம் இந்தக் காணிகளில் நீண்ட காலமாகக் குடியிருப்பதாகவும் ஆரம்பகாலங்களில் காடு, மேடு, பள்ளமாகக் கிடந்த காணிகளைத் தாமே செலவு செய்து சீரமைத்து நீண்டகாலமாக இந்தக் காணிகளிலேயே வசித்து வந்துள்ளதாகக் கூறுகின்றார்கள்.

நாட்டிலே இடம்பெற்ற தொடர்ச்சியான யுத்தங்கள் காரணமாகவேதான் தாம் காணி உறுதிப்பத்திரங்களைப் பெற முடியவில்லை எனவும் இவர்கள் கூறுகின்றனர்.

காணி தமக்குத்தான் சொந்தமானது என்பதை உறுதிப்படுத்தும் பத்திரங்கள் சிலவற்றை வைத்திருந்ததாகவும் அவற்றைக் கூட முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன், அம்பலவன், பொக்கணை போன்ற பகுதிகளில் நடைபெற்ற யுத்தத்தால் தமது ஏனைய பொருள்களுடன் கைவிட்டுச் சென்றுள்ளதாகவும் கூறி இவர்கள் கவலைப் படுகின்றனர்.

தாம் மீளக்குடியமர்த்தப்பட்டு இரண்டு வருடங்கள் கழிந்துவிட்ட போதிலும் இன்றுவரை தமது நிலையைக் கருத்திற் கொண்டு தமக்கு உதவுவதற்காக அரச அதிகாரிகளோ அரசாங்கமோ முன்வரவில்லை எனவும் தம்மைக் காணிகளை விட்டு வெளியேற்றுவதிலே தான் கவனம் செலுத்துகிறார்களெனவும் இவர்கள் கூறுகின்றனர்.

தாம் குடியிருக்கும் பகுதிகளில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களில் முக்கிய பொறுப்புக்களில் உள்ள தலைவர், செயலாளர் மற்றும் ஏனையோர் உதவித் திட்டங்கள், வீட்டுத் திட்டப் பயனாளிகள் தெரிவு போன்றவற்றில் தம்மை ஒதுக்குவதாகவும் இவர்கள் கூறுகின்றார்கள்.

சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தமது நிலையைக் கண்டு தமக்கு தற்காலிக

> **கிளிநொச்சி மாவட்டத்தின் வெவ்வேறு கிராமங்களிலும் மீள்குடியமர்ந்து வாழ்கின்ற பல குடும்பங்கள் தொடர்ந்தும் அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றன. இவர்களுக்கு வீட்டுத் திட்டங்களும் மறுக்கப்பட்ட நிலையில் உள்ளன.**

வீடுகளை வழங்க முன்வந்த போதும் கிராமத் தலைவர், செயலாளர் போன்றோர் அந்த நிறுவனப் பிரதிநிதிகளைச் சந்தித்து "இவர்களுக்குச் சொந்தக் காணிகள் இல்லை, இவர்களுக்கு இப்போது உதவ வேண்டாம், இவர்களை அரசு வேறு இடத்தில் குடியேற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்கிறது போன்ற பொய்களைக் கூறித் தடுத்து நிறுத்துகின்றார்கள் எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் கூறுகின்றார்கள்.

ஆனால் கிராமங்களில் பதவியில் இருப்பவர்களின் செல்வாக்குடனும் அனுமதியுடனும், யுத்த காலங்களிலோ அதற்கு முன்போ வன்னியில் வசித்திராத, வன்னியில் காணிகளைக் கொண்டவர்கள் சில பேருக்கு வீட்டுத் திட்டங்கள், காணிகளைப் பாதுகாப்பதற்கான அரை நிரந்தர வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறி இவர்கள் கவலைப்படுகின்றார்கள்.

வன்னியில் காணிகள் உள்ள, வேறு இடங்களில் வசித்து வருபவர்களுக்கு வழங்கப்பட்ட அரை நிரந்தர வீடுகளில் ஆள்கள் இருப்பதில்லை. அவர்கள் காணிக்கு வருகின்ற போது தங்கிச் செல்வதற்காகவே இவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

காணிச் சொந்தக்காரர்கள் சிலர் தமது காணிகளைப் பாதுகாப்பதற்காக அந்த வீடுகளில் யாரையாவது குறைந்த வாடகையில் குடியிருத்துவதற்குத் தேடுவதனையும் காணக் கூடியதாகவுள்ளது.

ஆனால் தாம் வாழ்வதற்கு வீடு இல்லாத நிலையில் தொடர்ந்தும் துன்பப்படுவதாகவும் இப்படியான செயற்பாடுகளை இல்லாமல் செய்து நியாயமான முறையில் தமக்கு உதவுவதற்கு யாரும் முன்வரவில்லையெனவும் கூறி இவர்கள் கவலைப்படுகின்றனர்.

தறப்பாள் கொட்டகைகளில் துன்பப்படும் மக்கள் வாழ்கின்ற இடங்களில் உள்ள வீதிகள் கூடத் திருத்தியமைக்கப் படாது காணப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கிராமங்களை அவதானித்த போது சில கிராமங்களில் வீட்டுத்திட்டங்கள், மலசலகூடங்கள், வீதிகள் என்பன சீரான முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

சில பகுதிகள் கிழிந்த தறப்பாள்களால் சுற்றிக்கட்டிய கொட்டகைகளுடன் காணப்படுகின்றன. மலசல கூடங்கள் எதுவுமே அற்ற நிலையில் வீதிகள் குன்றும் குழிகளுமாய்ப் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றன.

எனவே பாதிக்கப்பட்ட மக்களைத் தொடர்ந்தும் புறக்கணித்து ஒதுக்காது அவர்களையும் மனிதர்களாகக் கருதி அவர்களுக்கும் உதவித்திட்டங்களை வழங்குவதன் மூலம் எதிர் காலத்தில் இதனால் ஏற்படும் குழப்பங்களைத் தவிர்க்க முடியும்.

அத்துடன் அபிவிருத்தியின் பயன்களை அனைவரும் அனுபவிக்க முடியும். *

-சுபன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக மாணவர்கள் 65 பேருக்கு முல்லைத்தீவில் புலமைப் பரிசில் கொடுப்பனவு

முல்லைத்தீவு,ஒக.30

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு முல்லைத்தீவு கல்வி மேம்பாட்டு நம்பிக்கை நிதியத்தால் புலமைப் பரிசில் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

வறுமைக் கோட்டின் கீழுள்ள 65 மாணவர்கள் இந்தப் புலமைப் பரிசில் கொடுப்பனவுகளைப் பெற்றனர். இதற்கான வைபவம் கடந்த புதன்கிழமை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இந்த மாணவர்கள் மாதாந்தம் 2 ஆயிரத்து 500 ரூபாவைப் பெறுவார்கள். தற்போது முதற் கட்டமாக இரு மாதங்களுக்கான கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

யுத்தத்தாலும், இயற்கையழிவுகளாலும் பாதிக்கப்பட்டு வறுமைக்கு ஆளாகித் தமது உயர் கல்வியைத் தொடர முடியாத வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள மாணவர்கள் மீது அக்கறையுடையவர்கள் முல்லைத்தீவு மாவட்ட மேம்பாட்டு நம்பிக்கை நிதியத்துக்குத் தங்களாலியன்ற நிதி உதவியை வழங்குமாறு முல்லைத்தீவு அரச அதிபர் இதன் போது வேண்டுகோள் விடுத்தார்.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரும், முல்லைத்தீவு கல்வி மேம்பாட்டு நம்பிக்கை நிதியத்தின் தலைவருமான ஏ.பத்திநாதன் இந்த நிகழ்வுக்குத் தலைமை வகித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.ஏ.மோகன்றாஸ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.கனகரத்தினம், முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (க)

### கிளிநொச்சி, ஆனைவிழுந்தானில்

# இராணுவத்தால் அமைக்கப்பட்ட 10 வீடுகள் மக்களிடம் கையளிப்பு

கிளிநொச்சி,ஒக.30

கிளிநொச்சி, ஆனைவிழுந்தான் பகுதியில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட பத்து வீடுகள் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.


கிளிநொச்சி, ஆனைவிழுந்தான் பகுதியில் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட முதியவர்கள், மாற்றுவலுவுடையோர்களுக்கான வீடுகளை இராணுவத்தினர் அமைத்திருந்தனர்.

இவ்வாறு இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட இந்தப் புதிய வீடுகளை உரியவர்களுக்கு கையளிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றது.

ஆனைவிழுந்தான் கிராமத்துக்குச் சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு வீடுகளை உரியவர்களிடம் வழங்கி வைத்ததுடன் மக்களின் குறைபாடுகளையும் கேட்டறிந்தனர்.

இதேவேளை ஏனைய மக்களுக்கும் கட்டம் கட்டமாக வீடுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நாமல் ராஜபக்ஷ இங்கு தெரிவித்தார். (க-6)

### கவிஞருக்குப் பெருமை...



ஆர்வமான கூட்டத்தினர்: மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்ற கவிஞர் செபமாலை மொத்தம் போலின் கவிதை நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர் காணப்படுகின்றனர்.

# உடையார்கட்டில் விவசாய நடவடிக்கை

முல்லைத்தீவு,ஒக.30

உடையார் கட்டில் மீள்குடியமர்ந்த மக்கள் விவசாய நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பகுதியிலிருந்து கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்து சென்றனர். இவர்கள் கடந்த மாதத்திலும் இந்த மாத முற்பகுதியிலும் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டனர். இவர்கள் குடியமர்ந்த போது பருவமழையும் பெய்ததால் அதனை இவர்கள் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டனர். தமது விவசாயக் காணிகளைத் துப்புரவு செய்து விவசாய நடவடிக்கைகளையும் இவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

விவசாய ஊக்குவிப்புக்களை வழங்கும் தொண்டு நிறுவனங்கள் இவை தொடர்பான பதிவுகளை மேற்கொண்டு வருகின்றன. தற்போது தமது சொந்தச் செலவிலேயே மக்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

உதவி நிறுவனங்கள் தமது உதவிகளை விரைந்து வழங்கினால் தாம் தமது விவசாய முயற்சிகளை மேலும் சிறப்புடன் மேற்கொண்டு பயனடையக் கூடியதாக இருக்குமென இந்த மக்கள் தெரிவிக்கின்றனர். (க)

# பயணிகளை ஏற்றாத பஸ்கள்

கிளிநொச்சி,ஒக.30

கிளிநொச்சி இரணைமடுச் சந்தி, 155 ஆம் கட்டைச் சந்தி போன்ற இடங்களில் இருந்து கிளிநொச்சி நகரப் பகுதி, மருத்துவமனை போன்றவற்றுக்குப் பயணிப்பவர்களை பஸ்கள் ஏற்றாமல் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் குறிப்பிட்ட நேரத்துக்குத் தாம் செல்ல வேண்டிய இடங்களுக்குச் செல்ல முடியாதுள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

கனகாம்பிகைக்குளம், சாந்தபுரம், மலையாளபுரம், கிருஷ்ணபுரம், பாரதிபுரம், பொன்நகர் போன்ற பகுதிகளில் இருந்து மேற்படி இரணைமடுச் சந்தி, 155 ஆம் கட்டைச் சந்தி போன்ற இடங்களுக்குச் சிரமப்பட்டு அவசர அவசரமாக வந்து பயணம் செய்வதற்காகக் காத்து நின்றபோதும் ஏ-9 வீதியால் வரும் பஸ்கள் இவர்களை ஏற்றாமல் செல்வதாகக் கூறப்படுகின்றது.

எனவே தமது நிலையை உணர்ந்து ஏ-9 வீதியால் கிளிநொச்சி ஊடாகப் பயணிக்கும் பஸ்கள் தம்மையும் ஏற்றிச் சென்று உதவ வேண்டுமென பாதிக்கப்படுபவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (க-426)

# மக்களுக்குக் காலதாமதமாக விநியோகிக்கப்படும் கடிதங்கள்

### கிளிநொச்சி, உருத்திரபுரம் பகுதியில்

கிளிநொச்சி,ஒக.30

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதி மக்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் உரிய காலப் பகுதியில் கிடைப்பதில்லையெனக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பகுதி மக்களுக்கு அனுப்பி வைக்கப்படும் முக்கிய கடிதங்கள் கூட உரிய காலப் பகுதியில் வழங்கப்படாது நீண்ட நாள்களின் பின்பே வழங்கப்படுவதாகவும் இதனால் தமது தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலை காணப்படுவதாகவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

உருத்திரபுரம் பகுதியில் நீண்ட காலமாக வசிக்கும் ஒருவருக்குக் கடந்த ஜனவரி மாதம் 14 ஆம் திகதி அனுப்பப்பட்ட முக்கியமான கடிதம் ஒன்று ஒகஸ்ட் மாதம் 22 ஆம் திகதியே அவருக்குக் கிடைத்துள்ளது. இதற்கான காரணமாக கடிதத்துக்குரியவர் யார் என்பது தெரியாததால் தாமதமேற்பட்டதாகக் கூறப்பட்டது.

இந்தப் பகுதிக்கு கடிதங்களை வழங்கும் ஊழியர்கள் இது விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி இங்கு வரும் கடிதங்கள் உரிய காலப் பகுதியில் கடிதத்துக்குரியவர்களுக்குக் கிடைக்கக் கூடிய வகையில் உதவ முன்வர வேண்டும் என்பது இந்தப் பகுதி மக்களது வேண்டுகோளாக உள்ளது. (க-426)

### உறவுப் பாலம் என்ற அமைப்பால்

# கிளிநொச்சியில் 40 பேருக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன

கிளிநொச்சி,ஒக.30

கிளிநொச்சியில் 40 பேருக்குத் சைக்கிள்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து ஜேர்மனியில் வாழும் மக்களால் உருவாக்கப்பட்ட உறவுப் பாலம் என்ற அமைப்பினூடாக இவை வழங்கப்பட்டுள்ளன. போரினால் எல்லாவற்றையும் இழந்து தவிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இந்தத் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இங்குள்ள வறிய நிலையிலுள்ள மாணவர்கள் பஸ்ஸூல் பயணம் செய்வதற்குப் பணமில்லாத நிலையில் உள்ளனர். பலர் மழையிலும் வெயிலிலும் பாடசாலைகளுக்கு நடந்து செல்கின்றனர்.

இந்த நிலையில் இந்த உதவி அவர்களுக்குப் பெரிதும் உதவுமெனப் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (க)

# அக்கராயனில் வீதிகள் புனரமைப்பு

அக்கராயன்,ஒக.30

அக்கராயனில் அபிவிருத்தி செய்யப்படவுள்ள ஆறு வீதிகளின் ஆரம்பப் பணிகளை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தார்.

அக்கராயன் மணியங்குளம் வீதி, ஆனை விழுந்தான்குளம் பாடசாலை வீதி, ஆனைவிழுந்தான்குளம் 10 ஆம் ஒழுங்கை வீதி, வன்னேரிக்குளம் பாடசாலை வீதி, திக்காய் வீதி, குஞ்சுக்குளம் வீதி ஆகியவையே அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

வீதி அபிவிருத்திப் பணிகளுக்கான பெயர்ப் பலகைகள் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஆனைவிழுந்தான் குளம் இராணுவப் பொறுப்பதிகாரி, அரச அதிகாரிகள், பொதுமக்களெனப் பலர் கலந்து கொண்டனர். (க)

# மன்னாரில் கடும் காற்று

மன்னார்,ஒக.30

மன்னார் மாவட்டத்தில் வழமையான காலநிலைக்கு மாறாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை முதல் தொடர்ச்சியாகக் கடும் காற்று வீசுவதால் மன்னார் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாகக் கடற்கரையோரத்தை அண்டிய கிராமங்களான பள்ளிமுனை, பெரியகடை, சௌத்பார், எமில் நகர் போன்ற கிராமங்களில் உள்ள மக்கள் பலத்த காற்றினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பலத்த காற்றின் காரணமாகக் குறித்த கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அந்தப் பகுதிகளில் சைக்கிள்கள் பயணிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

காற்றுடன் மண்ணும் சேர்ந்து பறப்பதால் அவை கண்களில் புகுந்து கண்நோய் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டின் சில இடங்களில் சூறாவளி ஏற்பட்டுள்ளமையால் அதன் தாக்கமே இக்கடும் காற்று எனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-601)

# புத்தக அலுமாரிகள் அன்பளிப்பு

கிளிநொச்சி,ஒக.30

கிளிநொச்சியில் இயங்கும் மகாதேவா சைவச்சிறார் இல்லத்துக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தக அலுமாரிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள நியூகமல் செரமிக்ஸ் ஸ்தாபனத்தினரே ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஐந்து புத்தக அலுமாரிகளை வழங்கியுள்ளனர்.

இவற்றை மேற்படி இல்லத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான ரி.இரத்தினசிங்கம் பெற்றுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் மருத்துவ சிகிச்சை யூனியன் ஹெல்த் நெட் காப்பீடு

யூனியன் அஷுவரன்ஸ் இந்தியாவில் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கான ஹெல்த் நெட்காப்பீட்டை அறிமுகப்படுத்தியுள்ளது.

இலங்கையில் மருத்துவத் துறை வேகமாக முன்னேறி வரும்போதும் பலரும் வெளிநாடுகளில் ஆபத்தான நோய்களுக்கான மருத்துவ சிகிச்சையைப் பெற விரும்புகின்றனர்.

இதனை கருத்திற்கொண்டு யூனியன் அஷுவரன்ஸ் அண்மையில் ஹெல்த் நெட் எனும் பெயரில் குறைந்த கட்டுப் பணத்தின் மூலம் பெறக்கூடிய மருத்துவக் காப்பீட்டை அறிமுகம் செய்துள்ளது. இது இலங்கையர்கள் இந்தியாவில் மேற்கொள்ளும் மருத்துவ செலவினங்களை காப்பீடு செய்கிறது.



மருத்துவமனை அனுமதி, படுக்கை, அறை மற்றும் சத்திர சிகிச்சை நிபுணர் கட்டணங்கள், மருந்து மற்றும் சத்திர சிகிச்சை உப கரண செலவுகள், நோயுறுதி பரிசோதனைகள் மற்றும் அவசர செலவுகள் காப்பீடு செய்யப்படுகின்றன. சிகிச்சை பெற முன்னர் 30 நாள்களுக்குரிய மருத்துவ செலவுகளும் சிகிச்சைக்குப் பின்னர் 60 நாள்களுக்குரிய மருத்துவ செலவுகளும் கையேற்கப்படுகின்றன. இதில் மருத்துவ பரிசோதனைகள் போன்றவற்றுக்கான செலவுகளும் அடங்குகின்றன. இலங்கையிலும் இந்தியாவிலும் அவசர அம்புலன்ஸ் சேவை செலவும் இதன் காப்பீட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

யூனியன் அஷுவரன்ஸின் டொக்டர் சுரங்க ரணசிங்ஹ கூறும்போது, இந்தியாவில் சிகிச்சை பெறுவது வசதிபடைத்தோருக்கு மட்டும் உரிய வரப்பிரசாதமாக இருந்தது மாறி சராசரி வருமானம் கொண்டோரும் அவ்வசதியை பெறும் வாய்ப்பு யூனியன் ஹெல்த் நெட் மூலம் கைகூடியுள்ளது. உலகத்தரம் வாய்ந்த மருத்துவ நிபுணர்கள் மற்றும் தொழில்நுட்பம் என்பன நன்கு வளர்ச்சியுற்ற இந்தியாவின் மருத்துவத்துறையை இலங்கையரின் சிறந்த தெரிவாக ஆக்கியுள்ளது. ஆபத்தான நோய்களுக்கான சிகிச்சையும் கவனிப்பும் சிறந்த தரத்தைக் கொண்டுள்ளன. என்றார்.

யூனியன் அஷுவரன்ஸின் பேச்சாளர் கூறும்போது, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் மருத்துவ செலவுகளை காப்பீடு செய்யும் காப்புறுதிகள் இலங்கையில் இருந்தாலும் அவை வசதி குறைந்ததாகவே இருக்கின்றன. அமெரிக்கா போன்றதூர நாடுகளுக்கு சென்று சிகிச்சை பெறுவது ஆபத்தான நோய்க்கு ஆளாகியிருக்கும் நோயாளிகளுக்கு மிகுந்த அசௌகரியமாகும். இந்திய மருத்துவத் துறை மேலை நாடுகளுக்கு சமமாக உலகப் பிரசித்திபெற்றவையாக வளர்ந்துள்ளன. எனவே, இந்தியாவின் மருத்துவ அதிசயங்கள் இலங்கையருக்கு குறைந்த செலவில் கிடைக் கின்றன என்றார்.

ஹெல்த் நெட் காப்பீடு ஏற்கனவே இருந்து வரும் நோய்களுக்கும் 4 ஆண்டுகளுக்கு பிறகு காப்பீடு வழங்குகிறது. இதன் மூலம் இக்காப்பீடு மிகுந்த பிரபல்யத்தை பெறுவதோடு பல நோயாளிகளுக்கு மன ஆறுதலையும் வழங்குவதாக துறை சார் நிபுணர்கள் கருதுகின்றனர். சந்தையில் உள்ள மருத்துவக் காப்பீடுகள் நோய்களை வகை பிரிக்கின்றன.

ஹெல்த் நெட் அவ்வாறான வகை பிரிப்புகளை மேற்கொள்ளாது சில நோய்களை மட்டும் தவிர்ப்புக்கு உட்படுத்துவதோடு தமது குடும்பத்தினரையும் அன்புக்குரியவர் களையும் காப்பீட்டுக்குள் கொண்டு வர இடமளிக்கிறது. மற்றுமொரு முக்கிய அம்சம் தான் விமானக் கட்டண செல வினையும் ஹெல்த் நெட் தன்னகத்தே கொண்டிருப்பதாகும்.

# பாசிக்குடாவில் அமைந்துள்ள மாலு மாலு Resort

இலங்கையின் பாரம்பரியத்துக்கும் சூழல் நட்புடையதுமான கட்டட நிர்மாணக் கலைக்கும் உள்வாங்கப்பட்ட மாலு மாலு அந்த நாட்டின் மாதிரி மீனவர் கிராமம் வாடியை நினைவூட்டுகின்றது.

Dedug நிறுவனத்தின் ஒரு கிளையான HIFI சென்டர் பிறைவேற் லிமிட்டெட் ரெஸ்ரோறண்டுக்குத் தேவையான ஒலி, ஒளி உபகரணங்களை விநியோகித்ததுடன் பிரதான ரெஸ்ரோறண்டுக்கான ஒலி அமைப்பு, மதுபான சாலைக்கான நிலையத்தின் (Spa) ஒலி அமைப்பு, கடற்கரை பக்க ரெஸ்ரோரண்டுக்கான ஒலி அமைப்பு, ஆரோக்கிய நிலையத்தின் (Spa) ஒலியமைப்பு, நடன இசைகளுக்கான (Karaoke) ஒலி, ஒளி அமைப்பு மற்றும் டிஸ்கோ ஒலி, ஒளி அமைப்பு என்பவற்றையும் ஒருங்கமைத்துள்ளது.


இந்தச் செயற்றிட்டத்தில் Hifi Harman தொழில்சார் பொருள்களை ஒலி அமைப்புகளுக்கு பயன்படுத்தியுள்ளது. அதாவது JBL,AKG மற்றும் Sound Craft and Crown என்பனவாகும். இத்துடன் Epson புறொஜெக்டர்கள் வீடியோ பாவனைக்கு பொருத்தியுள்ளது. அத்துடன் புதிய தேசிய கலை நுட்பமான ஒலி அமைப்பு வடிவமைத்து டிஸ்கோவுக்கு பொருத்தப்பட்டுள்ளது.

சகல அறைகளும் பொது இடங்களும் உஷ்ண வலயத்துக்கு ஏற்றவாறு இயற்கைச் சூழலையும் இணைத்து உருவாக்கப்பட்டுள்ள கட்டட அமைப்பு தனித்துவமான உயர்தர சுலபமான உட்கட்டமைப்பு அத்துடன் இலங்கையின் கலை கலாசாரங்களையும் புதிய பழைய நாகரிகங்களையும் இணைத்துள்ளது.

நீலக் கடலையும் இயற்கை சூழலையும் அடக்கிய நீளமான வெயில் சூழ்ந்த கடற்கரை அனைத்து சீதோஷண தாவரங்களும் மாலு மாலு வாசஸ்தலம் இரைச்சல் மிக்க உலகத்திலிருந்தும் பிரச்சினைகளிலிருந்தும் விடுபட்டு இருப்பதற்கு உதவி செய்கின்றது.

மேலும் இலங்கைக்குரிய பாரம்பரிய கலாசார உபசரிப்பு 40 அறைகள், இலங்கையின் கிழக்குக்கரைச் சமுத்திரத்தை நோக்கியுள்ள இந்தப் பிரதேசம் இலங்கையின் சிறந்த கடற்கரைகளில் ஒன்றான பாசிக்குடாவில் அமைந்துள்ளது.

HIFI நிறுவனமானது இது போன்ற பொழுது போக்கு விருந்தோம்பல் பெரிய செயற்றிட்டங்களுக்கு கைச்சாத் திட்டுள்ளதுடன் அவை வெகு விரைவில் இங்கு உள்வாங்கப்படும். (த)



அலையன்ஸ் பினான்ஸ் நிறுவனத்தின் நகை அடகு நிலையம் அண்மையில் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டது. உதவிப் பொது முகாமையாளர் பிரதீப் டீ சில்வா நிலையத்தைத் திறந்து வைக்கிறார். அருகில் சிரேஷ்ட அதிகாரிகளான கீதா ஜெயவர்தனா நிரோஷன் விஜயவர்த்தன. (த)

# தமிழ் மொழி மூலப் புத்தகங்களால் பலம் பெறும் AAT நிறுவனம்

உயர் கணக்கியல் துறையில் தமிழ் மொழி மூலமான கணக்கியல் புத்தகங்கள் நாட்டில் முதன் முறையாக உத்தியோகபூர்வமாக வெளியிட்டுவைக்கப்பட்டுள்ளன.

இந்தப் புத்தகங்களைக் கையளிப்பதைக் குறிக்கும் நிகழ்வொன்று கடந்த மாதம் 11 ஆம் திகதி தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் வாசுதேவ நாணயக்கார; எமது கடந்த கால நிகழ்வுகளை அறியாமலும் இனங்களுக்கிடையே இணக்கத்தை ஏற்படுத்துவதற்குத் தயாராகாமலும் நாம் இருப்போமாயின் எம்மை உண்மையான மனிதர்களென்று குறிப்பிடமுடியாது என்றார்.

இங்கு உரையாற்றிய AAT நிறுவனத்தின் தலைவர் ரி.தர்மராஜா, அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களின் மூலம் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் கல்வியின் ஒளி சென்றடையத் தொடங்கி விட்டது என்றார்.

தமிழ் மொழி மூலமாகக்கணக்கியலைப் பயிலும் மாணவர்கள் இந்தப் புத்தகங்களைக் கண்டு பெருமகிழ்வடைந்துள்ளனர். இவர்கள் இது தொடர்பான மேலதிக விவரங்களை அறிய விரும்பினால் என்ற AAT நிறுவனத்தின் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவுடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் AAT நிறுவனத்தால் நடத்தப்படும் பரீட்சைகளில் தமிழ் மாணவர்கள் தமிழ்மொழி மூலம் தோற்றும் வாய்ப்புள்ளமை சிறப்பு அம்சமாகும்.

# ஏஷியா கொமர்ஸ் நிறுவனம் திவச பினான்ஸ் என மாற்றம்

வரையறுக்கப்பட்ட ஏஷியா கொமர்ஸ் நிறுவனம் தற்சமயம் வரையறுக்கப்பட்ட திவச பினான்ஸ் என மீள் வர்த்தக அடையாள மிடப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு மிகுந்த திறமையுடன் சேவையாற்ற வென போதியளவு வாகன நிறுத்துமிட வசதிகளுடன் விஸ்தாரமான, சௌகரியமான இடத்திற்கு அதன் நகர அலுவலகத்தை இடமாற்றம் செய்வதும் இதனோடு இணைந்துள்ளது. கொள்ளுப்பிட்டியில் தற்சமயம் அகலமாக்கப்பட்ட ஸ்டேசன் வீதியில் அமைந்துள்ள இந்தப் புதிய அலுவலகத்திற்கு காலி வீதி மற்றும் மரைன்டிரைவ் ஆகிய இரண்டின் மூலமாகவும் வரமுடியும்.

வரையறுக்கப்பட்ட திவச பினான்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி லக்ஷ்மன் உடுவர இந்த நடவடிக்கைப் பற்றி கருத்து வெளியிடுகையில், ''மத்திய வங்கியில் பதிவு பெற்ற நிதி நிறுவனம் என்ற வகையில் அபிவிருத்தியடைந்த கூட்டிணைப்பு அமைப்பு என்பது எமது தொலை நோக்கைப் பூர்த்தி செய்வதோடு, எமது புதிய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு எம்மைத் தயார் நிலையில் வைத்துள்ளது என்று கூறினார். இத்தகைய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கு முற்றிலும் புதிய அடையாளத்துடன் எமது அமைப்பை மீள் வர்த்தக அடையாளமாக்குவது மிகவும் முக்கியமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில், திவச என்பது, 'மூன்றாம் கண்' என்று பொருள்படும் என்று கூறி, எதிர்காலம் பற்றி அறிந்து கொள்ளும் சக்தி அதற்கு உண்டு என்பதனாலேயே இந்தப் பெயர் எமது நிறுவனத்துக்கு சூட்டப்பட்டுள்ளது என்று கூறினார். நிறுவனத்தின் நடவடிக்கைகளில் நிதி, செயற்படு குத்தகைகள், வாடகைக் கொள்வனவு, குறுகியகால வர்த்தக நிதியுதவி, நடுத்தர கடன் வசதிகள் மற்றும் காசோலைகள், வர்த்தக விலைப்பட்டி சம்பந்தமான நடவடிக்கைகள், நட்டத்தை ஈடுசெய்யும் வர்த்தகம் என்பன அடங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

2011 மார்ச் 31ஆம் திகதி முடிவடைந்த நிதி ஆண்டில் நிறுவனம் குறிப்பிடத்தக்க வகையில் செயலாற்றி முன்னொருபோதும் இல்லாத இலாபத்தைப் பதிவுசெய்துள்ளது. முற்பணங்களும், வைப்புப் பணங்களும் அபூர்வமூட்டும் வகையிலான வளர்ச்சியைத் தந்துள்ளன. முற்பணங்கள் அதிகரித்த போதிலும், 2011 ஜூன் 30ஆம் திகதி சொத்துக்களின் தரம் 3.6% என்ற NPA யின் விகிதாசாரத்தில் தெரிவிக்கப்பட்டவாறு தொடர்ந்தும் பேணப்படுகிறது.

வாடிக்கையாளர்களின் கனவை நனவாக் கும் வகையில் எமது நிதிச் சேவைகளை அவர்களுக்கு வழங்கவென மேலதிக வாடிக் கையாளர்கள் தேடிக்கண்டுபிடிக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிற்கு எமது சபை எப்போதும் ஊக்கமளித்துள்ளது. இந்தக் கொள்கையை நிறைவேற்றும் வகையில் எமது நான்காவது கிளை களுத்துறையில் ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதி திறந்து வைக்கப்படும். இந்த வருடம் முடிவடைவதற்கு முன்னர் மற் றும் ஒரு கிளையைத் திறந்து வைப்பது எமது நோக்கமாகும் என்றும் உடுவர தெரிவித்தார்.

இந்த நிறுவனம் 2005 மே மாதம் வரையறுக்கப்பட்ட ஏஷியா கொமர்ஸ் நிறுவனம் என்ற பெயரில் விசேட குத்தகை நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது. 2011 மே 23ஆம் திகதி நிதி நிறுவன அனுமதிப்பத்திரத்தை கம்பனி பெற்றுக்கொண்டதனால் எதிர்காலத்தில் வரையறுக்கப்பட்ட திவச பினான்ஸ் நிறுவனம் என இது அழைக்கப்படும்.(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீர்த் தட்டுப்பாட்டால் எழுந்த பிரச்சினையே பதுளை சிறைக்குள் கைதிகள் மோதலுக்குக் காரணம்

## மாகாணசபை உறுப்பினரிடம் அதிகாரி தெரிவிப்பு

பதுளை, ஓக.30

பதுளை சிறைச்சாலைக்குப் போதிய தண்ணீர் வசதி இல்லை என்றும், கடந்த வெள்ளிக்கிழமை குளிப்பதற்குத் தயாரான கைதிகளிடையே மோதல் ஏற்படுவதற்கு இதுவே காரணம் என்று சிறைச்சாலையின் சிரேஷ்ட அதிகாரி எஸ்.பி.அநுரஏக்க நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வினவிய மலையக மக்கள் முன்னணியின் மாகாணசபை உறுப்பினர் அ.அரவிந்குமாரை தொலைபேசியூடாகத் தொடர்புகொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மாகாணசபை உறுப்பினர் தரப்பில் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:-

கடந்த வெள்ளிக்கிழமை காலை பதுளை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள் தாக்கப்படுகின்றனர். உடனடியாகத் தலையிட்டு அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் அநாமதேய தொலைபேசி அழைப்பு ஒன்று ஊவா மாகாணசபை உறுப்பினர் அரவிந்குமாரின் கையடக்கத் தொலைபேசிக்கு வந்தது. இந்தத் தொலைபேசி அழைப்பை உதாசீனம் செய்யாமல் உண்மை நிலையைத் தெரிந்துகொள்ளும் வண்ணம் மலையக மக்கள் முன்னணியின் ஹாலி-எல பிரதேச சபை உறுப்பினர் சுப்பையா தியாகராஜாவை உடனடியாகவே சிறைச்சாலைக்கு அனுப்பி சிரேஷ்ட சிறைச்சாலை அதிகாரியை சந்தித்து உண்மை நிலைமையை அறிந்து வருமாறு பணித்தார் மாகாணசபை உறுப்பினர்.

சிறைச்சாலை அதிகாரி அநுர ஏக்க நாயக்காவைச் சந்தித்த பிரதேச சபை உறுப்பினர் தியாகராஜா இந்தத்தகவல் தொடர்பாக வினவியபோது,

நிலைமையைத் தெளிவுபடுத்தும் வண்ணம் சிறைச்சாலை அதிகாரி மாகாணசபை உறுப்பினரோடு தொலைபேசியில் தொடர்புகொண்டு, பதுளை நகரத்திற்கான தண்ணீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

இந்தநிலையில், சிறைக் கைதிகள் குளிப்பதற்றுத் தயாராகும்போது முறுகல் நிலைமை ஏற்பட்டு அதனால் சிறு கைகலப்பும் தோன்றியது. எனினும் அது உடனடியாகவே கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் தான் அழைத்து, அவர்களுக்கு புத்திமதிகளையும், ஆலாசனைகளையும் வழங்கினார் என்று தெரிவித்தார்.

இந்த விடயத்தில் தமிழ் இளைஞர்கள் சம்பந்தப்பட்டிருந்தாலும் இதிலே இனவாதமோ வெறெந்த உள்நோக்கமோ இல்லை. தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் பாடசாலைப் பிள்ளைகளைப் போல சில விடயங்களில் முரண்படுவதும், பின்பு நட்பாவதும் ஒரு சாதாரண நிகழ்வு என சிரித்தவாறே கூறினார் - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

# கஞ்சாவுடன் வர்த்தகர் கைது

கொழும்பு, ஓக.30

71 கிலோ கஞ்சாவை தனது வீட்டில் மறைத்து வைத்திருந்த வர்த்தகர் ஒருவரை தனமல்வில பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தனமல்வில, உடவெல பிரதேசத்தில் கஞ்சா விற்பனை செய்து வருவதாக தனமல்வில பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றினையடுத்து இந்த நபரின் வீட்டையும் கடையையும் பொலிஸார் சோதனை செய்துள்ளனர்.

இதன்போது அங்கு 71 கிலோ கஞ்சா பொதி செய்யப்பட்டு வெளியிடமொன்றுக்குக் கொண்டு செல்லத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சந்தேக நபரைக் கைது செய்த பொலிஸார் வெள்ளவாய நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாடசாலைகளின் அபிவிருத்திக்கு முதலமைச்சரினால் நிதி ஒதுக்கீடு

நுவரெலியா,ஓக. 30

நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்டங்களில் உள்ள மூன்று பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு மத்திய மாகாண முதலமைச்சரினால் சுமார் ஒருகோடி 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று பாடசாலைகளில் உள்ள நீண்டநாள் குறைபாடுகளைத் தீர்க்கும் முகமாகவே இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என முதலமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

மாத்தளை மாவட்டத்தில் பல்லேபொல மகாபோட் வித்தியாலயத்தின் மலசலகூடங்கள், வேலிகள், சுற்றுவட்ட பாதுகாப்பு மதில்கள் அமைக்க 41 லட்சம் ரூபாவும், நாவுல மஹிந்த மகா வித்தியாலயத்தில் 'பாதுகாப்பு மதில் அமைக்க 10 லட்சம் ரூபாவும்,

நுவரெலியா மாவட்டத்தில் சுமனா மத்திய மகாவித்தியாலயத்திற்கு சகல வசதிகளையும் கொண்ட இரசாயனகூடம் அமைக்க 43 லட்சத்து 48 ஆயிரத்து 922 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் ஏனைய பாடசாலைகளின் குறைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நிதி ஒதுக்கப்படும்: அவ்வாறான குறைபாடுகள் உள்ள பாடசாலை அதிபர்கள் குறைபாடுகளை சுட்டிக் காட்டி கடிதம் அனுப்ப வேண்டும் - என்றார்.



மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (ச)

# நகைகள் கொள்ளை

கம்பளை,ஓக.30

கம்பளை, போத்தலபடிய பகுதி வீடொன்றில் கடந்த சனிக்கிழமை இரவு புகுந்த கொள்ளையர்கள் சிலர் அங்கிருந்த ஆறு லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்த வீட்டிலுள்ளோர் பள்ளிவாசலுக்கு இரவு நேர விசேட தொழுகைக்காக சென்றிருந்துபோது பின்கதவை உடைத்துக் கொண்டு புகுந்த திருடர்கள் அலுமாரியை உடைத்து நகைகளைக் கொள்ளையடித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கம்பளைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ச)

# அரசோடு இணைந்திருந்து அரசை எதிர்த்துப் போட்டி

## ஹஸன் அலி கூறுகிறார்

கொழும்பு, ஓக.30

அரசோடு இணைந்திருக்கும் நாங்கள் அரசை எதிர்த்து கல்முனை மாநகரசபைத் தேர்தலில் போட்டியிட வேண்டிய நிலையேற்பட்டுள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலாளர் எம்.ரீ. ஹஸன் அலி தெரிவித்துள்ளார்.

கல்முனை மாநகரசபைத் தேர்தலுக்கான வேட்புமனுவைத் தாக்கல் செய்துவிட்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தத் தேர்தலை நேச சக்தியோடுதான் நடத்தவுள்ளோம். எமது பிரசாரங்கள் கூட இனப் பிரச்சினை தொடர்பானவையாகவே பெரும்பாலும் அமையும். நாங்கள் ஏழு மாநகர சபைகளில் தனித்தும் அரசுடன் சேர்ந்தும் போட்டியிடுகிறோம். இதில் கல்முனை மாநகரசபையில் மாத்திரம் தனித்துப் போட்டியிடுகிறோம்.

நாம் இந்தத் தேர்தலில் சிறந்த முறையில் பிரசாரங்களை மேற்கொண்டு அமைதியான நல்லதோர் தேர்தலை நடத்துவதற்காகக் களமிறங்கியுள்ளோம்.- என்றார். (ச)

# கிராம அலுவலகர் பிரிவுகளில் சிவில் பாதுகாப்புக் குழுக்கள்

## பொலிஸ் அத்தியட்சகர் ரவீந்திர கரவிட்ட தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஓக.30

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிராம அலுவலகர் பிரிவுகளில் சிவில் பாதுகாப்புக் குழுக்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர் ரவீந்திர கரவிட்ட தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, மஞ்சந்தொடுவாயிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிவில் பாதுகாப்புக் குழுக்களின் தலைவர்கள், முச்சக்கரவண்டிச் சாரதிகள், சங்க அங்கத்தவர்கள், பொலிஸார் ஆகியோருக்கு இடையிலான கலந்துரையாடல் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

இந்தத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலர் பிரிவுகளிலுமுள்ள 345 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் சிவில் பாதுகாப்புக்குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன. பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் ஆலோசனைக்கமையவும் பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமையவும் சிவில் பாதுகாப்புக் குழுக்களை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றார். (ச)

# வாகரைக்கு புதிய படைத்தளபதி

மட்டக்களப்பு , ஓக.30

மட்டக்களப்பு வாகரை 233 ஆவது படைப் பிரிவின் தளபதியாகக் கடமையாற்றி வந்த கேணல் திலக் வீரக்கோன் கொழும்பு இராணுவ தலைமையகத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதைத் தொடர்ந்து வாகரை பிரதேசத்துக்கான புதிய தளபதியாக கேணல் குமார் ஜெயபுத்திரன நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பிரதேசத்தில் கடந்த 3 வருடகாலமாக கேணல் திலக் வீரக்கோன் கடமையாற்றி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச)

# அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

இந்த வருடம் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்கென 2.2 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் தற்போது நடைபெற்று வரும் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(ச)

# இரட்டைப் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய ஆறு சந்தேக நபர்கள் கைது

அப்புத்தளை, ஓக.30

அப்புத்தளை, தொட்டலாகல பிரதேசத்தில் இடம்பெற்ற இரட்டைப் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொட்டலாகல தோட்டத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிறீஸ் பூதம் என்ற அச்சம் காரணமாக இந்தப் பிரதேசத்துக்குப் பாய் வியாபாரம் செய்யச் சென்ற இரண்டு நபர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகளின் மூலம் இந்தச் சந்தேக நபர்களைக் கைது செய்ய முடிந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல்களில் படுகாயமடைந்த இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:**
கொடுத்த வாக்கை எப்பாடுபட்டாவது காப்பாற்றுவீர்கள். பணிபுரிவோர் சில வேலைகளைச் செய்ய மறப்பதன் மூலம் அதிகாரிகளின் கண்டிப்பிற்கு ஆளாகலாம். குல தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். வெளியிடம் ஒன்றுக்குச் செல்ல திட்டமிட்டு இறுதி நேரத்தில் அதை ஒத்தி வைக்கலாம்.

**இடபம்:**
நீங்களாக சில வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வீர்கள். ஆதாயத்தை எதிர்பார்த்து நண்பர்கள் சிலர் உங்களிடம் பழகுவதை அறிந்து கொள்வீர்கள். வாகனப் பயணங்கள் உற்சாகம் தருவதாக அமையலாம். நீங்கள் பெரிய அளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம்.

**மிதுனம்:**
சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் செயற்பட்டு சாதனை படைப்பீர்கள். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். போட்டி, பந்தயங்களில் வெற்றி காண்பீர்கள். உங்களைப் பற்றி அவதூறாகப் பேசி வந்த சிலர் மனம் மாறி பாராட்டுவர். தொழில் விடயங்களில் அதிக கவனத்துடன் செயற்படுவீர்கள். பணவரவுகளைப் பெறலாம்.

**கடகம்:**
அலைச்சல் குறைந்து இருந்து ஒய்வு கிடைக்கும் நாள். தாய் வழி உறவுகள் மூலம் சில வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். உடன் பிறப்புகள் உங்களிடம் உதவி கேட்கலாம். கடன் மிகுதி ஒன்றை கஷ்டப்பட்டு வசூலிக்க நேரிடலாம். மருத்துவச் செலவுகளைத் தவிர்க்க உடல் நலத்தில் கவனம் அவசியம். நண்பர்கள் வழியில் திடீர் உதவி கிடைக்கும்.

**சிங்கம்:**
மனதில் நல்ல சிந்தனைகள் குடிகொள்ளும் நாள். நண்பர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். மாற்று மொழி பேசும் அயலார் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். நாள் முழுவதும் உற்சாகமா கச் செயற்படுவீர்கள். நாளை சந்திக்க நினைத்த ஒருவரை இன்றே சந்திக்கலாம்.

**கன்னி:**
சிலர் உங்களைப் பாராட்டிப் பேசி காரியம் சாதிக்கலாம். வெளியூர் பயணங்களால் செலவுகளைச் சந்திக்கலாம். உறவினர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். பிள்ளைகளின் மனப்போக்கை அறிந்து கொண்டு செயற்பட முற்படுவீர்கள்.

**துலாம்:**
மற்றவர்களுக்காக நீங்கள் சில வேலைகளை ஏற்றுச் செய்யலாம். எதிர்பார்த்த பணவரவுகள் மட்டுமின்றி, எதிர்பாராத பணவரவுகளையும் பெறலாம். பழைய நண்பர்கள் சிலரைச் சந்திக்க நேரிடலாம். உங்களின் திறமையை குடும்பத்தினர் புரிந்து கொள்வர். சில வேலைகளைத் தாமதமாகத் தொடங்கினாலும், சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். வளம் பெறும் நாள்.

**விருச்சிகம்:**
குடும்பப் பெரியவர்களை மதித்து அவர்களின் அன்பைப் பெறுவீர்கள். குடும்பத்தினர் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். புதிய பொருள்கள் வாங்குவதில் நாட்டம் செல்லும். நீண்ட நாள் கடன் மிகுதி ஒன்றை முடிவுக்கு கொண்டு வருவீர்கள். பிரியமான சிலருடன் ஏற்பட்ட பிணக்குகள் நீங்கி பாசம் அதிகரிக்கும். சுலபமாக சில வேலைகள் முடியும்.

**தனுசு:**
தெரிந்த சிலருக்காக உத்தரவாதம் கொடுக்கலாம். உறவினர்கள் வழியில் திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரைப் பார்க்க நேரிடலாம். குடும்ப உறுப்பினர்களுக்குத் தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். கனவுத்தொல்லையுண்டு.

**மகரம்:**
பெரிய அளவில் திட்டமிட்ட காரியம் ஒன்று பிசுபிசுத்துப் போகலாம். மறதியால் கடும் அவதிகளுக்கு, அலைச்சல்களுக்கு ஆள்படலாம். பிள்ளைகள் உடல் நலன் தொடர்பான விடயங்களில் அக்கறை அவசியம். உங்களின் பொறுமையைச் சோதிக்கும் வகையிலான நிகழ்ச்சி கள் நடக்கலாம். வீண் பிடிவாதங்களைத் தவிர்க்க வேண்டிய நாள்.

**கும்பம்:**
குடும்ப உறுப்பினர்கள் இடையே ஏற்பட்ட மோதல்கள் விலகும். மனைவி வழியில் மனதிற்கு இனிய சம்பவங்கள் நடக்கலாம். வியாபாரிகள் வேலையாள்களால் சிரமங்களுக்கு ஆள்படலாம். எந்த விடயத்திலும் பிடிவாதம் செய்யாமல் விட்டுக் கொடுத்துச் செல்வீர்கள்.

**மீனம்:**
வீட்டைச் சீரமைப்பதில், பராமரிப்பதில் நாட்டம் செல்லும். மற்றவர்கள் குணம் அறிந்து நடந்து கொள்ள முற்படுவீர்கள். வியாபாரிகள் கடன் மிகுதிகள் வசூலாகி திருப்தி அடைவர். தொலைபேசி வழியில் எதிர்பாராத செய்திகளைக் கேட்கலாம். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. உதிரி வரவுகள் வரலாம்.

# நாவாந்துறையில் அரங்

# தமிழரி
# உணர்வுக
# சீண்டிவி
# ஓர் அங்

அல்பிரட் யூலின் பாரிசவாத நோயால் பாதிக்கப்பட்டவர். இவருக்கு ஒருகால் ஒரு கை என்பன இயங்காது. குணராசா ராசகுமார் கண்பார்வைக் குறைபாடுடையவர். மாலையானதும் இவர் வீட்டுக்குள் முடங்கிவிடுவார். வழமைபோல் இந்த விசேட தேவைக்குரிய இருவரும் அன்று வீட்டாரின் உதவியை எதிர்பார்த்தபடி இருந்தார்கள். ஏதும் அறியாத இவர்கள் மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு சிறைக் காவலில் வைக்கப்பட்டனர். தற்போது விடுவிக்கப் பட்டுள்ள இவர்கள் பொலிஸ் பாதுகாப்பில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றனர்.

கடந்த 22 ஆம் திகதி இரவு நவாந்துறையில் இராணுவத்தினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் பின்னர் அடி தடியாக மாறியது. இதனால் ஆத்திரமடைந்த இராணுவத்தினர் வீடுவீடாகச் சென்று ஆண்களை அடித்து இழுத்துச் சென்றனர். நாவாந்துறைக்குள் என்ன நடக்கிறது என்று வெளியாள்களால் அறிய முடியவில்லை. சம்பவத்தைச் செய்தியாக்கச்சென்ற செய்தியாளர் ஒருவரும் மயிரிழையில் தப்பிவந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. ஒரு சிலர் தமக்கு ஏற்பட்டுள்ள நிலையைத் தொலைபேசிமூலம் பத்திரிகை நிறுவனங்களுக்கும் அரசியல் பிரமுகர்கள் சிலருக்கும் அவ்வப்போது தெரிவித்தது மட்டுமன்றி தம்மை காப்பாற்றுமாறும் வேண்டிக் கொண்டனர்.

ஆனால் இராணுவக் குவிப்புக்களால் அவர்களுக்கு எவராலும் உதவமுடியவில்லை.

வசந்தபுரம் குடியிருப்பு, இரவு பத்தரை, பதினொரு மணியிருக்கும் நாவாந் துறை பக்கமாக தொடர்ச்சியான வேட்டொலிகள். இந்த கிராம மக்கள் அச்சத்தின் காரணமாக ஒன்று சேர்ந்து தமது வீடுகளின் முன்பாக நின்றிருந்தனர். வேகமாக யாரையோ துரத்திக்கொண்டு வருவது போல இராணுவத்தினர் எங்கள் குடியிருப்பு நோக்கி வந்தனர். இவர்களைக் கண்டவுடன் எங்கள் கணவன்மார் ஆண்பிள்ளைகள் எல்லோரும் எதிரிலிருந்த ஊர்பகுதிநோக்கி தப்பி ஓடிவிட்டனர். எங்களோடு இராணுவத்தினரால் பிடித்துச்செல்லப்பட்ட ராசகுமாரும் உடல் இயலாத தாத்தாவும் இருந்தனர்.

வந்த மாத்திரத்திலே ராணுவம் இவர்கள் இருவரையும் கைது செய்தது. எந்த காரணமும் அறியாத இந்த கிராம மக்கள் அதிர்ச்சியில் ஆழ்ந்துபோயிருந்தனர்

**இரவு இரண்டரைமணி இருக்கும்**

நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈ.சரவணபவன், விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் நாவாந்துறை மக்களுக்கு ஏற்பட்ட அவலத்தை பார்வையிடச் சென்று இராணுவத்தினரின் அனுமதி கிடைக்காத நிலையில் ஒட்டுமடம் வீதியூடாகவாவது அந்த மக்களிடம் செல்லலாம் என்ற ஆதங்கத்துடன் சென்றனர். ஆனால் அந்த முயற்சியும் கைகூடவில்லை. திரும்பும் வழியில் வசந்தபுரம் மக்கள் இவர்களிடம் நடந்தவற்றைக் கூறி கதறியழுதனர்.

அந்த கூட்டத்திலிருந்து தாய் ஒருத்தி ஓ.. வென்ற தொனியில் அழத்தொடங்கினார்.

''ஐயா! என்ர பிள்ளைக்கு கண்தெரியாது அவனை ஒண்டும் செய்யாதைங்கோ! என்று நான் கத்த கத்த எனக்கும் அவங்க கொண்டு வந்த கொட்டானால இடுப்பில அடிச்சுப்போட்டு என்ர பிள்ளையக் கொண்டுபோட்டங்களய்யா! தெய்வமே நான் என்ன செய்வேன்? எனக்கு புருசனும் இல்ல பிள்ளைக்கும் கண்பார்வை குறைவு. எனக்கு எந்த உதவியும் இல்ல. நான் யாவாரம் செய்துதான் என்ர பிள்ளையளப் பாக்கிறனான். என்ர பிள்ளையக் கொண்டுபோய் என்ன செய்யிறாங்களோ தெரியாது. அந்த தாயின் அழுகை தொடர்ந்தது. ஒரு மணியளவில் தாத்தாவை இராணுவத்தினர் விடுவித்து விட்டனர். அவர் ஒருபடியாக வீடுவந்த சேர்ந்த விட்டார். ஆனால் ராசகுமார் பற்றி அப்போது செய்தியில்லை.

**மறுநாள் இரவு பத்தரை இருக்கும் –**

ராசகுமார் கதிர்வீச்சு பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் பலபேரது வரிசையில் சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்தான். அவனிடத்திலிருந்து வார்த்தைகள் எதுவும் வரவில்லை. கடுமையாகத் தாக்கப்பட்டு உட்காயங்களுக்கு ஆளான நிலையில் பரிசோதனைக்காக காத்திருந்தான். எந்த விதத்திலும் எவருக்கும் இடையூறின்றி வீட்டில் முடங்கிப் போயிருந்த ராசகுமார் இன்று



கட்டைகளாலும் பொல்லுகளாலும் தாக்கப்பட்டு இருக்கும் வியாதிக்கு மேலதிகமாக நோயாளியாக்கப் பட்டுள்ளான். போதாக் குறைக்கு குற்றவாளியாக்கப் பட்டும் உள்ளார். இதுதான் எங்கள் நாட்டு நீதியா என்ற கேள்வி எழுகின்றது.

**பாதிக்கப்பட்டவர்களது வாக்குமூலம்**

நாவாந்துறையில் கடந்த திங்கள் இரவு படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து செவ்வாய்க்கிழமை அதிகாலை தம்மைக் கைது செய்த படையினர் ஆடைகளைக் களைந்து நிர்வாணமாக்கிவிட்டு, கதறக் கதறத் தாக்கினர் என்பது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றபோது பாதிக்கப்பட்டவர்கள் அளித்த பரபரப்பு வாக்கு மூலம்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் போதனா வைத்திய சாலையில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்ட 102 பேரிடமும் சட்ட மருத்துவ அதிகாரியால் பெறப்பட்ட வாக்கு மூலங்களே இவை.

தமது கணவன்மாரை விடுவிக்குமாறு கேட்டுச் சென்ற பெண்கள் சிலரை இராணுவத்தினர் பாலியல் ரீதியில் துன்புறுத்தி மானபங்கப்படுத்தினர் என்றும் குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு பக்கக் கை, கால் வழங்காமல் பாரிசவாத நோய்க்கு சிகிச்சை பெற்று வந்தவர், மாலைக் கண் நோயுள்ளவர், முள்ளந்தண்டு வழங்காதவர், மன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கேறிய நாடகம்;

# ழரின்

# வுகளை

# விடும்

# ருங்கம்



அழுத்தத்துக்குச் சிகிச்சை பெற்று வந்தவர் என்று எவரையும் விட்டு வைக்காது காட்டுமிராண்டித் தனமாக இராணுவத்தினர் தாக்கியுள்ளனர் என்று யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற மருத்துவ சோதனைகள் மற்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவதினம் அதிகாலை ஒரு மணி முதல் இரண்டு மணிவரை கைது செய்யப்பட்ட தாம் சென்

நீக்கலஸ் மைத்தானத்தில் வைத்து காலை மூன்று மணிவரை சரமாரியாகத் தாக்கப்பட்டனர் என்று காயமடைந்தவர்கள் வாக்குமூலம் அளித்துள்ளனர். ''பெண் பொலிஸார் தமது சப்பாத்துக்களைக் கழற்றி எம்மை அடித்தார்கள்'' என்று இருவர் தமது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கியின் பின்பக்கப் பிடியாலும், சப்பாத்துக் கால்களாலும் உதைக்கப்பட்டதாலும், வயர்கள் மற்றும் இரும்புப் பொல்லுகளால் தாக்கப்பட்டதாலும் ஏற்பட்ட காயங்களை இவர்களது உடல்களில் காணமுடிகிறது.

**பெற்ற தாயின் முன்பாகவே நிர்வாணமாக்கப்பட்டனர்**

செபமாலை அன்ரனி குயின் (வயது33), மரிஷ் ரொட் ஆகிய இருவரும் பெண் பொலிஸாரால் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டுள்ளனர். ''அவர்களது சப்பாத்துக்களைக் கழற்றி எம்மை அடித்தனர்'' என்றனர் அவர்கள். ரீ.அன்ரனி (வயது23), ஏ.ஆர்.சூசை, பாலதுரை சகாயராஜா (வயது33) ஆகிய மூவரையும் இராணுவத்தினர் நிர்வாணமாக்கிவிட்டு தாக்கியுள்ளனர். ''கட்டியிருந்த சாறத்தினைக் கழற்றி எமது கைகளை கட்டிவிட்டு அடித்தனர்'' என்றனர் அவர்கள். இவர்களில் பாலதுரை சகாயராஜா அவரது பெற்ற தாயின் முன்பாகவே நிர்வாணமாக்கித் தாக்கப்பட்டுள்ளார்.

அதனைத் தடுக்க முயன்ற அவரது தாயாரையும் இராணுவத்தினர் தாக்கியுள்ளனர்.

**பெண்களும் பாலியல் ரீதியில் துன்புறுத்தப்பட்டனர்**

கைது செய்து கொண்டு செல்லப்பட்ட தமது கணவன்மாரை விடுவிக்குமாறு கேட்கச் சென்ற பெண்களை பாலியல் ரீதியில் துன்புறுத்தியதுடன் இராணுவத்தினர் மானபங்கப்படுத்தினர் என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது. இவ்வாறு பாதிக்கப்பட்ட இரு பெண்கள் சிகிச்சை பெறுவதற்காக யாழ். போதனா வைத்திய சாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு வந்துள்ளனர்.

**செந்தில்குமார்**

விடுதியில் தங்கியிருந்தே சிகிச்சை பெறவேண்டும் என்று அவர்களிடம் தெரிவிக்கப்பட்டதையடுத்து அவர்கள் வீடு திரும்பியுள்ளனர். ''வீட்டில் கணவன்மாரும் இல்லை. நாங்களும் இங்கே வந்துவிட்டால் பிள்ளைகள் தனித்து விடுவார்கள்'' என்று கூறிவிட்டு அவர்கள் திரும்பி விட்டதாக அறிய முடிந்தது.

கிறிஸ் பூத விவகாரத்தை வைத்து தமிழ் மக்களை மேலும் துன்பத்துக்குள்ளும் நெருக்கடிக்குள்ளும் தள்ளிவிடும் முயற்சியில், அதாவது தமிழ்மக்களது நிம்மதியான வாழ்வை விரும்பாத சக்திகளின் அநாகரிக செயல், விசேட தேவையுடைய பிள்ளைகளையும் வீண்பழி சுமத்தி குற்றக்கூண்டுவரை அனுப்பியுள்ள செயல் என்பவற்றுடன் ஒட்டுமொத்தமான மக்களையும் வீண்வம்புக்கு இழுத்து அவர்களை கடுமையாகத்தாக்கி அவர்களது எதிர்கால வாழ்வைப் பாழாக்கும் இவ்வாறான செயற்பாடுகளை எந்த நாட்டின், சர்வதேசத்தின் மனிதாபிமான, மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் நோக்குவது என்பதே இன்று தமிழ்மக்களின் கேள்வியாக உள்ளது. ✱




## அற்புதம் நிகழ்த்தும் கற்பக விநாயகர்



கொஞ்சம் பருமனாக இருக்கும் ஒருவர் வேகமாக நடந்தாலேயே எமக்குச் சிரிப்பு வரும்.. அவ்வாறிருக்க நாட்டியம் ஆடினால் யாருக்குத் தான் சிரிப்பு வராது. அப்படி சிரித்த ஒருவரைப் பார்த்து ஊரே சிரிக்கும் படி ஆனகதை ஒன்று உண்டு.

அன்று விநாயகப் பெருமானுக்கு அளவற்ற சந்தோஷம். என்ன மகிழ்ச்சியோ தெரியவில்லை, பருத்த உடம்பு என்று கூடப் பாராமல் ஆடத்தொடங்கிவிட்டார். தொந்தி குலுங்க துதிக்கை அசைய, தத் திமி என்று சத்தம் முழங்க, நர்த்தன விநாயகர் நாட்டியம் புரிந்தார். பார்க்கிற பலருக்கும் சிரிப்பு வந்தாலும்பெரிய இடத்துப் பிள்ளை என்று மனதுக்குள் பல் தெரியச் சிரித்துக் கொண்டனர். ரொம்ப அழகானவன் என்று தலைக்கனம் பிடித்த சந்திரனுக்கோ சிரிப்பை அடக்கமுடியவில்லை. அழகே உருவான தான் ஆடினால் அழகாக இருக்கும். இந்தக் குண்டுக்குழந்தை ஆடுகிறதே என்று அட்டகாச மாய் சிரித்துவிட்டான்.

அவ்வளவுதான்... ''அழகன் என்ற கர்வமா? அது அழியட் டும்' என்ற பாணியில் பிள்ளையார் சபிக்க, சயரோகம் பிடித்தமாதிரி ஒவ்வொரு கலையாகக் குறைந்து எலும்பும் தோலுமாக ஒளியிழந்துபோனான் சந்திரன். அவனைப் பார்க்க அருவருப்புற்று யாருமே பார்க்காது ஒதுக்கினர். பிரமனிடம் போய் பரிதாபமாக அழு தான் சந்திரன். 'பெரிய மனம் கொண்டு மன்னிக்கவேண்டும்' என்று பிள்ளையாரிடமே சிபாரிசு செய்தார் பிரம்மா. எந்தத் தப்புக்கும் ஓரளவே தண்டனை வேண்டும். வருந்தினால் மன்னிப்பும் வேண்டு மல்லவா? இரக்கமே வடிவான பிள்ளையார் இளகினார்.

தண்டனையை வருடத்தில் சில நாள்கள் மட்டும் அனுபவிக்கட்டுமே என்று திருவுள்ளம் கொண்டு ''வளர்பிறை சதுர்த்தியில் உன்னைக் காண்பவர்கள் வீண்பழி, துயர் அடைவார்கள். ஆனால் ஆவணி மாத வளர்பிறை சதுர்த்தியில் விரதம் இருந்து என்னை வணங்கினால் அத்துயர் விடுபட்டு ஆனந்தம் அடைவார்கள்'' என்று நிபந்தனையோடு கூடிய நீந்தனை-மற்றும் வந்தனை- என்று தண்டனையை மாற்றினார் விநாயகர். 'உருவு கண்டு எள்ளாமை வேண்டும்' என்கிற உயரிய திருக்குறளின் உண்மை இது.

விநாயகர் சதுர்த்தி அன்று இந்த விரதம் பெருமளவு அனுஷ்டிக்கப்படும். தலம்- பிள்ளையார் பட்டி. ''நாலாம் பிறை பார்த்தால் நாய்படாதபாடு'' என்ற பழமொழி வருத்த, வீண் பழி நீங்க விரதம் இருக்கும் அன்பர்களால் நிரம்பி வழியும் நாள் விநாயகர் சதுர்த்தி நாள். அதிலும் பெண்கள் கூட்டம் அதிகம் என்கிறார்கள். வீண்பழி பெண்களுக்குத்தான் அதிகம் வருமோ?

அதுமட்டும் அல்ல. பிள்ளைப்பேறு முதலிய சித்திகள் வேண்டி வரம் கொடுக்க, வள்ளலை வணங்குவதும் இன்றைய வழிபாட்டின் பெருநோக்கம். வளர்பிறை- தேய்பிறை இரு சதுர்த்திகளிலும் விரதம் இருப்பவர்களும் உண்டு. இப்படி விரதம் இருப்போர்ஆளுக்கு ஒரு குடம் வைத்து குடத்துள் வெள்ளிப் பிள்ளையாரை விட்டு நீர் நிரப்பி, பூசை செய்வது புரிவது தனிச்சிறப்பு. பிறகு குடத்து நீரைத் தமக்கு அபிஷேகம் செய்து கொள்ளப் பழிபாவம் நீங்குகிறது. கனிந்த உள்ளத் தோடும் நனைந்த உடையோடும் கற்பக விநாயகர் காலடி தொழுது தீபாராதனை தரிசித்துக் கவலை குறைத்தோர் பற்பலர் இங்கு. அன்று பிரசாதம் மட்டுமே உணவு.

பிள்ளையார் பட்டிப் பிள்ளையாருக்கு என்று பிரத்தியேகமான பெருமைகள் சில உண்டு. மலையிலேயே செதுக்கப்பட்ட மூர்த்தி இவர். பிள்ளையார் வழிபாட்டில் ஒரு வேடிக்கையான வழக்கம் உண்டு. கோயில் கட்டி, பிரதிஷ்டை செய்யவேண்டிய சிலையைச் செதுக்கிச் செய்யாமல் எங்கிருந்தாவது கொண்டு வருவது சிலர் பழக்கம். ஆம்; எங்காவது பூசித்த மூர்த்தியை இரவோடு இர வாகத் திருடிக் கொண்டு வந்து பிரதிஷ்டை செய்தால் பலன்அதிகம் என்றொரு நம்பிக்கை உண்டு.

இதற்குக் காஞ்சி மகா சுவாமிகள் சுவையான விளக்கம் சொல்வார்கள். 'இப்படி ஒரு நம்பிக்கை இருப்பதால், எங்கே நம் ஊர் பிள்ளையார் திருட்டுப்போய் விடுவாரோ என்று கண்ணும் கருத்துமாகக் கவனிப்பார்கள். அதுவும் நல்லதுதானே! என்பார்கள்.

தேவலோகத்தில் உள்ள கற்பக விருட்சம் கேட்டதெல்லாம்தரும். பொன், பொருள், புகழ், நலம் எல்லாம் தரும். ஆனால் ஒன்றை மட்டும் தராது! எது அது? 'உன்னையே தா!' என்றால் அது தன்னைத் தவிர எது வேண்டுமானாலும் தரும். நம் கற்பகப்பிள்ளையாரே தன்னையே தருவார். அது மட்டுமா... அந்தக் கற்பக விருட்சம் அறிவற்றது. யாராவது தீமையைக்கேட்டால் அழிகின்ற தீமையையும் தரும். இந்தக் கற்பகமோ தீமையைத் தராது. அது விருட்சம். இது மூர்த்தி. சகல செல்வங்களையும் தன்னுள் குவித்துள்ள தெய்வக் களஞ்சியம் என்கிறார் கவிஞர்.

**சுகி. சிவம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய தீர்த்தத் திருவிழாவன்று ஆலய மஹோற்சவ குரு மதுசூதனக் குருக்கள் ஆலய பரிபாலன சபையினரால் கௌரவிக்கப்பட்டார். (ம)

# சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு வங்கிகள் அபிவிருத்திக் கடன்களை அறிமுகம் செய்கின்றன

## கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்

யாழ்ப்பாணம்,ஒக.30

கூட்டுறவுத்துறையில் உள்ள சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு வங்கிகள் கூட்டுறவு அபிவிருத்திக்காகப் பரந்துபட்ட கடன் திட்டங்களை அறிமுகம் செய்து வருகின்றன.

அவற்றை உரிய வகையில் கூட்டுறவுத் துறையினர் பெற்று அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். பாலச்சந்திரன்.

யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் 89 ஆவது கூட்டுறவு தினத்தை யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் முதலாவது மாடியில் நடத்தியது.

கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது போட்டிப் பொருளாதாரத்தை நோக்கி உலகம் சென்று கொண்டிருக்கின்றது. பல திட்டங்கள், கோரிக்கைகள் என்பவற்றை புதிது புதிதாக ஆரம்பித்துக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் கூட்டுறவு இயக்கமும் தனது செயற்பாட்டை புத்துயிருடன் மேற்கொண்டு வருகின்றது.

கூட்டுறவுக்குத் தேவையான நிதியை ஒவ்வொரு சங்கமும் செய்யும். 2006 ஆம் ஆண்டளவில் ஏகபோக உரிமையோடு இருந்த நாம் தற்போது வீழ்ச்சி கண்டுள்ளோம்.

பல வங்கிகள் யாழ்ப்பாணத்தில் திறந்து செயற்பாடுகளில் ஈடுபட்டாலும் கூட்டுறவு வங்கிகளுக்குத் தனிச் சிறப்பு உண்டு. அனைத்து மக்களுக்கும் அருகில் உள்ள வங்கிகளும் கூட்டுறவு துறைக்கு அதிகளவான சேவைகளைச் செய்கின்றன.

தலை நிமிர்ந்து நிற்கக்கூடிய வங்கி. மனித வலுக்களைக் கொண்டு பலப்படுத்தக் கூடியது. அறிமுகப்படுத்தப்பட்டுவரும் கடன் திட்டங்களை சங்கங்கள் கருத்தில் கொண்டு தமது சங்கத்தையும் வியாபாரத்தையும் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

கிராம மட்டங்களில் சங்கத்துக்கும் சமாசத்துக்கும் வங்கிகள் பாலமாக இருந்து செயற்பட்டு வருகின்றன. மக்கள் கூட்டுறவின்பால் இணைக்கப்பட்டு இளைய சமுதாயத்தையும் வளப்படுத்த வேண்டும்.- என்றார். (ம-311)

## கவிதைப் போட்டி வெற்றியாளர்

யாழ்ப்பாணம், ஒக.30

கலாசார அலுவல்கள் திணைக்களம் 2011 ஆம் ஆண்டுக்காக நடத்திய தேசிய இலக்கியப் போட்டித் தொடரில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கான கவிதை திறந்த போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:

சிவநாமம் சிவதாசன் (ஜே/95), திருமதி ஆரவி சிவகுகன் (ஜே/124), சிற்றம்பலம் சிவஞானராஜா (ஜே/124), திருமதி ஆரணி முகுந்தன் (ஜே/104).

தேசிய இலக்கியப் போட்டிகளின் ஏனைய முடிவுகள் ஏற்கனவே வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சிற்பக் கண்காட்சி அடுத்தமாதம் முதல் வாரம்

அரச ஓவிய சிற்பக்கண்காட்சி எதிர்வரும் செப்ரெம்பர் முதல் வாரத்தில் நடைபெறவுள்ளது. இக்கண்காட்சியில் கலந்து கொள்ள விரும்பும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்தவர்கள் பிரதேச செயலகத்தில் தமக்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இது தொடர்பான விவரங்களை நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பகுதியுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம் எனவும் நல்லூர் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ம-7)

# சமூகத்தை யாரும் விற்பதற்கு ஒருபோது இடமளிக்கக் கூடாது

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் தளுவத்த

யாழ்ப்பாணம், ஒக.30

சமூகத்தை யாரும் விற்பதற்கு இடமளிக்கக்கூடாது. இன்று பல இடங்களிலும் லஞ்சமும் ஊழலும் காணப்படுகின்றன. இத்தகைய செயற்பாடுகளை சிவில் பாதுகாப்புக் குழுக்கள் கட்டுப்படுத்த முன்வரவேண்டும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் என்.டி தளுவத்த இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்களுடனான சந்திப்பு யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் தலைமையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நாட்டில் நிலவும் சமாதானத்தைக் குழப்பும் செயற்பாடுகளில் ஒரு பகுதியினர் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலைமைக்கு யாரும் இடமளிக்கக் கூடாது. அதனையிட்டு சிவில் பாதுகாப்புக் குழுக்கள் கூடிய கவனம் எடுக்க வேண்டும். சுமார் 30 வருட கால இடைவெளியின் பின்னர் இன்று மக்கள் அமைதியாகவும் சமாதானமாகவும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள்.

உங்களுடன் ஒத்துழைப்பதற்கு பிரதேச செயலக அதிகாரிகள், பிரதேச சபை அதிகாரிகள், கிராம அலுவலர்கள் மற்றும் அரச ஊழியர்கள், பொலிஸார் எனப் பல தரப்பினரும் உள்ளனர்.

சிவில் பாதுகாப்புக் குழுக்கள் வடக்கு, கிழக்கில் மட்டும் இயங்கவில்லை. நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இயங்கிக் கொண்டு இருக்கின்றன.

சிவில் பாதுகாப்புக் குழுக்கள் சட்ட, திட்டங்களை நன்கு அறிந்திருப்பதுடன் அதனை மக்களும் அறிந்து கொள்ள உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலமே சிவில் பாதுகாப்புக் குழுக்கள் நல்ல முறையில் இயங்க முடியும்.

கிளிநொச்சி மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து எமக்கு நன்கு தெரியும். இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். உங்களுக்கு பிரச்சினைகள் ஏற்பட்டால் உடன் நினைவுக்கு வருவது பொலிஸார்தான். பிரச்சினைகள் முடிவடைந்ததும் நீங்கள் பொலிஸாரை மறந்துவிடும் நிலைமை காணப்படுகின்றது.

இந்த நிலைமை மாற வேண்டியது அவசியம். பொலிஸ் நிலையங்களில் மக்களுக்கு உரிய முறையில் தீர்வுகள் கிடைக்கப் பெறுகின்றதா என்பதை கண்காணிக்க வேண்டிய பொறுப்பு சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு உரியதாகும்.- என்றார். (ம-68)

# தென்மராட்சி வலய பாடசாலை மாணவரின் விஞ்ஞான வினாடி வினாப் போட்டி முடிவுகள்

தென்மராட்சி, ஒக.30

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் - 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளின் மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட வலய மட்ட தமிழ், ஆங்கில மொழிகளிலான விஞ்ஞான வினாடி வினாப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரம் வலயக் கல்வி அலுவலகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த மாணவர்கள் மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளதால் இவர்களுக்கான வழிகாட்டல்களை பாடசாலைகளில் நடத்துமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

### தமிழ் மொழி மூலம்

தரம்- 6 அச்சுதன் கீர்த்தனன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சிவசுப்பிரமணியம் டனுஜன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), அன்பழகன் அறிவமுதன் (கச்சாய் அ.த.க.பாடசாலை).

தரம்- 7- குணரத்தினம் கம்சிகா (சாவகச்சேரி இந்து), தயாபரன் லதிசனா (சாவகச்சேரி இந்து), சுப்பிரமணியம் சுப்ஸ்ரன் (நாவற்குழி ம.வி.).

தரம்- 8 - ரவிக்குமார் [illegible] (சாவகச்சேரி இந்து), குணேஸ்வரன் பவித்ரா (சாவகச்சேரி டிறிபேக்), சிவராஜா மேனகா (சாவகச்சேரி இந்து).

தரம்- 9- சிவப்பிரகாசம் கார்த்திகா (சாவகச்சேரி இந்து), பொன்னம்பலம் தனுசிகா (மீசாலை வீரசிங்கம் ம.வி.), அன்பரசன் தேனுசா (சாவகச்சேரி டிறிபேக்).

தரம்- 10- சூரியகுமாரன் துலக்ஸி (சாவகச்சேரி இந்து), சித்திரசேனன் சபிதா (சாவகச்சேரி டிறிபேக்), சிவபாதசுந்தரம் கஜானன் ( மீசாலை வீரசிங்கம் ம.வி.).

தரம்- 11 - இராஜகுலேந்திரம் பிள்ளை கீர்த்தனா (வரணி ம.வி.), மார்க்கண்டு தேனுஜா (உசன் இராமநாதன் ம.வி.), இராஜேஸ்வரன் ரஜிதரன் (வரணி ம.வி.).

### ஆங்கில மொழி மூலம்

தரம்- 6- ஜெயரூபன் குணரூபா ( மீசாலை வீரசிங்கம் ம.வி.), சிவஞானலிங்கம் யாதவன் (மீசாலை வீரசிங்கம் ம.வி.), இளங்குமரன் செல்விஜா (சாவகச்சேரி மகளிர்).

தரம்- 7 - கனகேஸ்வரன் கவிப்பிரியா (மீசாலை வீரசிங்கம் ம.வி), ரங்கநாதன் மோனிஷா (மீசாலை வீரசிங்கம் ம.வி.), சிவயோகன் பியுலா (மீசாலை வீரசிங்கம் ம.வி.).

தரம்- 8 - தர்மலிங்கம் பாசுபதன் ( மீசாலை வீரசிங்கம் ம.வி.), சிவானந்தம் சோபனா- (சாவகச்சேரி இந்து), ரவீந்திரன் மதுஷா- (சாவகச்சேரி இந்து).

தரம்-9 - சிவபாலன் கிரிஷிகா (சாவகச்சேரி இந்து), அருணாசலம் ஜெனீசன் (மீசாலை வீரசிங்கம் ம.வி.).

தரம் 10- சிவானந்தம் இனோஜா (மீசாலை வீரசிங்கம் ம.வி.), ரங்கநாதன் சிந்துஜா (மீசாலை வீரசிங்கம் ம.வி.), தவப்பிரகாசம் பிரகாஷ் (சாவகச்சேரி இந்து).

தரம்- 11 - ரதிமோகன் தேனுஷன் (மீசாலை வீரசிங் கம் ம.வி.), மகேஸ்வரன் சைவேசன் (மீசாலை வீரசிங்கம் ம.வி.), மதீசன் தனுஷிகா (மீசாலை வீரசிங்கம் ம.வி.) (ம-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி மோகம் தரும் வினை

தேர்தல் முடிந்து உள்ளூராட்சி சபைகளை அவற்றின் புதிய மக்கள் பிரதிநிதிகள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். கடந்த சில தினங்களில் பல சபைகளில் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. அரசின் தமிழர்கள் மீதான அடக்குமுறைகளுக்கு மத்தியிலும், சலுகைகளைவிட உரிமைகளே பெரிது என்று மக்கள் பெரும்பாலான சபைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கையளித்த நிலையில், பதவியேற்கும் சபைகளின் மீதான எதிர்பார்ப்பு அதிகமானது.

அரசையும் எதிர்த்துக் கொண்டு, அதன் புறக்கணிப்புக்கு மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது பிரதேச சபைகளில் என்ன செய்யப் போகிறார்கள் என்பதை அறிவதில் மக்கள் ஆர்வமாக இருக்கிறார்கள். அதே சமயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எதையாவது உருப்படியாகச் செய்து பெயர் எடுத்து விடக் கூடாது என்பதில் அமைச்சர் டக்ளஸூம் அரச தரப்பும் மிகக் கவனமாக இருக்கின்றன. அதனாலேயே கூட்டமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் எந்த ஒரு சபையின் கூட்டத்துக்கும் அரச தரப்பு உறுப்பினரைச் செல்லக்கூடாது என்று அமைச்சர் டக்ளஸ் உத்தரவிட்டுள்ளார்.

இணக்க அரசியல் என்றும், யாழ். மாநகர சபையில் அரச மற்றும் எதிர்க் கட்சிகள் பேதமின்றி அபிவிருத்திக்குப் பங்களிக்க வேண்டும் என்றும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தும் அமைச்சர் டக்ளஸ், கூட்டமைப்பு வென்ற காரணத்தாலேயே அந்த நகர சபைகளதும் பிரதேச சபைகளதும் பதவியேற்பு நிகழ்வுகளில் அரச தரப்பு உறுப்பினர்கள் எவரையும் கலந்துகொள்ளக்கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறார். ''எமது பிரதேசத்தின் அபிவிருத்தியில் பங்களிக்க வேண்டும், மக்களுக்கு நல்லதைச் செய்ய வேண்டும் என்று எங்களுக்கும் ஆர்வம்தான், ஆனால் என்ன செய்வது அமைச்சர் போகவேண்டாம் என்று சொல்லிவிட்டதால் நாங்கள் பதவியேற்பு நிகழ்வுக்குச் செல்லவில்லை. எமக்கும் அது கவலைதான்'' என்று தெரிவித்தார் உள்ளூராட்சி சபைக்கு தெரிவான அரச தரப்பு உறுப்பினர் ஒருவர்.

இவ்வாறு யாழ். நகரத்தில் ஒரு மாதிரியும் எதிரணியினர் வென்ற பிரதேச சபைகளில் வேறு மாதிரியும் காழ்ப்புணர்வுகளைக் காட்டும் அரச தரப்பினருக்கு மத்தியிலேயே கூட்டமைப்பின் புதிய தலைவர்களும் உப தலைவர்களும் உறுப்பினர்களும் செயலாற்ற வேண்டி உள்ளது. இந்தச் சவால்களுக்கு மத்தியிலேயே அவர்கள் மக்களுக்காக எதையாவது செய்தாக வேண்டி இருக்கும் நிலையில் கடந்த கால அரசியல் போலன்றி விவேகமான, மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய அரசியலைக் கூட்டமைப்பின் இளம் தலைமுறைத் தலைமைகள் மேற்கொள்ள வேண்டி இருக்கிறது.

முன்மாதிரியான அரசியல் நடவடிக்கைகளைக் கூட்டமைப்பினரிடம் மக்கள் எதிர்பார்த்து நிற்கையில் வெளிப்படும் சமிக்ஞைகள் குழப்பகரமானவையாகவே கிடைக்கின்றன. சாவகச்சேரி நகர சபையின் அபிவிருத்தி மற்றும் குறைநிறைகள் குறித்து மக்கள் கருத்தை அறிந்து நடவடிக்கை எடுக்க இருப்பதாக அதன் தலைவர் அறிவித்திருப்பது ஒரு முன்மாதிரி எனக் கொள்ளலாம். இதற்காக நவீன சந்தை, நூலகம் போன்ற பொது இடங்களில் கருத்துப் பெட்டிகளை வைப்பதற்கு அவர் ஒழுங்கு செய்துள்ளமை வரவேற்கத்தக்கது.

தென்மராட்சியில் இருந்து இப்படியான ஒரு முன்மாதிரிச் செய்தி கிடைக்கும் அதேநேரத்தில் வடமராட்சியில் இருந்து இதற்கு எதிர்மாறான செய்தியே கிடைத்துள்ளது. வல்வெட்டித்துறை நகரசபையின் முதலாவது கூட்டத்தில் தலைவர் உட்பட இரு உறுப்பினர்கள் மட்டுமே பங்கேற்றனர் என்ற செய்தி அதிர்ச்சியை அளித்துள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினது மற்றைய உறுப்பினர்களாலேயே கூட்டம் புறக்கணிக்கப்பட்டதற்கான காரணம் மிகமிக அபத்தமானது. இதன் பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர்களும் இருப்பது அதைவிட மோசமானது.

தேர்தலுக்கு முன்னர் வல்வெட்டித்துறை நகர சபைக்கான தலைவர் பதவி குறித்து ரெலோ கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்துக்கும் தமிழரசுக் கட்சியின் உபதலைவர்களில் ஒருவரான க.குலநாயகத்துக்கும் இடையில் இரகசிய உடன்படிக்கை ஒன்று செய்துகொள்ளப்பட்டிருந்தது. அதாவது தலைவர் பதவியை ஆளுக்குப் பாதி பாதிக் காலத்துக்குப் பிரித்துக்கொள்வது என்பதே அந்த உடன்பாடு.

தமிழர்களின் வாக்குகள் சிதறக்கூடாது என்ற காரணத்துக்காக வல்வெட்டித்துறை இளைஞர்கள் இணைந்தே இந்த இரகசிய உடன்படிக்கையின் கீழ் சிவாஜிலிங்கத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் போட்டியிடச் செய்தார்கள் என்று அந்தப் பகுதியின் முக்கிய சில பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் சொல்கிறார்கள். எனினும் இந்த உடன்படிக்கையானது தமிழரசுக் கட்சியின் வல்வெட்டித்துறைப் பகுதியைச் சேர்ந்தவர்களால் மட்டுமே, குறிப்பாகக் குலநாயகத்தால் மட்டுமே கையாளப்பட்டது என்றும் அது குறித்துக் கூட்டமைப்புக்கு எதுவும் தெரியாது என்றும் கூட்டமைப்பினர் சொல்கிறார்கள்.

சிவாஜிலிங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து போட்டியிடுவதாக அறிவித்ததும், தானே முதன்மை வேட்பாளர் என்று தெரிவித்ததும் இந்த விவகாரம் கூட்டமைப்புக்குள் குழப்பத்தை ஏற்படுத்தியது. அதனை அமைதிப்படுத்துவதற்காக உடனடியாக, யார் விருப்பு வாக்கை அதிகம் பெறுகிறார்களோ அவர்களே சபைகளின் தலைவர்கள் என்று கூட்டமைப்பு அவசரமாக அறிவித்தது. அத்துடன் அந்தக் குழப்பம் முடிவுக்கு வந்தது.

ஆனால், எதிர்பாராத வகையில் வல்வெட்டித்துறை நகர சபையில் வல்வை அனந்தராஜ் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுத் தலைவரானார்.

இப்போது இதுவே குழப்பத்துக்குக் காரணமாகி உள்ளது. விருப்பு வாக்குகள் கூடுதலாகப் பெற்ற காரணத்தால் தனது தலைமைப் பதவியை அனந்தராஜ் விட்டுக் கொடுப்பதற்குத் தயாராக இல்லை. மறுபுறத்தில் தனக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டபடி தலைமைப் பதவி தரப்படவில்லை என்பதில் கோபமடைந்துள்ள சிவாஜிலிங்கம், சபையையின் நடவடிக்கைகளைப் புறக்கணிக்க ஆரம்பித்துள்ளார்.

மறுபுறத்தில் அரைவாசிக் காலமாவது தனக்கும் தலைவர் பதவி கிடைக்கும் என்று எதிர்பார்த்த குலநாயகம் எதுவும் கிடைக்காது என்ற நிலையில் எல்லாக் குழப்பங்களுக்கும் தலைமை தாங்குகிறார்.

விருப்பு வாக்குகளின் அடிப்படையில் சிவாஜிலிங்கம் இரண்டாவது இடத்தைப் பெற்றிருந்தார். ஆனால் குலநாயகமோ ஆறாவது இடத்தையே பெற்றிருந்தார். அப்படி இருந்தபோதும் தலைமைப் பதவியில் தனக்கும் பங்கு வேண்டும் என்று அவர் கேட்கிறார்.

இதற்கிடையே தலைவராகக் கரையோரப்பகுதியைச் சேர்ந்தவர்கள் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் உப தலைவர் பதவியை உட்பகுதிக்குள் வசிப்பவர்களுக்கு விட்டுக்கொடுப்பது என்று காணப்பட்ட ஏற்பாட்டின்படி தனது உப தலைவர் பதவியை சிவாஜிலிங்கம் இராஜினாமாச் செய்துவிட்டார். தேர்தல்கள் ஆணையாளருக்கும் அது பற்றி அறிவித்து விட்டார்.

(26ஆம் பக்கம் பார்க்க)

மண்ணில் 12.01.1958

ஆண்டொன்று கடந்தும்

நீங்கா நினைவலைகள்

விண்ணில் 30.08.2010

திருமதி இஸ்ரெலா பராசக்தி

(முன்னாள் முகாமையாளர், கிராமியவங்கி–
நெடுந்தீவு, அதிபர்–லிட்டில் பிளவர் பாலர் பாடசாலை – திருகோணமலை)



ஆண்டொன்று கடந்தும் ஆறவில்லை எம்துயரம்
எண்ணாத நேரமதில் எமைவிட்டு எங்குசென்றீர்
பூமியின் பொறுமையே! புண்ணியத்தின் பெருமகளே!
அன்புடன் அறன் இணைந்த நல்லதோர் மனைவியாய்
பண்புடன் எமை வளர்த்த பாசமிகு நற்றாயாய்
எல்லோர்க்கும் ஏற்புடைய எமதருமைச் சகோதரியாய்
நல்லதொரு மைத்துனியாய் நாம் விரும்பும் மாமியாய்
அன்புடன் எமையெல்லாம் அரவணைக்கும் அன்ராவாய்
உறவுகளை உபசரித்து உளம்மகிழ வரவேற்ற
உம்சிரித்த முகமும் கனிவுடைய வரவேற்பும்
காணாது ஏங்குகிறோம் கவலையினால் வாடுகிறோம்
உமதாத்துமா சாந்தியடைய அனுதினமும் வேண்டுகிறோம்.

இன்று (30.08.2011) செவ்வாய்க்கிழமை காலை 5.45 மணிக்கு திருகோணமலை புனித மரியாள் பேராலயத்திலும் முற்பகல் 11 மணிக்கு யாழ். புனித அடைக்கல நாயகி ஆலயத்திலும் ஆன்ம இளைப்பாற்றுக்கான திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

5ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

என்றும் நீங்காத நினைவுகளுடன்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் டேவிட் அலெக்ஸ்சாண்டர்

**[லொயலாஸ் உரிமையாளர்]**



**மண்ணில்: 21.06.1948**

**விண்ணில்: 30.08.2009**

### இதயத் துடிப்பினிலே.......!

விழி நீர் ஓயவில்லை
ஈராண்டு சென்றதுவோ!
கண்முன்னே நடப்பது போல்
நினைவுகள் வாட்டுகின்றன
சிறு துரும்பெடுக்கவேனும்
துணையிங்கு எமக்கில்லை
செயல் வீரன் தனையிழந்து
செய்வதறியா நிற்கின்றோம்.
ஓய்வில்லா கடும் உழைப்பின்
பயனிழந்து சென்றதேனோ?
பாதையில் நான் நடந்தறியேன்
என் ரதம் சென்றதெங்கோ?
என் துணிவு ஆற்றலெல்லாம்
உம்மோடே சென்றதுவோ?
துணையின்றி உம் பிரிவால்
நடைப்பிணம் போல் நிற்கின்றேன்.
பூப்போன்று என்னை என்
செல்வங்கள் பார்த்தாலும்
என் மனப்பாரம் இறக்கிவைக்க முடியவில்லை
நாள்தோறும் உம் செல்வங்கள் உமக்கு
மலர்வைத்து உம் ஆசி பெற்றுச் செல்கின்றனர்
உம் செல்லக்குட்டிகளும்
உமக்குப் பூவைத்து வணங்குகின்றனர்.
உம் பெருமை பார்க்கவன்றோ
எனைவிட்டு சென்றுவிட்டீர்
என்றும் உம் பிள்ளைகளுக்காய்
இறைவனிடம் துணை வேண்டி இறைஞ்சிடுவீர்.

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

42/9, இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

(7358)(38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச வைத்திய சேவையை மேற்கொண்டு வரும் சந்நிதியான் ஆச்சிரமம்




சந்நிதியான் ஆச்சிரமத்தின் இலவச வைத்தியசாலைக் கட்டடத்தை பக்தர்கள் திறந்து வைக்கின்றனர்.

(சென்றவாரத் தொடர்ச்சி)

சந்நிதியான் ஆச்சிரமத்தின் சமுதாயப்பணி வரிசையில் மிக உன்னதமான பணியாக, சமுக சேவையாக இலவச வைத்தியப் பணியும் கடந்த 10வருடங்களாக நடைபெற்று வருகிறது. சந்நிதி முருகன் ஆலயத்தில் நிரந்தரமாகத் தங்கியுள்ள ஆதரவற்றோருக்கு உணவு, உடைகளை வழங்கி வந்த ஆச்சிரமம் அவர்களது உடல் நலத்திலும் அக்கறை கொண்டு, அவர்களுக்கென்றே இலவச வைத்திய சேவையை கடந்த 2001 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14 ஆம்திகதி சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அந்தக்காலத்தில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் வைத்தியப் பொறுப்பதிகாரியாக இருந்த டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை மேற்படி வைத்திய சேவையில் சிகிச்சைகளை வழங்கி வந்தார். பிரதி ஞாயிறு தோறும் நடைபெற்று வந்த இலவச வைத்திய சேவையில் சிலமாதங்களுக்கு முன்னர் கரவெட்டிப் பிரதேச அரசினர் ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த, தற்போது சேவையில் இருந்து இளைப்பாறியுள்ள வைத்திய அதிகாரி மா.யோகேஸ்வரதேவரும் பூரண ஒத்துழைப்பு வழங்கி இந்த சேவையில் இணைந்து கொண்டார்.

இந்த சேவையில் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதுடன் அவர்களுக்கு வேண்டிய மருந்துகள் யாவும் இலவசமாகவே வழங்கப்பட்டு வருகின்றன. ஆரம்பத்தில் ஆலயத்தில் தங்கியிருந்த ஆதரவற்றோர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இலவச வைத்திய சேவை ஆச்சிரமத்தை அடுத்துள்ள தொண்டமானாறு, கெருடாவில், மயிலியதனை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, பொலிகண்டி, இமையாணன், கரணவாய் ஆகிய கிராமங்களிலிருந்தும் சிகிச்சை பெற நோயாளர்கள் ஆச்சிரமத்தை நாடி வரத்தொடங்கினார்கள்.

வாரந்தோறும் நோயாளர்கள் வரவு அதிகரிக்கத் தொடங்கியதால், அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யுமுகமாக மற்றொரு வைத்திய அதிகாரி பொன்.சின்னத்தம்பியின் உதவியுடன் கடந்த 2004 ஆம் ஆண்டு தை மாதம் 11 ஆம் திகதி முதல் இலவச வைத்திய சேவை விரிவுபடுத்தப்பட்டது.

அத்துடன் இந்த சேவையில் டாக்டர் சி. சிவயோககுருவும் இணைந்து கொண்டார். இந்த இரு வைத்திய அதிகாரிகளினது சேவை கிடைத் ததைத் தொடர்ந்து பிரதி ஞாயிறு மட்டும் இடம் பெற்று வந்த இலவச வைத்திய சேவை பிரதி புதன் கிழமைகளிலும் இடம்பெறத்தொடங்கியது. வாரத்தில் ஒரு நாள் மட்டுமே நடைபெற்று வந்த இலவச வைத்திய சேவை மூன்றாண்டுகளில் வாரத்தில் இரு தினங்களுக்கு (ஞாயிறு, புதன்) விஸ்தரிக்கப்பட்டதென்றால் சிறந்த வைத்திய சேவையை இந்தக் கிராம மக்கள் பெற்று வந்துள்ளார்கள் என்பது புலனாகின்றது.

தற்போது வாரத்தில் இரு தினங்களும் சராசரி 100 பேர் வீதம் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஞாயிற்றுக்கிழமைகளில் டாக்டர் சின்னத்தம்பியும், புதன்கிழமைகளில் டாக்டர் சி.சிவயோக குருவும் இலசவ சிகிச்சைகளை வழங்கி வருகின்றனர். சந்நிதியான் ஆச்சிரமத்தின் இலவச வைத்திய சேவைப் பிரிவில் சில ஆண்டுகளுக்கு முன்னர் இரத்த அழுத்தம், நீரிழிவு, குருதியில் குளுக்கோசை அளவிடுதல், தாய் சேய் சிகிச்சை, கண்நோய் போன்றவற்றுக்கான இலவச வைத்திய சேவைகளும் விசேடமாக அவ்வப்போது நடைபெறுகின்றன.

மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் ஜி.பவானி தாய்சேய் சிகிச்சைகளையும், பிரபல கண் வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.குகதாசன் கண்சிகிச்சையினையும் இரு வாரங்களுக்கு ஒரு முறை அல்லது மூன்று வாரங்களுக்கு ஒரு முறை மேற்கொண்டு வருகின்றார். சில வேளைகளில் கண்கள் பரிசோதிக்கப்பட்டு இலவச கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன.

சுமார் பத்து ஆண்டுகளாக சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தப்பட்டு வந்த இலவச சேவைக்கென தனியான கட்டடம் ஒன்றை நிறுவ வேண்டுமென விருப்புக் கொண்ட ஆச்சிரமப் பொறுப்பாளர் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தின் பின்புறத்தில் இலவச வைத்தியசாலைக்கும், முன்பள்ளிக்கும் காணி ஒன்றைக் கொள்வனவு செய்து பல லட்சம் ரூபா செலவில் கட்டடம் ஒன்றை நிர்மாணித்தனர்.

இக்கட்டான காலங்களில் சந்நிதியான் ஆச்சிரமத்தின் பணிகளுக்கு முழு ஒத்துழைப்பை வழங்கியதோடு மட்டுமல்லாமல், இந்து சமய நிறுவனங்களின் தேவைகளையும் பூர்த்தி செய்த இந்துக் கலாசார முன்னாள் அமைச்சர் அமரர் தி.மகேஸ்வரனின் இரண்டாம் ஆண்டு நினைவாக இலவச வைத்திய சேவைக்கான கட்டடம் கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

இந்தக்கட்டடம் வைத்தியசாலைக்கான சகல வசதிகளையும் கொண்டுள்ளது. தற்போது புதிய கட்டடத்தில் வாரத்தில் இரு தினங்கள் நடைபெற்று வரும் இந்த வைத்திய சேவை மேம்பட்டு வருகின்றது. கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வரும் இலவச வைத்திய சேவையில் இதுவரை பல்லாயிரக்கணக்கானோர் சிகிச்சை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**மாலவன்**

சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டு வருகின்ற ஆன்மிகப் பணிகளுக்கு மேலாக குடாநாட்டில் உள்ள இந்து சமய ஆன்மிக நிறுவனங்களின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் பேருதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றது. சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி ஸ்ரீவல்லிபுரஆழ்வார் கோயில் சுற்றாடலில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தை நிர்வகித்து வரும் வை. ஆனந்தராசா வல்லிபுரக் கோயிலை தரிசிக்க வரும் பக்தர்களுக்கும் ஆன்மிக நிகழ்வுகளை வழங்க வேண்டும், அன்னதானப் பணியினை சிறப்பாக மேற் கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் அவற்றுக்கு வேண்டிய ஆலோசனைகளை, வழிமுறைகளைக் காட்டுமாறு சந்நிதியான் ஆச்சிரமப் பொறுப்பாளரிடம் கேட்டுக் கொண்டார்.

அவரது கோரிக்கையை ஏற்றுக் கொண்ட மோகனதாஸ் சுவாமிகள் பெரியாழ்வார் ஆச்சிரமத்துக்குச் சென்று அதற்குரிய ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கியதால் பிரதி ஞாயிறு தோறும் முற்பகல் 10 மணிக்கு இடம் பெறும், பூசையைத் தொடர்ந்து பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் ஆன்மிக நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டு பல ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன.

இதே போல் ஆன்மிக நிகழ்வுக்குப் பின்னர் அன்னதானப் பணியும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. பெரியாழ்வார் ஆச்சிரமத்தால் நடத்தப்பட்டு வரும் ஆன் மிக நிகழ்வுகள் தொடர்பான விளம்பரத் துண்டுப் பிரசுரங்களை சந்நிதியான் ஆச்சிரமமே இலவசமாக அச்சிட்டு வழங்கி வருகிறது. துண்டுப் பிரசுரங்களை மட்டுமல்லாமல் ஆச்சிரமத்துக்குத் தேவையான வேறு பல உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கி வருகிறது. வல்லிபுரக் கோயில் சுற்றா டலில் வாரந்தோறும் ஆன்மிக நிகழ்வுகளை நடத்த வழிகாட்டியது சந்நிதியான் ஆச்சிரமமே என்று வல்லிபுரக் கோயில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தின் பொறுப்பதிகாரி வை. ஆனந்தராசா பெருமையோடு அடிக் கடி நினைவுகூர்ந்து வருவதைக் காண்கின்றோம்.

(தொடரும்)




### சும்மா இரு

பழக்க வழக்கம் அத்தனையும்
பாதை மாறிப் போகிறது
பதவிகளும் பேராசை கூடி
போர்வைகளாய் வளர்கிறது
கிழக்கு இன்னும் விடியவில்லை
கொதிக்கிறது கொஞ்சம் பொறு
கோடி, லட்சம், வீடு, காரென்று
குமரா நீ கேட்டனையோ?

கொழுக்க நல்ல சாப்பாடு- கிளினிக்
கொப்பியிலே தெரிகிறது
கோயிலிலே 'சும்மா இரு' - என்னைக்
குழப்பாதே, நீ குழம்பாதே!
அழுத்தமாகச் சொல்கின்றேன் கேள்
உன் கையே உனக்குச் சொந்தம்
அழுத கண்ணீர் தோற்பதில்லை முருகா
எழுந்து வா அப்போது சொல்வேன்

கே.எஸ்.சிவானந்தராஜா, கொக்குவில்.



### போய்ப்பாரும் நல்லூருக்கு புரிந்துவிடும் உண்மை

எல்லோரும் ஓடுகிறார் எங்கேதான் ஓடுகிறார்
ஏங்கி நானும் கிடுகிடுத்தேன் கிறீஸ்பூதம் வந்ததுவோ
நல்லூரான் திருவிழா வாமின்று என்கிறார்
நானுமங்கே போவதற்கு நாட்டங்கொண் டேயெனது
இல்லாளையும் இழுத்துக்கொண் டேகினேன் நல்லூருக்கு
என்னென்ன காட்சிகளாம் காவடிகள் உடன்பலதும்
பொல்லாத துன்பமெல்லாம் போக்கிடுவான் நல்லூரான்
போய்ப்பாரும் நல்லூருக்குப் புரிந்து விடும் உண்மை

வ.யோகானந்தசிவம்

### புகழ் மீள வரம்கொடு

பண்டைத் தமிழாண்ட பேரிழந்து பல
கண்டத்து அகதிக் குடிகளானோம் - கண்ணீராறு
கொண்டவா கந்தா கொண்டபுகழ் மீளுகை
கொண்டுவாழ வரம் கொடு

அல்வாயூர் சி.சிவநேசன்

### வேறு துணையும் உண்டோ

பல்லவி
உனையன்றி வேறு நினைவுமுண்டோ - நல்லூர்
உறைபதி உமைமகனே-முருகா (உனையன்றி)
அனுபல்லவி
ஊழ்வலியகற்றி உயர் நிலையேற்றி
உறுதுணை நல்கும் உத்தமனே - முருகா (உனையன்றி)
சரணம்
பிரணவப் பொருள் உரைசெய்த சரவணன்
பக்குவ நிலைபெற மக்களை ஆள்பவன்
சூரனை வதஞ்செய்த சுப்பிரமண்யா நல்லூர்
சூழவே வீற்றிருந்து சுடரெனவே ஒளிரும் (உனையன்றி)

சுபாஷினி பிரணவன், அச்சுவேலி.

### குறைதீர்க்க வா குமரா

எல்லை இல்லாக் குறை நீக்க எழுந்து வா குமரா
தெல்லைகள் எமைவிட்டுத் தொலைந்திடவே
தோகை மயில் மீது வா வேலா
நல்லூரில் உறைகின்ற நாயகனே
நம் துயர் நீக்க வா முருகா
பல்லவரும் போற்றிடவே தங்கத் தேரேறி
பவனி வருவாய் பால முருகா

செ.சிவபாதசுந்தரம், மீசாலை.

### பாலனே நல்லூரானே...

கற்சிலை பொற்சிலை கற்பதும் நின்சிலை
காலமோ எனக்கில்லை முருகா
நிற்பதும் நடப்பதும் நின்னருள் அன்றி
நிலவிடும் செயலினை முருகா
விற்பதும் என்னை வேண்டலும் உன்னை
விடியலும் நின்முகம் முருகா
பற்பல அண்டம் பந்தெனச் சுருட்டும்
பரமனின் பாலனே நல்லூரானே

புலவர் செ.பரமநாதன், மண்டைதீவு.

திருவிழாச் சிறப்புற பிரார்த்திப்போர்:
**Sri Murugan**
Tele Communication & Agency Post Office
No.303, K.K.S. Road, Jaffna. T.P: 021 222 2670, 5392,
HotLine: 0777427182, Fax: 021 222 3214

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வைத்தியர்களுக்கு எதிராக மக்கள் சட்டத்தைக் கையிலெடுக்கக்கூடாது

கொழும்பு, ஓக.30

வைத்தியசாலைகளில் சில சம்பவங்கள் நடைபெறுவதைஅடிப்படையாகக்கொண்டு வைத்தியர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அண்மையில் நபரொருவர் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து பலப்பிட்டிய வைத்தியசாலையில் வைத்தியர்களுக்கு எதிராக ஆர்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது என சங்கத்தின் பிரதிச் செயலாளர் உபுல் குணசேகர தெரிவித்துள்ளார்.

நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் வைத்தியர்களுக்கு எதிராக பொது மக்கள் சட்டத்தைக் கையிலெடுப்பதை அனுமதிக்க முடியாது என்று அவர் தெரிவித்துள்ளார். பலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நோயாளி ஒருவர் அதிக இரத்தம் வெளியேறியதால் உயிரிழந்துள்ளார். வைத்தியசாலை ஊழியர்கள் ஏதாவது தவறிழைத்தால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வழிமுறைகள் இருக்கின்றன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



தென்மேற்குப் பருவப்பெயர்ச்சி மழை இன்மையால் விக்டோரியா நீர்த்தேக்கத்திலுள்ள நீர் வற்றிப்போயுள்ளது. இவ்வாறு நீர் வற்றியுள்ளதால் தெல்தெனிய நகருக்கு மத்தியிலுள்ள இரும்புப் பாலம், விகாரை, கோயில் கோபுரம் என்பன வெளியே தெரிகின்றன.

## மீன்சந்தை மாற்றப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிப்பு

கொழும்பு, ஓக.30

புறக்கோட்டை சென். ஜோன்ஸ் மீன் சந்தையை பேலியகொடைக்கு மாற்றியமைக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு விசாரணையின்றி நிராகரிக்கப்பட்டுள்ளது.

மீன் வியாபாரிகளின் சங்கமொன்று தாக்கல் செய்த இந்த ஆட்சேப மனுவில் அதற்கான அடிப்படைத் தகுதிகள் எதுவும் இல்லை என நீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

புறக்கோட்டை சென். ஜோன்ஸ் மீன் சந்தை 1824 ஆம் ஆண்டு தொடக்கம் இயங்குகின்றது. இந்தச் சந்தையில் 87 மொத்த விற்பனைக் கூடங்களும், 105 சில்லறை விற்பனைக் கூடங்களும் இருந்தன.

இந்த மீன் சந்தை 2006ஆம் ஆண்டு தொடக்கம் வேறு இடத்துக்கு மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள மொத்த, சில்லறை விற்பனை நிலையங்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் பொறுப்பு கொழும்பு மாநகரசபையைச் சேர்ந்தது. எனினும், 2011ஆம் ஆண்டு முதல் அனுமதிப் பத்திரங்கள் வழங்குவது இடைநிறுத்தப்பட்டது..

இதன்மூலம் எங்கள் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன.

எனவே, இந்த மீன் சந்தையை பேலியகொடைக்குக் கொண்டு செல்ல எடுத்த தீர்மானத்தை நீதிமன்றம் நிராகரிக்க வேண்டும் - இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 80 பேர் கைது

வவுனியா,ஓக.30

வவுனியா நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற சுமார் 80 பேர் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மின்மானியில் திருட்டு வேலைகள் செய்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலிருந்து வந்த மின்சார சபையின் திடீர் பரிசோதகர்கள் கடந்த இரண்டு நாள்களாக மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது வவுனியா நகரம், கூமாங்குளம், பண்டாரிகுளம், சின்னப் புதுக்குளம், தேக்கம்காடு , குட்செட் வீதி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே கண்டுபிடிக்கப்பட்டதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

இந்த நபர்கள் வவுனியா மாவட்டபதில் நீதிவான் எம்.சிற்றம்பலம் முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஞாயிறுக்கிழமை ஆஜர் செய்யப்பட்டு சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். (ச)

## சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு 1880 அதிபர், ஆசிரியர்கள் கௌரவிப்பு

கொழும்பு, ஓக.30

இந்த ஆண்டு நடைபெறவுள்ள சர்வதேச ஆசிரியர் தினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு தேசிய மட்டத்தில் கல்வி அமைச்சினால் 1880 அதிபர், ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர் என கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம்.குணசேகர அறிவித்துள்ளார்.

நாட்டின் மாணவர் பரம்பரை மீது மிகுந்த கருணையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களை இனங்கண்டு அவர்களுக்கு தேசத்தின் கௌரவத்தை செலுத்துவதே இந்தக் கௌரவிப்பின் நோக்கமாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கௌரவிப்பை தேசிய மட்டத்தில் 94 கல்வி வலயங்களில் இருந்து 1410 ஆசிரியர்களும், 47 அதிபர்களும் வலய ரீதியாக தலா 15 ஆசிரியர்களும் 5 அதிபர்களும் பெறவுள்ளனர்.

இந்த தேசிய மட்டத் தெரிவுகளுக்கு முன்னோடியாக கோட்ட மட்டம், வலயமட்டம், மாவட்ட மட்டத்தில் தெரிவுகள் இடம்பெற வேண்டுமென கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்படும் ஆசிரியர், அதிபர்களுக்கு எதிர்வரும் ஒக்ரோபர் 6 ஆம் திகதி கொண்டாடப்படும் ஆசிரியர் தின தேசிய நிகழ்வுகளின் போது ஜனாதிபதியினால் விருதுகளும், கௌரவிப்பும் வழங்கப்படும் - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## போலி முகவர் நிலையம் முற்றுகை; கடவுச்சீட்டுடன் உரிமையாளர் கைது

கொழும்பு, ஓக.30

கொழும்பு, மருதானை, மாளிகாகந்தைப் பகுதியில் தொலைத் தொடர்பு நிலையமொன்றில் சட்ட விரோதமாக நடத்திச் செல்லப்பட்டு வந்த வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையமொன்றை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக அதிகாரிகள் முற்றுகையிட்டுள்ளனர்.

இதன்போது இந்தப் போலி வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தை நடத்திவந்த பிரதான சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையத்தில் இருந்து 48 கடவுச் சீட்டுக்களும் ஏனைய ஆவணங்களும் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (ச)

திருமணம் ஒத்திவைப்பு

ஆவணி மாதம் 14ஆம் நாள் (31.08.2011)
புதன்கிழமை நடைபெறவிருந்த
*சிறிகரன்- பபித்திரா*
ஆகியோரின் திருமணம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிறிதொரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத் தருகிறோம். பிறிதொரு திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

*அம்மன் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
*திரு.பாலசிங்கம்*
*(மணமகளின் தந்தை)*
(2373)

வீடு வாடகைக்கு
வண்ணார்பண்ணை, வைத்தீஸ்வரா வித்தியாலய சந்திக்கு அருகிலுள்ள சகல வசதிகளும் கொண்ட தனி வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0718994240

காணி விற்பனைக்கு
சாவகச்சேரி, மீசாலையில் (மீசாலை கமலாம்பிகை வித். அருகில்)
7 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:0770540252




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண தண்டனையைக் கண்டித்து திரையுலகைத் திரட்டிப் போராட்டம்

**பாரதிராஜா கூறுகிறார்**

பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் மரண தண்டனையைக் கண்டித்து திரையுலகினரைத் திரட்டி பெரியளவிலான போராட்டம் நடத்தப்படும் என்று இயக்குநர் பாரதிராஜா அறிவித்துள்ளார்.

மூன்று பேரையும் தூக்கிலிட திகதி குறித்துள்ளது வேலூர் சிறை நிர்வாகம். இதையடுத்து இயக்குநர் சங்கத் தலைவர் பாரதிராஜா தலைமையில் இயக்குநர்கள் சங்க அவசரக் கூட்டம் நடைபெற்றது. அந்தக்கூட்டத்திற்குப் பின்னர் பாரதிராஜா செய்தியாளர்களிடம் பேசுகையில்:

பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரை தூக்கிலிட நாள் குறிக்கப் பட்டிருப்பது பெரும் வேதனையும், அதிர்ச்சியும் தருகிறது. இதை எதிர்த்து திரையுலகம் சார்பில் பெரியளவிலான போராட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நடிகர்கள், நடிகைகள், இயக்குநர்கள், சட்டத்தரணிகள், மாணவர்கள் ஆகியோரைத் திரட்டி பெரிய போராட்டம் நடத்துவோம்.

முதல்வர் ஜெயலலிதா உடனடியாகத் தலையிட்டு மூன்று பேரையும் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். இதுதொடர்பாக அவருக்குக் கடிதம் எழுதவுள்ளோம். மேலும் நேரில் சந்தித்து வேண்டுகோள் விடுக்கவும் முடிவு செய்துள்ளோம்.

இதைச் செய்யும் தகுதியும், அதிகாரமும் அவருக்கு உள்ளது. எனவே அவர் தலையிட்டு மூன்று பேரையும் காப்பாற்ற வேண்டும்.

ஊடக உலகம் இந்தப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். விளம்பரத் துக்காக நடக்கும் லோக்பால் உண்ணா விரதத்தை ஒரே



மாதத்தில் உலகளாவிய பிரச்சினையாக மாற்றிவிட்ட ஊடகம், உயிர் போகிற இந்த அத்தியாவசிய, அவசரப் பிரச்சினைக்காக ஆதரவு காட்ட வேண்டும், என்றார் பாரதிராஜா. (வ)

# தூக்குத் தண்டனையில் குறுக்கிடக் கூடாது

**சுப்பிரமணிய சுவாமி**

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் 3 பேரை தூக்கிலிடும் முடிவில் யாரும் குறுக்கிடக் கூடாது என ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி தெரிவித்தார்.

கருணை மனு நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில் 3 குற்றவாளிகளையும் தூக்கிலிடுவதை இப்போது தடுத்து நிறுத்துவதற்கு அரசியலமைப்புக்கு சட்டப்படி அதிகாரம் இல்லை.

எனவே நான் குறுக்கிட முடியாது என்று முதல்வர் ஜெயலலிதா சரியாகத்தான் கூறியுள்ளார் என்று சுவாமி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார். (எ-10)



பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோருக்கு விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனையை ரத்து செய்யக் கோரி நேற்றுக் கோவை ரயில் நிலையம் முன்பு திரண்ட பெரியார் திராவிடர் கழகம், ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள், ஆதி தமிழர் பேரவை, நாம் தமிழர் மற்றும் சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மாணவர்கள் தண்டவாளத்தில் விழுந்து கிடந்து தூக்குத் தண்டனையை ரத்து செய்யும் வரை நாம் நகரமாட்டோம் என்று புரண்டபடியே கோஷம் எழுப்பினர். அப்போது திணறிய பொலிஸார் அவர்களை கடுமையான முயற்சிகளுக்குப் பின்னர் அப்புறப்படுத்தினர்.

# காரைக்கால், உசிலம்பட்டியில் கைதிகள் உண்ணாவிரதம்

மதுரை, ஆக.30

ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் 3 பேரின் மரண தண்டனையை ரத்துச் செய்யக் கோரி காரைக்கால் மற்றும் மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் சிறைக்கைதிகள் நேற்று திடீர் உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளனர்.

பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் தூக்குத்தண்டனை செப்ரெம்பர் 9-ம் தேதி நிறைவேற்றப்பட உள்ளது. அவர்களின் தூக்குத் தண்டனையை ரத்துச் செய்யக் கோரி தமிழகத்தின் பல்வேறு இடங்களில் அரசியல் கட்சியினரும், சட்டக் கல்லூரி மாணவர்களும் போராட்டங்கள் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் அவர்களின் மரண தண்டனையை ரத்துச் செய்யக்கோரி காரைக்கால் மற்றும் மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் கைதிகள் நேற்று திடீர் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளதாக சிறைத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-10)

# 3 பேரின் தூக்குத் தண்டனையை ரத்துசெய்ய வேண்டும்: விஜயகாந்த்

சென்னை, ஒக.30

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் 3 பேருக்கு விதிக்கப்பட்டுள்ள தூக்குத்தண்டனையை ரத்துச் செய்யவேண்டும் என்று தேமுதிக தலைவர் விஜயகாந்த் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஏற்கனவே 3 பேரும் 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைத்தண்டனை அனுபவித்துவிட்டனர். எனவே கருணை அடிப்படையில் தூக்குத்தண்டனையை ரத்துச் செய்து அவர்கள் மனுவை மறுபரிசீலனை செய்து தூக்குத்தண்டனையில் இருந்து அவர்களின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதாக விஜயகாந்த் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (எ-10)

# ராஜீவ் உயிருடன் இருந்திருந்தால் மூவரையும் காப்பாற்றியிருப்பாராம்

**மனமுருகுகிறார் கருணாநிதி**

சென்னை, ஒக.30



ராஜீவ் காந்தி தற்போது இருந்திருந்தால், தூக்குக் கயிற்றுக்கு முன்பு நிறுத்தப்பட்டுள்ள மூவரின் உயிரையும் காப்பாற்றியிருப்பார் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி மிகவும் உருக்கமாகக் கூறியுள்ளார்.

பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரை விடுவிக்க வேண்டும். அவர்கள் 20 ஆண்டுகளுக்கும் மேலாக தண்டனையை அனுபவித்து விட்டனர். எனவே அவர்களை தூக்கில் போடக்கூடாது என்று சோனியா காந்திக்கும், மத்திய அரசுக்கும், தமிழக அரசுக்கும் ஏற்கனவே தி.மு.க. தலைவர் கருணாநிதி கோரிக்கை விடுத்திருந்தார். இந்த நிலையில் மீண்டும் ஒரு உருக்கமான கோரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

அதில், கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த மூவரும் சிறைத் தண்டனையை அனுபவித்து விட்டனர். வாழ்நாள் முழுவதும் வருந்துவது என்பது தூக்கை விட மோசமானது. அந்தத் தண்டனையை அவர்கள் அனுபவித்து விட்டனர். இதற்கு மேலும் குற்றவாளிகளை தூக்கில் போடுவதால் எந்தப் பயனும், விளைவும் ஏற்பட்டு விடாது. எனவே மூவரையும் மன்னித்து தூக்கிலிருந்து அவர்களைக் காப்பாற்ற தமிழக அரசும், மத்திய அரசும் முன்வர வேண்டும். ராஜீவ் காந்தி மட்டும் தற்போது உயிருடன் இருந்திருந்தால் இவர்களை நிச்சயம் காப்பாற்றியிருப்பார் என்று கூறியுள்ளார் கருணாநிதி. (வ)

# லோக்பால் குறித்து ஜனாதிபதிக்கு பிரதமர் விளக்கம்

லோக்பால் மசோதா தொடர்பாக நாடாளுமன்றத்தில் நடந்த நிகழ்வுகள் குறித்து ஜனாதிபதியை அவரது இல்லத்தில் சந்தித்து விளக்கமளித்தார் பிரதமர் மன்மோகன் சிங்.

இந்தச் சந்திப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. சந்திப்பின்போது ஜனலோக்பால் மசோதா குறித்து நாடாளுமன்றத்தில் ஒருமித்த கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது தொடர்பாக ஜனாதிபதிக்கு விளக்கினார்.

# மதுரையில் இரு மாணவர்கள் தற்கொலை மிரட்டல்

மதுரை, ஆக.30

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் 3 பேருக்கு விதிக்கப்பட்டுள்ள தூக்குத்தண்டனையை ரத்துச் செய்ய வலியுறுத்தி மதுரையில் 5 மாடி விடுதிக் கட்டடத்தின் மீது ஏறி நின்று கொண்டு தற்கொலை மிரட்டல் விடுத்த 2 சட்டக்கல்லூரி மாணவர்களை ஆட்சியரும், கமிஷனரும் சமரசம் செய்தனர்.

இந்தச் செய்தி தொடர்பாக மேலும் தெரியவருவதாவது: 3 பேரின் தூக்குத்தண்டனையை ரத்துச் செய்ய வலியுறுத்தி சட்டக்கல்லூரி மாணவர்கள் நேற்றுக் காலை மாவட்ட நீதிமன்றத்தின் முன்பு சாலை மறியலில் ஈடுபட்டனர். இந்த நிலையில் திடீரென 2 மாணவர்கள் அருகில் உள்ள விடுதியின் 5-வது மாடியில் ஏறி நின்று கொண்டு தற்கொலை மிரட்டல் விடுத்தனர். இதையடுத்து ஆட்சியரும், கமிஷனரும் விரைந்து சென்று சமரசம் செய்தனர்.

இதையடுத்து அவர்கள் அந்த கட்டடத்தில் இருந்து கீழே இறங்கினர். (எ-10)

# மரண தண்டனையை இல்லாதொழித்த முதல் மாநிலமாக தமிழகம் விளங்க வேண்டும்

**தமிழ் பாதுகாப்பு இயக்கம் வலியுறுத்து**

காஞ்சிபுரம், ஒக.30

மரண தண்டனையை ஒழிக்கும் முதல் மாநிலமாக தமிழகம் திகழ வேண்டும் என்று தமிழ் பாதுகாப்பு இயக்கம் வலியுறுத்தியுள்ளது. தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் தூக்குத் தண்டனை ஒழிப்பு மாநாடு மறைமலை நகரில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இந்த மாநாட்டுக்கு பா.ம.க. தலைவர் கோ.க. மணி தலைமை தாங்கினார். பா.ம.க. நிறுவுனர் டாக்டர். ராமதாஸ், விடுதலை சிறுத்தை கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விவரம் வருமாறு:

உலகில் 139 நாடுகளில் மரண தண்டனை ஒழிக்கப்பட்டுள்ளது. உயிரைப் பறிக்கும் அதிகாரம் எந்த அரசுக்கும் இல்லை என்று காந்தியடிகள் கூறியுள்ளார். மரண தண்டனையை ஒழிக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மரண தண்டனையை ஒழிப்பதில் இந்திய அரசுக்கு தமிழகம் வழி காட்ட வேண்டும். அமெரிக்காவில் தூக்கு தண்டனை இருந்தாலும் அங்கு 13 மாநிலங்களில் அந்த தண்டனை ஒழிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் மரண தண்டனையை இல்லாதொழித்த முதலாவது மாநிலமாக தமிழகம் திகழ வேண்டும். மரண தண்டனை வழங்கக்கூடிய சட்டப்பிரிவுகளை நீக்குவதற்கு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

20 ஆண்டுகளாக சிறைத் தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவருக்கு மரண தண்டனை வழங்குவது இரண்டாவது தண்டனையாகும். மனித நேயத்துடன் தமிழக அரசு மரண தண்டனையை ரத்து செய்ய வேண்டும்.

ராஜீவ் காந்தி படுகொலையின் பின்னணி குறித்த விசாரணை முடிவுறாத நிலையில் மூவருக்கும் மரண தண்டனை வழங்குவது சரியான தீர்வாக இருக்காது.

இதற்கு முன்பு ஜனாதிபதியாக இருந்த கே.ஆர். நாராயணன், ஏ.பி.ஜே. அப்துல்கலாம் ஆகியோர் இவர்களது கருணை மனுக்களை நிராகரிப்புச் செய்யாத நிலையில் தற்போதைய ஜனாதிபதி நிராகரிப்புச் செய்துள்ளார். இதனைக் கருத்தில் கொண்டு மரண தண்டனையை ரத்து செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் இருப்பிடத்தை அழிக்க தீவிர இராணுவப் பிரசன்னம்

## அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கண்டனம்

வடக்குக் கிழக்கில் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவப் பிரசன்னம் தமிழர்களின் இருப்பிடத்தை அழிப்பதற்கான இறுதித்திட்டமாகும் என்று அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அது வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் மக்கள் இலங்கைத் தீவின். ஆட்சி அதிகாரத்தை பகிர்ந்து கொள்வது தொடர்பாக 1948ஆம் ஆண்டிலிருந்து பேச்சுகள் நடத்தி வருகின்றனர்.

ஆனால் அதிகாரத்தில் இருந்த அரசுகள் சிங்கள மக்கள் அதிகாரக் கையளிப்புத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் எனக் கூறி பேச்சுக்களைத் தோல்வியடையச் செய்தன.

தமிழர்களின் மொழி, கலாசார, சமூக மற்றும் சமய அடையாளங்களையும் பொருளாதார வாழ்வையும் அழித்தெடுக்கும் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். முக்கியமாகத் தமிழர்களைச் சொந்தக் காணிகளில் மீள்குடியமர விடாது தடை செய்துள்ளது.

இந்த நிலையில் தமிழ் மக்கள் தமது இனத்தின் பாதுகாப்பை உறுதிசெய்ய உறுதியுடையவர்கள் ஆவர்.

இதனை அனைத்துலக சமூகம் உணர்ந்துகொள்வதன் மூலம் தான் அரசுடன் பேச்சுக்கள் மேற்கொள்ள முடியும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-313)

# நெடுந்தீவில் நிலப்பூச்சிகளை அழிக்க மருந்து விசிறும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.30

நெடுந்தீவில் நிலப்பூச்சிகளை அழிப்பதற்கான மருந்து விசிறும் வேலைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

வேலணைப் பகுதிக்கான மருந்துகள் விசிறுவதற்கு அதற்குரிய மருந்து கொழும்பில் இருந்து கிடைத்தால் மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும் என்று யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

வேலணைப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அமைச்சர் தலைமையில் நடைபெற்றது.

வேலணைப் பிரதேசத்தில் நிலப்பூச்சிகளின் தொல்லை அதிகரித்துள்ளதாகவும் அதற்கான மருந்துகள் விசிற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து பதிலளித்தபோதே சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாகக் கொழும்பில் சுகாதார அமைச்சருடன் தொடர்பு கொண்டு உரிய மருந்துகளைப் பெற்றுத்தர நடவடிக்கை உடன் எடுப்பதாகவும் இதில் கூறப்பட்டது.

ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் மற்றும் மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-7)

# வாய்க்கால்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 30

மண்டைதீவில் தூர்ந்துபோன கழிவு நீர் வாய்க்கால்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

உப்புவெளி ஊரி வயல் பகுதிகளில் உள்ள சம்புக்குளத்தில் இருந்து பெரிய மதகுவரையான கழிவு வாய்க்கால்களைப் புனரமைக்கும் நடவடிக்கைகளில் அங்குள்ள விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வாய்க்கால்கள் புனரமைக்கும் நடவடிக்கையில் கமநல சேவைகள் திணைக்களம், தீவக விவசாயிகள் சம்மேளனம் ஆகியவை இணைந்து செயற்பட்டு வருகின்றன. (எ-7)

# மண்டைதீவு அரச வைத்தியசாலை முழுமையாகப் புனரமைக்கப்படும்

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் ஆளுநர்

யாழ்ப்பாணம், ஓக.30

மண்டைதீவு அரச வைத்தியசாலை அடுத்த ஆண்டில் முழுமையாகப் புனரமைக்கப்படும். புனரமைப்புப் பணி நிறைவடைந்ததும் அப்பகுதிக்கான வைத்தியசேவை முழுமையாக மேற்கொள்ளப்படும். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வேலணை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி இவ்வாறு குறிப்பிட்டார்.

தீவுப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் மண்டைதீவு வைத்தியசாலை முழுமையாகச் சேதமடைந்து தற்போது பாழடைந்த நிலையில் உள்ளது. மண்டைதீவில் வைத்தியசாலை ஒன்று இல்லாமையால் அங்குள்ள நோயாளர்கள் குறிப்பாக கர்ப்பிணித் தாய்மார்கள் பல கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர். யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நோயாளரை எடுத்துவரக்கூடிய வசதிகள் இன்மையாலும் மண்டைதீவு மக்கள் பெரும் சிரமப்படுவதாக கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. மண்டைதீவில் நடமாடும் வைத்திய சேவை இடம்பெறுவதாக யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் இதன்போது சுட்டிக்காட்டினார். நடமாடும் சேவையால் தினமும் நோயாளர்கள் பயனடைவதில்லை எனவும் வைத்திய சாலையைப் புனரமைத்து முன்னர் போல் வழமையான சேவைகள் கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் இந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. இதனையடுத்தே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-7)

ஜனஜய லொத்தர்
உத்தியோகப்பூர்வ முடிவுகள்
வாரம் 257
சீட்டிழுப்புத் திகதி 28.08.2011

வெற்றி இலக்கங்கள்: 08 11 12 25
சுப்பர் இலக்கம்: 08

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 9,731,210/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 1 இலக்கத்துக்கும் | 117897 | ரூ. 20/= | ரூ. 2,357,940 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 1 இலக்கத்துக்கும் | 10731 | ரூ. 40/= | ரூ. 429,240 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 2 இலக்கங்களுக்கும் | 9197 | ரூ. 100/= | ரூ. 919,700 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 2 இலக்கங்களுக்கும் | 823 | ரூ. 200/= | ரூ. 164,600 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 3 இலக்கங்களுக்கும் | 197 | ரூ. 1,500/= | ரூ. 295,500 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 3 இலக்கங்களுக்கும் | 16 | ரூ. 3,000/= | ரூ. 48,000 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 1,000,000 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 9,731,210/= | |
| மொத்த எண்ணிக்கை | 138862 | | ரூ. 5,214,980/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ 10,089,680/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk




தொல்புரம் மடத்தடிப் பிள்ளையார் சுப்ரமணிய சுவாமி ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாக்கள் இடம்பெற்று வருகின்றன. எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (ம-313)

* * *

வேலணை வடக்கு இலந்தை வனப் பகுதி பஞ்சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன. எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ம-167)

* * *

ஆனைக்கோட்டை, உயரப்புலம் அடைக்கல மாதா ஆலய திருநாள் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. மாலை 5மணிக்கு நவநாள் திருப்பலி இடம்பெறும். தொடர்ந்து திருவிழா இடம்பெற்று எதிர்வரும் 7ஆம் திகதி மாலை நற்கருணை பெருவிழா இடம்பெறும்.

மறுநாள் 8 ஆம் திகதி காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலி இடம்பெற்று அன்னையின் திருச்சொரூப பவனி இடம்பெறும். (ம-23)

கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1 Prima புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் 01.09.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

★ சூட்டிபாம் சென்ரர் - 0778996085
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம் - 0774656377
★ நல்லூர் பாம் சென்ரர், பருத்தித்துறை -0771392593
★ நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி - 0776225944

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். 021 222 6944

ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்
யுதகுலசிங்கம் வைகுந்தன்



மலர்வு: 05.09.1973
உதிர்வு: 09.09.2010



கதிரவன் இரும்பகத்தை காத்த
கண்ணியர் வைகுந்தன் முகாமையாளர்
அதிவிரைவாக இறைவன் அடியினிற் சேர
அதிர்ந்தன உலகம் ஐயன்பிரிவால் உறவு
ஆழ்ந்தன துயரில் மீள அனுவளவுமியலா
உதிர்ந்த எம் உத்தமரின் உயரிய பண்பை
ஊர்மெச்சிடும் வகையில் வாழ்ந்த உணர்வினால்
உள்ளத்தைத் தேற்றி ஆத்மா சாந்தியில் நிறைகநீடு

இன்று (30.08.2011) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலடி லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

மனைவி - சுதர்சினி,
பிள்ளைகள் - அபிஷாயினி
வைஷ்ணவன் மற்றும் குடும்பத்தினர்.

வீட்டுக்கிருத்திய அழைப்பு

அரியகுட்டி இராசரத்தினம்



அரியகுட்டி இராசரத்தினம் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (30.08.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.



உடுவில் மேற்கு,
சுன்னாகம்.
(7368)
குடும்பத்தினர்.

German Swiss மொழிகள்

நீங்கள் கற்கவேண்டுமா பல வருடமாக இயங்கி வரும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு Institute, Germany யில் இருந்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது. 10, Palaly Road, Jaffna
T.P.0771604823
(7377)

ஆட்டோ விற்பனைக்கு

வடமராட்சியில் நல்ல நிலையிலுள்ள பட்டர் கலர் 2A-xxxx Auto உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு. T.P.0779664032

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்கிறது 'ஐரீன்' புயலின் கடும் தாக்கம் அமெரிக்காவில் 40 லட்சம் மக்கள் பாதிப்பு



நியூயோர்க்,ஒக.30
அமெரிக்காவின் நியூயோர்க் நகரை நேற்றுமுன்தினம் 'ஐரீன்' சூறாவளி தாக்கியது. நகரை நெருங்கி வரும்போது அதன் வேகம் மிகவும் குறைந்து விட்டதால் பாதிப்பு பெருமளவு இல்லை என்றாலும், கனத்த மழையால் நகரின் பல பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்தது.வாகனங்கள், விமானப் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் 40 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

'ஐரீன்' சூறாவளி, வடக்கு கரோலினாவை நேற்று முன்தினம் தாக்கியது. பின்னர் அங்கிருந்து மெல்ல நகர்ந்து, விர்ஜினியா, மேரிலேண்ட், டெலாவேர் மற்றும் நியூஜெர்சியை தாக்கியது. வடக்குக் கரோலினாவைத் தாக்கும் போதே அதன் நிலை, 3இல் இருந்து 1 ஆகக் குறைந்திருந்தது. இந்த நிலையில், நியூஜெர்சியில் இருந்து, நியூயோர்க்கை நோக்கி இந்தச்சூறாவளி நகர்ந்த போது, தனது வலுவைப் பெருமளவில் இழந்துவிட்டிருந்தது.

சூறாவளி மற்றும் வெள்ளத்தில் சிக்கி 18 பேர் பலியானார்கள். விர்ஜீனியா, வடக்கு கரோலினா பகுதியில் மட்டும் 10 பேர் இறந்துள்ளனர். புயல் மழையினால் ரூ.14 ஆயிரம் கோடி மதிப்புள்ள பொருள்கள் சேதம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருந்தும் சேத மதிப்பு தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டு கணக்கிடப்படுகிறது.

நியூயோர்க்கைத் தாக்கிய புயல் வடக்கில் நகர்ந்து கனடாவை நோக்கி செல்கிறது. இருந்தும் புயல் அபாயம் நீங்கவில்லை. ஆறுகளில் வெள்ளப் பெருக்கு இன்னும் குறைந்தபாடில்லை.

இதனால் கரைகளில் உடைப்பு ஏற்பட்டு ஊருக்குள் வெள்ளம் பாய்ந்து கரை புரண்டு ஓடுகிறது. இவற்றை அடைத்துச் சீரமைக்கும் பணி நடந்து வருகிறது. புயல் தாக்கியதில் முறிந்து வீதிகளில் வீழ்ந்து கிடக்கும் மரங்கள் அகற்றப்படுகின்றன. மேலும் மீட்புப் பணியும் நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து அதிபர் ஒபாமா ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் கூறியிருப்பதாவது: புயல் கரையைக் கடந்துவிட்டாலும் அமெரிக்கர்களுக்கான ஆபத்து இன்னும் முழுமையாக நீங்கவில்லை. புயல் தாக்குதலில் மிக அதிக அளவில் சேதம் ஏற் படும் என எதிர்பார்த்தோம்.

ஆனால் குறைந்த அளவில் தான் சேதம் ஏற்பட்டுள்ளது. தற்போது மீட்பு பணி நடந்து வருகிறது. அது முழுமையாக முடிவடைய இன்னும் பல வாரங்கள் ஆகலாம். பலபகுதிகளில்மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. அவற்றை சீரமைக்கும் பணி நடைபெற்றுவருகிறது. விரைவில் அங்கு மின்சாரம் வழங்கப்படும். அதற்கான பணியில் மாகாணம் மற்றும் உள்ளூர் அதிகாரிகள் மேற்பார்வையில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

அரசு ஊழியர்களுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் சேர்ந்து சமூகப் பணி ஆற்றி வருகிறார்கள். தாழ்வான பகுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்டவர்கள் அமெரிக்க செஞ்சிலுவை சங்கத்தின் பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

## டோனி டேன் சிங்கப்பூர் அதிபரானார்

சிங்கப்பூர்,ஒக.30
சிங்கப்பூர் அதிபராக டோனி டேன் முதல் முறையாக வாக்குரிமையின் மூலம் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதிபர் பதவிக்கான தேர்தல் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் முன்னாள் துணைப் பிரதமரும், மக்கள் செயற்பாட்டுக் கட்சியின் உறுப்பினருமான டோனி டேன் போட்டியிட்டார்.

ஞாயிற்றுக்கிழமை காலை அறிவிக்கப்பட்ட முடிவுகளின்படி டோனி டேன் அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றது உறுதி செய்யப்பட்டது. இவரை எதிர்த்துப் போட்டியிட்ட டான் செங் போக் நூலிழையில் வெற்றியைத் தவறவிட்டார்.

தேர்தல் முடிவு வெளியான பின் செய்தியாளர்களைச் சந்தித்த டோனி, சிங்கப்பூர் மக்களின் அரசியல் ஒற்றுமைக்காகத் தன்னால் இயன்றவரை உழைக்கப் போவதாகத் தெரிவித்தார். அதிபர் பதவி என்பது அரசியலுக்கு அப்பாற்பட்டது என்றும்,' தனக்கு வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்லாது, வாக்களிக்காதவர்கள் உள்ளிட்ட அனைத்து சிங்கப்பூர் மக்களுக்கும் தான் அதிபர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## நேபாளப் பிரதமராக பாபுராம் பட்டராய் பதிவியேற்பு

காத்மாண்ட், ஒக.30
நேபாள நாட்டின் பிரதமராக ஐக்கிய நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) துணைத் தலைவர் பாபுராம் பட்டராய் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் நேற்று பதவியேற்றுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடந்த வாக்கெடுப்பில் அவருக்கு 340 வாக்குகள் கிடைத்தன. நேபாள காங்கிரஸ் வேட்பாளர் ஆர்.சி. பெதியாலுக்கு 105 வாக்குகள் கிடைத்தன. மொத்தம் 574 வாக்குகள் பதிவாகின.பட்டராய் பிரதமர் ஆவதை ஐக்கிய ஜனநாயக மாதேசி முன் னணி ஆதரித்தது.



இஸ்ரேல் வந்திருந்த ஐரோப்பிய யூனியன் அமைப்பின் வெளியுறவுத் தலைவ.ர கேத்ரின் ஆஸ்டோன் அந்நாட்டு ராணுவ அமைச்சரை டெல்அவிவ் நகரில் சந்தித்துப் பேசினார்.

## ஒபாமா-மார்க்கல் பொருளாதாரத்தை வலுப்படுத்த உறுதி

உலகபொருளாதாரத்தை வலுப்படுத்த அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் ஜேர்மனி அதிபர் ஏஞ்சலா மார்க் கெலும் உறுதி கொண்டு உள்ளனர்.

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் நிதி நெருக்கடி தலை தூக்கி உள்ள நிலையில் இரு தலைவர்களும் சனிக்கிழமை தொலை பேசியில் உரையாடினர். அப்போது உலக பொருளாதார மேம்பாடு குறித்து முடிவு செய்யப்பட்டது என வெள்ளை மாளிகை தெரி வித்தது.

இந்த இரு தலைவர்களும் மத்திய கிழக்கு நாடுகளின் பிரச்சினைத் தீர்வுக் குழுவின் அறிக்கையையும் ஏற்றுக் கொண்டனர். இதனால் இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் இடையே நேரடிப் பேச்சு நடைபெறும் சூழல் உருவாகி உள்ளது.

## அல் குவைதாவின் இரண்டாவது தலைவர் மரணம்



வாஷிங்டன் ,ஒக.30
அல்குவைதாவின், செல்வாக்கு மிகுந்த இரண்டாம் நிலைத் தலைவர் அடியா அப்துல் ரகுமான் என்பவர் பாகிஸ்தான் எல்லையில், அமெரிக்க விமானங்கள் நடத்திய குண்டு வீச்சில் பலியானதாக, அமெரிக்கா அறிவித்துள்ளது. ரகுமானின் மறைவு, அல்குவை தாவுக்குப் பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது.

இதுதொடர்பாக அமெரிக்க அதிகாரிகள், சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கை ஒன்றில், கடந்த 22ஆம் திகதி, பாகிஸ்தான் எல்லையில் நடந்த, ஆளில்லா விமானம் ஒன்றின் குண்டு வீச்சில், ரகுமான் பலியானதாகத் தெரிவித்தனர்.

லிபியாவின் மிஸ்ரட்டா நகரைச் சேர்ந்த ரகுமான், ஒசாமா பின்லேடனின் மறைவுக்குப் பின், அல்குவைதாவின் செல்வாக்கு மிகுந்த இரண்டாம் நிலைத் தலைவராகவும், அல் குவைதாவின் தற்போதைய தலைவர் அய்மன் அல் ஜவாஹிரியின் வலது கரமாகவும் செயற்பட்டவர். லிபிய விவகாரத்தில், இவரது பங்கும் இருக்கலாம் என, அமெரிக்கா சந்தேகித்து வந்த நிலையில், இவரது மரணம், அந்த நாட்டுக்குப் பெரும் நிம்மதியை அளித்துள்ளது.

## ரஷ்யத் தூதர் சிரியா பயணம்

டமாஸ்கஸ்,ஒக.30
சிரியாவில் ஏற்பட்டுள்ள பிரச்சினையைப் பேசித் தீர்ப்பதற்காக ரஷ்யா தனது சிறப்புத் தூதர் ஒருவரை நேற்று அந்நாட்டுக்கு அனுப்பியுள்ளது. இதே வேளை அரபு லீக்கின் பொதுச் செயலரும் பேச்சு நடத்த விரைவில் சிரியா செல்ல உள்ளார்.

எகிப்து தலைநகர் கெய்ரோவில் நேற்றுமுன் தினம் அரபு லீக் அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் அவசரமாகக் கூடி லிபியா, சிரியா விவகாரங்கள் குறித்து ஆலோசித்தனர். ஆலோசனை முடிவில் சிரியா அதிபருடன் பேச்சு நடத்த அரபு லீக் பொதுச் செயலர் நபல் அல் அரபியை சிரியா அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது. ஐ.நா.வில் சிரியா மீதான பல பொருளாதாரத் தடைகளை விதிக்க முட்டுக்கட்டை போட்டுவரும்ரஷ்யா நேற்று தனது சிறப்புத் தூதர் ஒருவரை சிரியாவுக்கு அனுப்பி உள்ளது.

## ஜப்பானின் புதிய பிரதமராக யோஷிகோ நோடா தெரிவு



ஜப்பானின் புதிய பிரதமராக நிதித்துறை அமைச்சர் யோஷிகோ நோடா வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டார். ஜப்பானில் கடந்த மார்ச் மாதம் பயங்கர நிலநடுக்கமும், அதைத் தொடர்ந்து சுனாமியும் ஏற்பட்டது. இந்த பெரும் பாதிப்பில் இருந்து மீள்வதற்கு முன்னாள் ஜப்பான் பிரதமர் நேட்டோ கான் உரிய நடவடிக்கை எடுக்கவில்ல்ல என்ற குற்றச்சாட்டு எழுந்தது இந்த நிலையில் அவர் வெள்ளிக்கிழமை தனது பதவியை ராஜினாமாச் செய்தார்.

புதிய பிரதமரை ஆளும் ஜப்பான் ஜனநாயகக் கட்சி நாடா ளுமன்ற உறுப்பினர்கள் நேற்று தேர்வு செய்தனர். இதில் தற்போதைய பிரதமர் பதவிக்கு 5 பேர் போட்டியிட்டனர்.

பிரதமரைத் தேர்வு செய்ய நடந்த முதல் கட்ட வாக்குப் பதிவில் யாருக்கும் அதிக பெரும்பான்மை கிடைக்கவில்லை. இந்த வாக்குப்பதிவில் பொது மக்க ளின் ஆதரவு பெற்ற செய்ஜி மெகரா அதிக வாக்குகள் பெறாமல், போட்டியில் இருந்து வெளியேறினார்.

புதிய பிரதமரை 396 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஜனநாயகக் கட்சி தேர்வு செய்தது. இதில் நிதித்துறை அமைச்சர் யோஷிகோ நோடா 215 வாக்குகளைப் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
30 ஓகஸ்ட் 2011 செவ்வாய்க்கிழமை

# ஜொலிஸ்ரார் வி.கவின் புதிய சாதனை பதிவு

யாழ்ப்பாணம், ஓக. 30

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான கார்த்திக், மணிவண்ணனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டி ஆட்டத்தில் மாவட்ட மட்டத்தில் புதிய சாதனையை பதிவு செய்துள்ளார்கள்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பி.எஸ்.குமாரசுவாமி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்.மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் இரண்டாவதாக நடத்தும் இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டியில் கார்த்திக் ஆட்டமிழக்காமல் 111 ஓட்டங்களைப் பெற்று இந்தச் சுற்றுப் போட்டியில் நூறு ஓட்டங்களைப் பெற்ற முதல் வீரர் என்ற சாதனையைப் பதிவு செய்துள்ளார். இந்தப் போட்டியில் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 113 ஓட்டங்களினாலும் 5 விக்கெட்டுக்களாலும் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கால் இறுதி ஆட்டத்தில் வடமராட்சி ஈகிள் விளையாட்டுக்கழகமும் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளை யாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத் தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் இருபது ஓவர்கள் நிறைவில் 233 ஓட்டங்களைப் பெற்றது.

இந்த ஓட்டம் இந்தச் சுற்றுப் போட்டியில் இதுவரை பெறப்படாத அதி கூடிய வோட்டமாகும்.

கார்த்திக் ஆட்டமிழக்காது 16 நான்குகள், 4 ஆறுகளுடன் 111, மணிவண்ணன் 50 ஓட்டங்கள், ஈகிள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கோகுலன் 3 ஓவர்கள் பந்து வீசி 32 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் ஜீவகன், பிரபு முறையே 35,45 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

234 ஓட்டங்கள் என்ற அதிகூடிய ஓட்ட இலக்கை வெற்றி இலக்கைக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஈகிள் விளையாட்டுக்கழகம் 19.5 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றது.

முல்லைத் திவ்வியன் 37, தனஞ்சயன் 13, கோபிநாத் 12 ஓட்டங்களைப் பெற்றார்கள்.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த சஞ்சித் 4 ஓவர்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் சைலேஸ்வரன் 4 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் அருள் ஓர் ஓவர் பந்து வீசி 7 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் பிரபாகரன், பகீரதன் முறையே 14,25 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். (ம-86)

## சென். பற்றிக்ஸ் மாணவன் பயிற்சி பெற கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஓக.30

ஆசிய அணிகளுக்கு இடையே நடைபெறவிருக்கும் கனிஷ்ட பிரிவினருக்கான மெய்வன்மைப் போட்டிகளில் பங்கு கொள்வதற்கான பயிற்சிக்காக சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் லிவிங்ஸ்ரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் கொழும்பு தேசிய பயிற்சி நிலையத்தில் இடம் பெறும் பயிற்சியில் பங்கு கொள்வதற்காகக் கொழும்பு சென்றுள்ளார். (ம-23)

## நாடளாவிய ரீதியில் விளையாட்டு சார்ந்த கட்டடத் தொகுதிகள்

நாடளாவிய ரீதியில் விளையாட்டுக்கள் சார்ந்த கட்டடத் தொகுதிகளை நிர்மாணிப்பதற்கு விளையாட்டுத் துறை அமைச்சு திட்டமிட்டு வருகிறது.

அதற்கமைய மாவட்ட மட்டத்தில் விளையாட்டுக்கள் சார்ந்த கட்டடத் தொகுதி ஒன்றையும் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக விளையாட்டுக்கள் சார்ந்த கட்டடத் தொகுதிகளும் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இவற்றை நிர்மாணிப்பதற்குப் பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்து தெரிவுக்குமாறு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரான ரஞ்சித் செனவிரத்ன அனைத்து மாவட்டச் செயலாளர் களுக்கும் அறிவித்துள்ளார். (ம-22)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக.30

அகில இலங்கைத் துடுப்பாட்ட சங்கம் அகில இலங்கை ரீதியாக 17 வயதுப்பிரிவினரிடையே பிரிவு 3 இல் நடத்திய இரண்டாவது சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் கிண்ணியா மகா வித்தி யாலயத்தை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)

* * *

யாழ்ப்பாணம், ஓக. 30

அலெக்ஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காகக் கைதடி வடக்கு நவ சனசமூக நிலையமும் நவசக்தி விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டத்தில் இன்று செவ்வாய்க்கிழமை இடம் பெறவுள்ள போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

தென்மராட்சி ரீதியிலான அணிகள் பங்குபற்றும் ஆட்டத்தில் கைதடி சித்தி விநாயகர் விளையாட்டுக்கழகம் எதிர் மட்டுவில் கண்ணகை விளையாட்டுக்கழகம்.

யாழ்.மாவட்ட ரீதியி லான அணிகள் பங்குபற்றும் ஆட்டத்தில் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழக 'ஏ' பிரிவு எதிர் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்ழக 'பி' பிரிவு. (ம-23-288)

## கரப்பந்தாட்டத்தில் வென்றது ஆவரங்கால்

யாழ்ப்பாணம், ஓக.30

புத்தூர் கிழக்கு சரஸ்வதி விளையாட்டுக்கழகத்தால் சின்னத்தம்பி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான மின்ஒளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் மோதிக்கொண்டது.

5 ஓவர்கள் கொண்ட ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் 3:2 என்ற செற்கணக்கில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்தை வெற்றி கொண்டது.

நேற்றைய உதயனில் ஆவரங்கால் இந்து இளைஞர் வெற்றி பெற்றது என்று தவறுதலாகச் செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-23)

## இன்ரலீக் உதைபந்து வவுனியாவில்

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் இன்ரலீக் உதைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை வவுனியாவில் இடம் பெறவுள்ளது.அதில் யாழ். உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து வவுனியா உதை பந்தாட்ட லீக் அணி மோதவுள்ளது. (ம-23)

## 50 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்று

யாழ்ப்பாணம்,ஓக.30

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை வருடாந்தம் நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான மட்டுப்படுத்தப்பட்ட 50 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி நாளை புதன்கிழமை யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

முதல்நாள் ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## முக்கோண கிரிக்கெட்; இறுதி ஆட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஓக.30

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் முதல் முறையாக யாழ்.மாவட்டத்தில் முக்கோணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியை நடத்தியது.

அதன் இறுதியாட்டம் நாளை புதன்கிழமை காலை 9.30 மணியளவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இதில் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இந்த இறுதியாட்டத்துக்கு பிரதம விருந்தினராக கொமர்ஷல் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.பி. றஜீவன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-23)

# குமாரசாமி ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணக் கிரிக்கெட்; ஜொனியன்ஸ், சென்றல் அரை இறுதியாட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம்,ஓக.30

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் பி.எஸ். குமாரசாமி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 20- 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் கால் இறுதியாட்டங்களில் வெற்றி பெற்றதன் மூலம் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம், யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் ஆகியன அரை இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

சனிக்கிழமை நண்பகல் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற கால் இறுதியாட்டம் ஒன்றில் யாழ். சென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கிறாஸ் கொப்பஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ் கொப்பஸ் விளையாட்டுக்கழக அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் டிலோசன் 18,கோகுலன் 8 பிரகலதன் 7 ஓட்டங்களைத் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ். சென்றல் அணி சார்பில் மயூரன் 4 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கலிஸ்ரன் 3 ஓவர்கள் பந்து வீசி 2 விக்கெட்டுக்களையும் யசிந்தன் 4 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

78 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 9.3 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 78 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கலிஸ்ரன் 51, யசிந்தன் 18 ஓட்டங்களைத் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் கிறாஸ் கொப்பஸ் விளையாட்டுக்கழக அணி சார்பாக டிலக்சன் 4 ஓவர்கள் பந்து வீசி 15 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இதில் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 9 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற மற்றைய கால் இறுதியாட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் 9 விக்கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் காண்டீபன் 44, கரிவதனன் 39, குமணன் 31 ஓட்டங்களைத் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யூனியன் விளையாட்டுக்கழகம் சார்பாக கலி 3 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கியந்தன் 4 ஓவர்கள் பந்து வீசி 2 விக்கெட்டுக்களையும் பிரசாந்தன் 2 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

153 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யூனியன் விளையாட்டுக்கழக அணியினர் 14.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சதீஸ்கண்ணா 21, வைகுந்தன் 16 ஓட்டங் களைத் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஜொனியன்ஸ விளையாட்டுக்கழக அணி சார்பாக அகிலன் 3 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் ரதீஸ்குமார் 2.3 ஓவர்கள் பந்து வீசி 33 ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக்களையும் லவேந்திரா 4 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் காண்டீபன் 2 ஓவரில் 10 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கரிகரன் ஓர் ஓவரில் 8 ஓட்டங்களுக்கு ஓர் விக்கெட்டையும் கரிவதனன் 3 ஓவர்களில் 5 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயப்பீதியில் இந்திய வீரர்கள்



இந்திய வீரர்கள் தங்கிய அறையில் வெடிகுண்டு இருப்பதாக லண்டன் பொலிஸார் சோதனை நடத்தியதால், பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி, ஒரே ஒரு 'ரி-20' மற்றும் ஐந்து ஒரு நாள் ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்கின்றது. 'ரி-20' ஆட்டம் நாளை மான்செஸ்டர் நகரில் நடக்கின்றது. இதற்கு முன்னதாக, கடந்த 26 ஆம் திகதி கென்ட் அணிக்கு எதிராக பயிற்சி ஆட்டத்தில் விளையாடியது. இந்த ஆட்டத்தின்போது, இந்திய வீரர்களின் ஆடைமாற்றும் அறையில் சந்தேகத்துக்கு இடமான பொருள் இருப்பதாக கூறப்பட்டது. இது வெடி குண்டாக இருக்கும் என்று லண்டன் பொலிஸார் சந்தேகித்தனர். உடனே இந்திய வீரர்களை மைதானத்துக்குள் செல்லுமாறு கேட்டுக் கொண்டனர். பின்னர் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். இறுதியில் வெடிகுண்டு புரளி என்பது தெரியவந்தது.

வெடிகுண்டு பீதி காரணமாகவே மைதானத்திற்குள் யாரையும் அனுமதிக்க வேண்டாம் என்று, இந்திய அணியின் பயிற்சியாளர் டங்கன் பிளட்சர் மற்றும் வீரர்கள்பயிற்சி ஆட்டத்தின் முன்னர் பொலிஸாரிடம் கேட்டுக் கொண்டுள்ளனர். (15)

# ஆயத்தமில்லை



இங்கிலாந்திடம் இந்தியா தோல்வி கண்டு முதலிடத்தை இழந்ததற்கு சரியாக ஆயத்தமாகாததே காரணம் என்று முன்னாள் அணித்தலைவர் கபில்தேவ் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:

மிகப்பலம் வாய்ந்த அணியான இங்கிலாந்தை எதிர்கொள்வதற்கு இந்திய வீரர்கள் முழு அளவில் தயாராகவில்லை. உலகக் கிண்ணத்தை வென்ற பிறகு ஐ.பி.எல் போட்டி, அனுபவமற்ற வீரர்கள் அடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான தொடரில் வெற்றி பெற்றது உள்ளிட்ட காரணங்களால் இங்கிலாந்தை எளிதாக தோற்கடிக்க முடியும் என்று இந்திய வீரர்கள் நினைத்தனர் என்றார்.

கடந்த சில ஆண்டுகளில் இந்திய வீரர்கள் தொடர்ச்சியாக கிரிக்கெட் விளையாடியதால் சோர்வடைந்ததே தோல்விக்குக் காரணம் என்று கூறப்படுவதை மறுத்த கபில்தேவ், சவால் நிறைந்த இங்கிலாந்து தொடருக்காக இந்திய வீரர்கள் சரியாக திட்டமிடவில்லை. இங்கிலாந்துக்கு எதிராக இந்திய பந்துவீச்சாளர்கள் கடுமையாகப் போராடியிருக்க வேண்டும். வெற்றிக்கு குறுக்கு வழிகள் எதுவும் கிடையாது.

முறையாக தயாரானால் மட்டுமே சிறப்பாக ஆட முடியும். இந்திய வீரர்கள் முழு அளவில் தயாராகவில்லை என்றார். ஐ.பி எல் போட்டியாலேயே இந்தியா தோற்றது என்று கூறப்படுவதை மறுத்த கபில்தேவ், ஐ.பி.எல் போட்டியின்மூலம் நிறைய இளம் வீரர்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. யாரை அணியில் சேர்க்க வேண்டும் என்பது எனக்குத் தெரியாது. அதை கிரிக்கெட் சபை தான் முடிவுசெய்ய வேண்டும். போட்டிக்கு முன்பு முறையான திட்டமிடல் முக்கியமானது என்றார். (15)

# ஆச்சரியமாக இருக்கிறது



இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணி முழுமையாக தோல் வியடைந்தமை வியப்பாக உள்ளது, என்று அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் பிரெட் லீ தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி அந்த அணியுடனான 4 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரை முழுமையாக இழந்ததுடன் தரப்படுத்தலில் முதலிடத்தை அந்த அணியிடம் பறிகொடுத்து 3 ஆவது இடத்துக்கும் சரிந்துள்ளது. இந்த நிலையில், இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரில் இந்திய அணி முழுமையான தோல்வியை சந்தித்தமை ஆச்சரி யமளிப்பதாக பிரட் லீ தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தோல்வியானது இந்திய அணியை காயப்படுத்தி இருக்கும். ஆனால் சொந்த மண் சாதகத்தை நன்கு பயன்படுத்திக் கொண்ட இங்கிலாந்து வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

வேகம் மற்றும் 'ஸ்விங்சிற்கு' ஒத்துழைக்கும் இங்குள்ள ஆடுகளங்களில் விளையாடுவது மிகவும் கடினம். கடந்த 2005 ஆஷஷ் தொடரின் போது இதே அனுபவம் தான் எங்களுக்கு ஏற்பட்டது. இதனால் தான் அந்த தொடரில் நாங்கள் தோற்க நேரிட்டது.

இதனிடையே இந்திய அணியினர் அடுத்து வரும் ஒரு நாள் தொடரில் சிறப்பான முறையில் பதிலடி கொடுத்து கிண்ணத்தை கைப்பற்ற முயற்சிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. மேலும் அணியில் வேகப்பந்து வீச்சாளர்களாக இருப்பது கடினமான பணி. தொடர்ந்து உடற் தகுதியை பராமரிக்க கடும் முயற்சி செய்ய வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (15)

# வேகத்துக்கு வீழ்ந்தது அடி

## உசைன் போல்ட் தகுதி நீக்கம்




உலக தடகள சம்பியன் தொடரில் மிகப்பெரும் அதிர்ச்சி. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட 100 மீற்றர் ஓட்டத்தில் தவறாக ஓடிய 'உலகச் சம்பியன்' உசைன் போல்ட் தகுதி நீக்கம் செய்யப்பட்டார். இந்தப் பிரிவில் மின்னல் வேகத்தில் ஓடிய ஜமைக்கா வீரர் யோகன் பிளேக் தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார்.

தென் கொரியாவில் உள்ள டேகு நகரில் 13 ஆவது உலக தடகள சம்பியன் தொடர் போட்டிகள் நடக்கின்றன. நேற்று நடந்த 100 மீற்றர் ஓட்டத்தில் 'நடப்பு சம்பியனான' ஜமைக்காவின் உசைன் போல்ட் சாதிப்பார் என்று ரசிகர்கள் எதிர்பார்த்தனர். ஆனால், ஐந்தாம் 'லைனில்' ஓடிய இவர் அதிர்ச்சி தந்தார். 'ஸ்டார்ட்' சொல்வதற்கு முன்பாகவே அவசரப்பட்டு ஓடியதால், தகுதி நீக்கம் செய்யப்பட்டார். முக்கியமான தொடரில் இவர், மாபெரும் தவறு செய்ததால் ரசிகர்கள் ஏமாற்றம் அடைந்தனர். கடந்த 2008 இல் பீஜிங்கில் நடந்த ஒலிம்பிக்கில் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்ற போல்ட், இந்த முறை தனது சொந்த தவறால் விரக்தியுடன் வெளியேறினார்.

பின்னர் நடந்த 100 மீற்றர், ஓட்டத்தில் மின்னல் வேகத்தில் பறந்த ஜமைக்காவின் யோகன் பிளேக்(9.92 வினாடி) தங்கம் வென்றார். அமெரிக்காவின் வால்டர் டிக்ஸ்(10.08 வினாடி) வெள்ளி கைப்பற்றினார். செயின்ட் கிட்சை சேர்ந்த கிம் கோலின்ஸ்(10.09வினாடி ) வெண்கலம் வென்றார்.

தனது வெற்றி குறித்து பிளேக் கூறுகையில், இதனை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. எனது சக வீரரான போல்ட் நீக்கத்தை நினைத்தால், கண்களில் கண்ணீர் வருகிறது. விதிமுறையில் மாற்றம் வேண்டும். முதல் தவறில் வெளியேற்றுவது சரியல்ல. இன்னொரு வாய்ப்பு வழங்க வேண்டும். தங்கப் பதக்கத்தை போல்டிற்காக வெல்ல வேண்டும் என்று நினைத்தேன். இதில் வெற்றி கண்டதில் மிகவும் மகிழ்ச்சி, என்றார். (15)

# பரம எதிரியை வீழ்த்தியது மான்செஸ்டர்

இங்கிலாந்து பிரிமியர் லீக் கால்பந்து போட்டியில் பரம்பரை எதிரிகளான மான்செஸ்டர் யுனைடெட் அணியும் ஆர்சனெல் அணியும் மோதின. இதில் ஆர்செனல் அணியை 8- 2 என்ற கோல்கள் கணக்கில் அபார வெற்றி பெற்றது மான்செஸ்டர் யுனைடெட்.

மான்செஸ்டர் அணியின் வெய்ன் ரூனி 'ஹட்ரிக்' சாதனை புரிந்தார். ரூனி இரண்டு 'ப்ரீ கிக்' மற்றும் ஒரு பெனால்டி ஷொட்டில் 3 கோல்களை அடுத் தடுத்து அடித்து 'ஹட்ரிக்' எடுத்தார்.

ஆர்செனல் அணிக்கு தியோ வால்காட், ரொபின் வான் பெர்சி ஆகியோர் ஆறுதல் கோல்களை அடித்தனர். பிரிமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் அனைத்துப் போட்டிகளையும் இதுவரை வென்ற மான்செஸ்டர் யுனைடெட் முதலிடத் தில் உள்ளது. ஆர்செனல் அணிக்கு இதுவரை ஒரேயொரு புள்ளி மட்டுமே கிடைத்துள்ளது. மேலும் 3 போட்டிகளிலும் அந்த அணியின் வீரர்களில் ஒருவருக்கு சிகப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டுள்ளார். நேற்று ஆர்செனல் அணி வீரர் கார்ல் ஜென்கின்சன் சிகப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார். (15)

# மெஸ்ஸி இந்தியா வருகை



ஆர்ஜென்டினா- வெனிசுலா அணிகள் மோதும் உதைபந்து போட்டி கொல்கத்தா சால்ட் லேக் அரங்கில் எதிர் வரும் 2 ஆம் திகதி நடக்கின்றது. உலகின் தலைசிறந்த கால்பந்து வீரரான மெஸ்ஸி இந்த காட்சி போட்டியில் விளையாடுகிறார்.

அவர் ஆர்ஜென்டினா அணிக்கு அணித்தலைவராக உள்ளார். இன்று இரவு மெஸ்ஸி கொல்கத்தா வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மெஸ்ஸி போன்ற உலகின் தலைசிறந்த வீரர் கொல்கத்தாவில் விளையாடுவது இந்திய கால்பந்து ரசிகர்களுக்கு கிடைத்த அரிய வாய்ப்பாகும். இந்த போட்டியை 1,20,000 பேர் அரங்கில் அமர்ந்து பார்க்கிறார்கள். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி மோகம்...

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது தலைமைப் பதவிக்கு அடிபடும் மூருக்கும் இடையில் ஒரு உடன்பாட்டைக் கண்டு, ஒவ்வொரு வருடங்களுக்கும் மாறி மாறி தலைமைப் பதவியை வகிக்கலாம் என்று இளைஞர்கள் முன் வைத்த திட்டத்தை வல்வை அனந்தராசா ஏற்றுக் கொள்ள வில்லை. இது தொடர்பில் இளைஞர்கள் கூட்டிய கூட்டத்தில் அவர் கலந்து கொள்ளவே இல்லை.

இந்தப் பின்னணியிலேயே வல்வெட்டித்துறை நகர சபையின் கூட்டத்தில் தலைவரையும் மற்றொரு உறுப்பினரையும் தவிர ஏனையோர் புறக்கணித்தனர். பதவி மோகம் இவர்களைப் பிடித்து ஆட்டுவதால் இந்த நிலை. பதவியே முக்கியம் மக்கள் நலன் அல்ல என்ற ரீதியில் இவர்கள் நடப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. வல்வை அனந்தராசா பதவியை விட்டுக் கொடுக்காததன் காரணத்தால் அவருக்குத் துணை போய் நகரசபை நிர்வாகத்தை அவர் திறம்பட நடத்தக்கூடாது என்பதில் இவர்கள் அக்கறை காட்டுகிறார்களே தவிர சபையின் நடவடிக்கைகளை மேம்படுத்தும் எண்ணங்கள் எதனையும் இவர்களிடம் காணமுடியவில்லை.

சபையின் ஏனைய உறுப்பினர்களையும் கூட்டங்களுக்குச் செல்ல விடாமல் தடுப்பதில் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரான குலநாயகமே தீவிரமாக இருக்கிறார் என்றும் தகவல்கள் கிடைக்கின்றன. அவரது கட்சி தமிழர்களுக்கு அரசு கிடைக்க வேண்டும் என்பதற்காக தந்தை செல்வாவால் ஆரம்பிக்கப் பட்டதேதவிர, தனிப்பட்ட மனிதர்களுக்குப் பதவி கிடைப்பதற்காக அல்லன்ற உண்மையைப் புரிந்து கொண்டு ஒன்றிணைந்து செயற்பட்டு வல்வை நகரசபையைத் திறம்பட செயற்படுத்த உதவ வேண்டும். அதுவே காலத்தின் தேவை.

*-வல்லையூர் ஆனந்தன்*

## விற்பனை உதவியாளர் தேவை

**ஹாட்வெயர்ஸ் மற்றும் வாகன உதிரிப் பாகங்கள் விற்பனை செய்யும் வியாபார நிலையத்துக்கு விற்பனை உதவியாளர் தேவை. 20-40 வயதுக்கு உட்பட்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.**

**ஆவரங்கால் சந்தியில் இருந்து 3 கிலோ மீற்றருக்கு இடைப்பட்ட தூரத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

தொடர்பு: 021 300 7970, 0777148146

## மணமகள் தேவை
(வாணி இன்ரநஷனல் திருமண நிலையம்)

*யாழ். இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1986 இல் பிறந்த நட்சத்திரம் பூராடம் 2 ம் பாதம், உயரம் 5.8 நிறம் பொதுநிறம் [பிரபல motor cycle, முச்சக்கர வண்டி திருத்துவதில் மிக திறமை வாய்ந்தவரும் india வில் பரிசு பெற்றவரும்] ஆன மணமகனுக்கு [சுவிஸ்லான்ட், ஜேர்மனி, டென்மார்க், சுவீடன், பிரான்ஸ், இத்தாலி, ஆஸ்திரேலியா, நெதர்லாந்து, கனடா, அமெரிக்கா] போன்ற நாடுகளில் குடி யுரிமை உள்ள மணமகள் தேவை. மணமகன் நடிகர் விஜயின் முகத்தோற்றம் உடையவர் குறிப்பிடத்தக்கது.* தொடர்புகளுக்கு:
181, 2ம். குறுக்குத் தெரு.யாழ்ப்பாணம்.
0771307185

## வீடு விற்பனைக்கு

**பழைய பொலிஸ் நிலையத்தடி, உயரப்புலம் ஆனைக்கோட்டை விலாசத்தில் நிலப்பரப்பு, மூன்று குளி இரண்டு தசம் இரண்டு ஐந்து (நில.பர 3 குளி 2.25) விஸ்தீரணம் கொண்ட காணியும், வீடும் விற்பனைக்கு உள்ளது.**

தொடர்புகளுக்கு: 0777146254, 021 222 0305

## கணினி விற்பனைக்கு

P(VI)கணினி LCD Monitorமற்றும் அனைத்துப் பொருள்களுடனும் ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு.
Internet, Skype, V/call பாவிக்கலாம்.Free 4GB Pen Drive/ Web Camera. 19750/= மட்டுமே.
Sky Computer, 162, Main Street, Jaffna.
0212221417
0750698608

## மரண அறிவித்தல்

### நன்னித்தம்பி கதிர்காந்தன் (காந்தன்)

(முன்னாள் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை ஊழியர்)



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நன்னித்தம்பி கதிர்காந்தன் (28.08.2011) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி - இராசாம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற நடராசா (மாவிட்டபுரம்)மற்றும் திருப்பதி அம்மாளின் அன்பு மருமகனும், அமுதினியின் அன்புக் கணவரும், துஷ்யந்தன், சிரோமி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கங்காதரன், மதிவதனி, மஞ்சுளா ஆகியோரின் அன்புச் சகோதரனும், தங்கரத் தினம், காலஞ்சென்றவர்களான தம்பையா, பொன்னையா, கனகரத்தினம், சின்னத்தம்பி ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ் சென்றவர்களான சுவாமிநாதன், இராசரத்தினம், நாகம்மா ஆகியோரின் பெறா மகனும், சந்திரகாந்தன், செந்தூரன் ஆகியோரின் ஒன்று விட்ட சகோதரனும், காலஞ்சென்ற ஸ்ரீரஞ்சன் மற்றும் சயந்தன், ஜெயரஞ்சன், ஜெயந்தன், உமாசுதன், பாஸ்கரன், கெங்காதேவி, குமுதினி, சுகந்தினி, சாந்தினி, ஜெயந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெற உள்ளது.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நெட் டிலிப்பாய் பிள்ளையார் கோவிலடி,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*

*தகவல்:*
திரு.திருமதி சுப்பிரமணியம் தங்கரத்தினம் (மயிலிட்டி)

## மரண அறிவித்தல்

### சவரிமுத்து சூசைப்பிள்ளை

(Former Principal)
(B.A. Lon. Hons, Dip. in Edu, Dip. in Tamil)



இல 11, கதீற்றல் வீதியைச் சேர்ந்த சவரிமுத்து சூசைப்பிள்ளை 28.08.2011 அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து - விக்ரோறியா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், மேரியோசேப்பினின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான யோண் செபஸ்தியாம்பிள்ளை - பிரான்சிஸ்கா தம்பதியரின் மருமகனும், நிலோபர், டினேந்திரா (Swiss), ஜெறால்ட் திலகேந்திரா (UNOPS), றேமன்ட் லோகேந்திரா (Instructor Computer Point), அனற் ஜறாங்கனி (Canada) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை, மேரிப்பிள்ளை, காலஞ்சென்ற எலிசபெத், மொனிக்கம்மாவின் அன்புச் சகோதரனும், மரீனா வசந்தினி (Swiss), மரீனா (ஆசிரியை, யா/புனித மரியாள் வித்தியாலயம்), பற்றீசியா (ஆசிரியை, யா/புனித சாள்ஸ் வித்தியாலயம்), அமலதாசன் (Canada) ஆகியோரின் அன்பு மாமனும், டீனுகா, டீலக்சன், அட்லிக்கா, அல்பாங்கா, சஞ்ஜியா, தியோரன், திபூசன், தினுசன், அனுசிக்கா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 11, கதீற்றல் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(சி/3353)

*தகவல்:*
மனைவி, பிள்ளைகள்.

## வேலை ஆள்கள் தேவை

**எமது ஸ்தாபனத்துக்கு புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள ஆண்கள் மட்டும் தேவை.**

***கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.***

நேரில் தொடர்பு கொள்ள
**சரவணா ரெக்ஸ்**
**770, 772 கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம். (தட்டாதெருச் சந்தி)**

## PATRICIAN INSTITUTES

*பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்*
**புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பமாகின்றன.**

**ஆரம்பம்: 05.09.2011.**

**குறிப்பு: போரில் பாதிக்கப்பட்ட, வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பிள்ளைகளுக்கு தகுதி அடிப்படையில் கியுடெக் நிறுவனத்தின் மூலம் இலவச பயிற்சிகள் வழங்கப்படும்.**

01. COMPUTER COURSES (கணினி பயிற்சி நெறி)
02. Shot Hand Typing (English) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்)
    கணினி மூலம் தட்டெழுத்துப் பயிற்சி அளிக்கப்படும்.
03. Shot Hand Typing (Tamil) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்)
    கணினி மூலம் தட்டெழுத்துப் பயிற்சி அளிக்கப்படும்.
04. Sewing (தையல்)
05. General Motor Mechanism (மோட்டார் வாகனம் திருத்துதல்)
06. General Elactrician (ஜெனரல் எலக்ரிஸன்)
07. Radio & T.V. Repairing (வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி திருத்துதல்)
08. Lathe Machine Operation (கடைச்சல் இயந்திரப் பயிற்சி)
09. Arc Welding (மின் ஒட்டுநர் பயிற்சி) On the Job Training
10. Carpentry (மரவேலை) On the Job Training
11. Refrigeration and Air conditioning (குளிர்சாதனப்பெட்டி திருத்துதல்)

**குறிப்பு:**
01. பயிற்சிக் கட்டணம் தவணை முறையில் செலுத்தலாம்.
02. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் பயிற்சிக் கட்டணத்தில் சலுகைகள் பெறலாம்.
03. பயிற்சி நெறிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு:
Registrar, Patrician Institute, 61 (59), St. Patrick's Road, Jaffna.
T.P: 021 2226148, Fax: 021 2226148
Email: Spitee@sltnet.lk

## மரண அறிவித்தல்

### வரதராஜா ஸ்ரீரங்கன்

*(சட்டத்தரணி)*



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட வரதராஜா ஸ்ரீரங்கன் (28.08.2011) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற Dr. வரதராஜா - திருமதி விசாலாட்சியின் அன்பு புதல்வனும், திரு.திருமதி நடராஜாவின் மருமகனும், வத்சலா (சட்டத்தரணி) யின் அன்புக் கணவரும், கோகிலா (மருத்துவக் கல்லூரி, பங்களாதேஷ்) அன்புத் தந்தையும், சரோஜினி (சட்டத்தரணி) Dr. ஸ்ரீகாந்தன் (UK), ஸ்ரீதரன் (வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சொர்ணபாலா, மகாலஷ்மி (UK), சுஷிலா (UK), கல்யாணி, பரேஷ் (U.S.A), காலஞ்சென்ற ராஜமோகன், ஷரன் (UK) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.08.2011) செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் AF Rarmond (Borella) மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, 2 மணியளவில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
குடும்பத்தினர். 28, 40 "Lean
Colombo - 6

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரும், விவசாய எந்திரவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமான
**பொ.ஆழ்வாப்பிள்ளை**
அவர்களின் தாயார்

**திருமதி பொன்னையா சரஸ்வதி**

அவர்கள் (25.08.2011) அன்று இறைபதமடைந்து விட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்,யாழ்ப்பாணம்.**

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 24 | 13 |
| ★ | ★ |
| 12 | 09 |
| ★ | ★ |
| 1945 | 2007 |



**திருமதி மகாலிங்கம் இராஜேஸ்வரி**

எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலாது. உங்கள் ஞாபகங்களைச் சுமந்து வாழும் கணவர், மகன், மகள், பெறாமகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.*

தகவல்:
மாணிக்கம் மகாலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரே நாளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

க்க் கூறி வீட்டில் இருந்து புறப்பட்ட சிறுமி நள்ளிரவு வரை திரும்பி வரவில்லை என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்ற மாணவி ஒருவர் வீடு திரும்பவில்லை என்று மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

உயர்தரம் படிக்கும் மானிப்பாயைச் சேர்ந்த எஸ்.றொஷானி (வயது 17) என்ற சிறுமியே காணாமல் போயுள்ளார்.

கடந்த 22ஆம் திகதியும் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயில் பகுதியைச் சேர்ந்த சிறுமி ஒருத்தியும் காணாமல் போயிருந்தார். அவர் தொடர்பில் இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. (உ-10, 86, 319)

## கச்சதீவுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஆண்டு வரை தமிழக மீனவர்கள் இலங்கை இராணுவத்தினரால் சந்தேகத்தின் பேரில் தாக்கப்பட்டது உண்மைதான். ஆனால் கடந்த 6 மாதமாக ஒன்று இரண்டைத் தவிர வேறு எந்தவித அசம்பாவிதமும் கடல் பகுதியில் நடக்கவில்லை.

சீனா எங்கள் நட்பு நாடு. இந்தியா எங்கள் உறவு நாடு. இந்தியாவின் உறவுடன் வர்த்தகத்தை மேம்படுத்த விரும்புகிறோம். இதனால்தான் பெங்களூரில் இலங்கை கௌரவப் பிரதிநிதி அலுவலகம் தொடங்கப்பட்டுள்ளது.

கௌரவப் பிரதிநிதியாக கே.சுதாகர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்தியா எங்கள் வர்த்தகத்திற்கும், சுற்றுலாவிற்கும் பெரிதும் உதவுகிறது. எனவே இந்தியாவுடனான வர்த்தக உறவை மேலும் பெருக்க விரும்புகிறோம்.

- இப்படி அவர் தெரிவித்தார். (ர)

## ஜெயலலிதா கைவிரிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானத்தை மாநில சட்டப்பேரவையில் நிறைவேற்ற முடியாது.

மூவரின் தண்டனையை இரத்துச் செய்யும் அதிகாரம் முதல்வருக்கு இருக்கிறது எனத் தவறான பிரசாரம் மேற்கொள்ளப்படுகிறது. அவர்கள் மீண்டும் ஜனாதிபதியைத்தான் அணுக வேண்டும்.

ஜனாதிபதியால் கருணை மனு நிராகரிக்கப்பட்ட பின்னர், அது தொடர்பாக பின்னர் தாக்கல் செய்யப்படும் அனைத்து மனுக்களும் ஜனாதிபதிக்குத்தான் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இது குறித்து நடவடிக்கையை அவர்தான் எடுப்பார்.

எனவே, ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள 3 பேரின் தூக்குத் தண்டனையை இரத்துச் செய்யும் அதிகாரம் எனக்கு இல்லை.

குடியரசுத் தலைவரால் கருணைமனு நிராகரிக்கப்பட்ட நிலையில், இந்த மூவரின் உயிரைக் காப்பாற்றத் தற்கொலை செய்து கொள்கிறேன் எனக் கடிதம் எழுதி வைத்து விட்டு மக்கள்மன்றம் என்ற அமைப்பைச் சேர்ந்த செங்கொடி என்ற இளம்பெண் தீக்குளித்தார் என வந்துள்ள செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தி உள்ளது.

உணர்ச்சிவயப்பட்டு, இதுபோன்ற செயல்களில் எவரும் ஈடுபட வேண்டாம் என்றும் நான் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முதல்வரால் முடியும்: ராமதாஸ்

கருணை மனுக்களை ஜனாதிபதி தள்ளுபடி செய்துவிட்ட நிலையில், அதை மாற்றுவதற்கு முதலமைச்சர் என்ற முறையில் தமக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று கூறி தமது கடமையிலிருந்து விலகிக் கொள்ள முதலமைச்சர் ஜெயலலிதா முயன்றிருப்பது மிகுந்த வருத்தத்தையும் வேதனையையும் அளிக்கிறது என்று தெரிவித்திருக்கிறார் டாக்டர் ராமதாஸ்.

இது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

கருணை மனுவை குடியரசு தலைவர் தள்ளுபடி செய்தாலும், அவர் மீண்டும் ஆளுநரிடம் கருணை மனு தாக்கல் செய்யலாம். அதன் மீது மாநில அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்று ஆளுநர் முடிவெடுக்கலாம் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான அதிகாரத்தை ஆளுநருக்கும், மாநில அரசுக்கும் வழங்கும் அரசியல் சட்டத்தின் 161ஆவது பிரிவு தீர்ந்து போகாத இறையாண்மை கொண்டது என்றும், ஒருவரின் கருணை மனுவை குடியரசு தலைவர் தள்ளுபடி செய்ததாலேயே, அவரின் கருணை மனுவை மீண்டும் ஆய்வு செய்யும் அதிகாரம் மாநில ஆளுநரிடமிருந்து பறிக்கப்படாது எனவும் அரசியல் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டப்படியான உரிமைகள் ஒருபுறம் இருக்க, இம்மூவரையும் காக்க அரசியல் ரீதியிலான நடவடிக்கைகளையும் முதலமைச்சர் மேற்கொள்ள இயலும்.

இலங்கை இனப்படுகொலைக்கு காரணமானவர்களை போர்க்குற்றவாளிகளாக அறிவிக்க வேண்டும் என்று தமிழக சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி பெருமை தேடிக் கொண்ட முதலமைச்சர் அவர்கள், இம்மூவரின் தூக்குத் தண்டனையையும் ரத்து செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியும் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கும், மத்திய அரசுக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

மூவரின் உயிரையும் காப்பாற்ற வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் மனது வைத்தால், அதை சாதிக்க எத்தனையோ வழிமுறைகள் உள்ளன. அவை அனைத்தையும் முதலமைச்சர் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் - என்றுள்ளது.

### போராட்டங்கள்

சிதம்பரம்: 3 பேரின் தூக்குத்தண்டனையை ரத்துசெய்ய வலியுறுத்தி சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று வகுப்புகளைப் புறக்கணித்து சிதம்பரம் ரயில் நிலையத்தில் மறியலில் ஈடுபட்டனர்.

மறியலில் ஈடுபட்ட 3 மாணவிகள் உள்ளிட்ட 113 மாணவர்களை பொலிஸார் கைது செய்தனர்.

திருச்சி: 3 பேரின் மரண தண்டனையை ரத்துசெய்ய வலியுறுத்தி திருச்சியில் சட்டக்கல்லூரி மாணவர்கள் நேற்று வீதி மறியலில் ஈடுபட்டனர். தொடர்ந்து ரயில் மறியலிலும் அவர்கள் ஈடுபட்டனர். இவை தொடர்பில் 28 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதனிடையே 3 பேருக்கு விதிக்கப்பட்டுள்ள மரணதண்டனையை ரத்து செய்ய வலியுறுத்தி புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்த 3 பேர் தீக்குளிக்க முயற்சி செய்தனர். எனினும் மற்றவர்களால் காப்பாற்றப்பட்டனர்.

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டங்களைக் கொண்டே நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நடைமுறையிலுள்ள சாதாரண சட்டங்கள் ஊடாகக் குறித்த அரசியல் கைதிகள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார்கள். விசாரணை செய்யப்படுவார்கள். இவர்கள் தொடர்பான விசாரணை உட்பட நீதிமன்ற நடவடிக்கைகள் தமிழ்மொழியிலேயே நடைபெற்று வருகின்றன; இனியும் நடைபெறும் - என்றார். (உ)

## தூக்குத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்புச் சட்டத்தில் நிபுணத்துவம் பெற்றவர்.

சட்டத்தரணி வாகித் சௌத்திரி மும்பையைச் சேர்ந்தவர். பல தூக்குத்தண்டனை வழக்குகளில் ஆஜராகி, பலரது உயிரைக் காப்பாற்றியவர்.

அதுபோல சட்டத்தரணி காலின் கான்கிலோஸ் மனித உரிமை தொடர்பான வழக்குகளில் நிபுணத்துவம் பெற்றவர். இவர்களது வாதம் தூக்குக்கயிறை எதிர்நோக்கியுள்ள மூவரை நிச்சயம் காப்பாற்றும் என்ற நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் நிலவுகிறது. (உ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சண்முகவேல் ஆச்சாரி கமலவல்லி



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், ஆஸ்பத்திரி வீதி, கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகவேல் ஆச்சாரி கமலவல்லி நேற்று (29.08.2011) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா ஆச்சாரி - சிதாலக்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான சுப்பையா ஆச்சாரி -வேலம்மாள் தம்பதியரின் மருமகளும், சண்முகவேல் ஆச்சாரியின் அன்பு மனைவியும், சுந்தரவல்லி, புஸ்பவல்லி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சந்திரசேகரன்(HNB Assurance), பாலா, சுரேஸ்கண்ணா ஆகியோரின் பாசமிகு தாயும், யசிந்தா, சித்திரா, ரேவதி ஆகியோரின் பாசமிகு மாமியும், நிசாந்தசேகரம் , கஜனி ஆகியோரின் பேர்த் தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.08.2011) புதன்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லட் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.30, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி தங்கராசா இராஜேஸ்வரி



நவாலி தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கு காளி கோயிலடியை வசிப்பிடமாகவும், தற்போது ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கராசா இராஜேஸ்வரி (28.08.2011) ஞாயிற்றுக்கிழமை ஆஸ்திரேலியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- கண்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை- விசாலாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை தங்கராசாவின் அன்புத் துணைவியாரும், தங்கராணி(ராஜி-ஆஸ்திரேலியா) யின் அன்பு தாயும், கணேசமூர்த்தி சரவணபவானின் அன்பு மாமியும், ஸ்ருதி, ஸ்றேயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கணேசலிங்கம், அன்னலட்சுமி, மகேஸ்வரி, வைத்திலிங்கம், புவனேஸ்வரி, சுந்தரலிங்கம், விக்னேஸ்வரி, விமலேஸ்வரி, பஞ்சலிங்கம், சிவலிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.08.2011) புதன்கிழமை காலை ஆஸ்திரேலிய நேரப்படி 9.30 -12 மணியளவில் சிட்னி ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி தெற்கு, மானிப்பாய். தகவல்: குடும்பத்தினர்.

IELTS ? K.U unleashes



இது ஒரு பரீட்சையாகும் . பாடநெறியல்ல சராசரி ஆங்கில அறிவின்றி இந்தப்பரீட்சையை அணுக முடியாது இது பற்றிய முழு விபரங்களையும்,இலவச கலந்துரையாடல் மூலம் அறிந்துகொள்ள-நேர ஒதுக்கீட்டுக்கு அலுவலக நேரங்களில் மட்டும் அழைக்கவும்- 0777302882

What is IELTS ? and how to succeed it ?
Get insights of IELTS from qualified lecturer !
Free IELTS demonstration with prior appointments

Knowledge Universe
Authorized IELTS Registration centre in Jaffna
Tel: 0777302882 |# 75.Temple Road,Jaffna | www.kugroup.info

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் சின்னத்தம்பி சிவகுரு
(B.A Dip. in Education J.P ஓய்வுபெற்ற அதிபர்)



கடந்த [01.08.2011] அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை [31.08.2011] புதன்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் யாவரும் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அவரது மரணச் செய்தி கேட்டு நேரிலும், உள்நாட்டு, வெளிநாட்டுத் தொலைபேசி மூலமும், தந்தி மூலமும், மலர்வளையங்களும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் செலுத்தியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சுதுமலைவடக்கு,
மானிப்பாய்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

வீடு வாடகைக்கு உண்டு

யாழ். நகரில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்களுக்கு உகந்தது.
தொ.பே-0776660422

பார்மசிக்கு ஆள் தேவை

நெல்லியடியில் உள்ள பார்மசி ஒன்றுக்கு வேலை ஆள்கள் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை. அருகில் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
0777449491

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

Benly CD 125, CT100, V90, Scooty Pup,றோபின் ஜெனரேட்டர் (1500KV), டெனியோ ஜெனரேட்டர்(2200KV) ஆகியன விற்பனைக்குண்டு.

ஸ்ரீ மோட்டோர்ஸ்,
79, [illegible]
T.P-0779813538

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச சபைகளின் முதலாவது அமர்வில் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றம்

**நாவாந்துறை சம்பவம், மூவர் தூக்குத் தண்டனைக்கு எதிராக**

சாவகச்சேரி நகரசபையின் முதலாவது அமர்வுக் கூட்டம் நேற்று முற்பகல் 9 மணிக்கு நகர சபை கூட்ட மண்டபத்தில் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு துணைத் தலைவர் கு.சதாசிவமூர்த்தி உட்பட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒன்பது பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் இரண்டு பிரதிநிதிகளும் சமுகமளிக்கவில்லை.

சாவகச்சேரி நகரசபையில் கடந்த காலங்களில் தலைவர், துணைத் தலைவர் உறுப்பினர்களாக சேவையாற்றி மரணித்த அனைவருக்கும் அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை தலைவரினால் சமர்பிக்கப்பட்டு அவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தி அனுதாபத் தீர்மானம் சபை உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் நகரசபையின் எல்லைக்குட்பட்ட மக்களின் நலன்கள் தொடர்பாக ஆராயப்பட்டு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மேலும் எதிர்காலங்களில் சபையின் மாதாந்தக் கூட்டம் பிரதி மாதத்தின் இரண்டாவது புதன்கிழமை நடத்துவதெனவும் இரண்டாவது புதன்கிழமை விடுமுறை தினமானால் மூன்றாவது புதன்கிழமை நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**வலி.தெற்குப் பிரதேச சபை**

வலி.தெற்குப் பிரதேசசபையின் முதலாவது கூட்டம் நேற்று அதன் தலைவர் ரி.பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நாவாந்துறையில் கடந்த 22 ஆம் திகதி இராணுவத்தினர் மக்கள் மீது கண் மூடித்தனமாக தாக்குதல் நடத்திய சம்பவத்துக்கு கண்டனத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். எனினும் ஐ.ம.சு. கூட்டமைப்பு உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை.

**வலி.வடக்குப் பிரதேச சபை**

வலி.வடக்கு பிரதேசசபையின் முதலாவது கூட்டம் நேற்று அதன் தலைவர் எஸ்.சுகிர்தன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குச் சார்பாக தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். ஐ.ம.சு. கூட்டமைப்பு சார்பில் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்கள் எவரும் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

நேற்றைய கூட்டத்தில் முக்கிய தீர்மானமாக ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள மூவரையும் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என அழுத்தம் கொடுக்குமாறு தமிழக முதல்வர் ஜெயலலிதாவை வேண்டிக் கொள்ளும்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இவர்கள் மூவரையும் விடுதலைசெய்ய முதல்வர் முன்வரவேண்டும் என்ற அடிப்படையில் தமது தீர்மானம் அடங்கிய வேண்டுதல் அறிக்கையை அங்கு அனுப்பிவைக்கவும் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. (எ-10-86)

## 3 இலங்கை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது. வெவ்வேறு குழுக்களைச் சேர்ந்த யாத்திரிகர்கள் மூவரே காணாமற் போயுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தெனியாய, யட்டியாந்தோட்டை, எல்பிட்டிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே காணாமற் போயுள்ளனர். இவர்களைக் கண்டுபிடிப்பதற்கு புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதரகம் இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

காணாமற் போனவர்களைத் தேடும் பணியை இந்தியப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (உ)

## நல்லூரிலும்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுமியே காணாமல் போயுள்ளார்.

பெற்றோருடன் ஆலயத்துக்கு வந்த சிறுமி திடீரென மாயமாகி விட்டார். தொடர்ச்சியாக ஒலி பெருக்கியில் அறிவித்தல் கொடுத்தும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதனைத் தொடர்ந்து பெற்றோரால் நல்லூரில் உள்ள தற்காலிக பொலிஸ் நிலையத்தில் முறையிட்டனர்.

நேற்று இரவு வரை சிறுமி கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. அவரைக் கண்டுபிடிக்க பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (உ-10,86)

## படையினருக்கு களங்கம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் கடந்த சில தினங்களாக இரவு நேரங்களில் கிறீஸ் பூத அச்சம் காரணமாக மக்கள் மத்தியில் பதற்றம் நிலவுவது குறித்துக் கேட்டபோதே அவர் இப்படிக் கூறினார்.

கிறீஸ் பூதம் அல்லது மர்ம மனிதர்கள் என்ற வதந்திகளின் காரணமாக இரவு நேரங்களில் யாழ்ப்பாணத்து மக்கள் தூக்கத்தை இழந்துள்ளனர். அவர்களின் இயல்பு வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்றிரவும் கோப்பாய், குப்பிளான், கரவெட்டி, யாழ். நீராவியடி ஆகிய இடங்களில் இத்தகைய வதந்திகளால் மக்கள் வீதிகளில் குழுமி இருந்தனர். படையினர் வந்து இவர்களை வீடுகளுக்குச் செல்லுமாறு விரட்டினர்.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் அசம்பாவிதங்கள் தொடர்பாகக் கேட்டபோதே பிரதிப் பொலிஸ் மா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் மர்ம மனிதர்கள் நடமாடுவதாகக் கூறப்படுவதில் எவ்வித உண்மையுமில்லை. இங்கு அப்படி எதுவுமே நடைபெறவில்லை. இவையாவும் பொய்யான வதந்திகள்.

அவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றிருந்தால் மக்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்வர். ஆனால், யாழ்ப்பாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு இதுவரை இவ்விடயம் தொடர்பாக எந்தவொரு முறைப்பாடும் கிடைக்கப்பெறவில்லை. இந்நிலையில் நாம் எப்படி இதை நம்புவது?

படையினருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் நோக்கிலேயே சதிகாரர்களால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வதந்தியை மக்கள் நம்பவேண்டாம். இது அவர்களின் சுயலாபத்துக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என நாம் கருதுகிறோம்- என்றார்.

## மரண அறிவித்தல்கள்

### கணபதி சுவாமிக்குரு உருக்குமணி அம்மா



கணபதி சுவாமிக்குரு உருக்குமணி அம்மா நேற்று (29.08.2011) திங்கட்கிழமை பிற்பகல் இறைபதம் அடைந்தார்.

அன்னார் ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயிலின் முன்னைநாள் பிரதம குரு அமரர் ச.கணபதி சுவாமிக் குருவின் பாசமிகு பாரியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2011) செவ்வாய்க்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக் காக கருகம்பன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(மகன்மார்கள்)
பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனகுரு,
பிரம்மஸ்ரீ ச.க.புருஷோத்தமக்குரு,
பிரதம குருமார்கள்:
ஸ்ரீவல்லிபுரக் கோயில் துன்னாலை புலோலி
பிரம்மஸ்ரீ ச.க.இராமச்சந்திரக்குரு,
(ஆஸ்திரேலியா)

ஸ்ரீவல்லிபுராயம்,
இந்திரம்மன் கோயிலடி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

### நடராசா தர்மலிங்கம்



வேலணை வடக்கு சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட நடராசா தர்மலிங்கம் கடந்த (28.08.2011) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்[illegible] நடராசா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் காந்திமதியின் அன்புக் கணவரும் தில்லையம்மா, காலஞ்சென்றவர்களான இராமநாதன், சபாநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தங்கராசா, குணலெட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுபேந்திரன் (சுவிஸ்), சுமதி (ஜேர்மனி), கங்கா (பிரான்ஸ்), காலஞ்சென்ற யமுனா மற்றும் ஞானதரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் மனோகரி, தவநாதன், பேரின்பநாதன், ஜீவகலா ஆகியோரின் அன்பு மாமனும் சண்முகநாதன், பரமலிங்கம், பாக்கியலெட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் அபிநயன், சுபநயன், எழில்நயன், சுபநயா, கஜல்தா, கஜந், கானுஜா, அஜன், அபிரா, அபிதா, அனோஜன், அனிஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (01.09.2011) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
காந்திமதி (மனைவி - பிரான்ஸ்)

வீடு வாடகைக்கு தேவை
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
சுற்றாடல் அமைச்சு
மேற்படி அதிகாரசபைக்கு இரண்டு வருடத்துக்கு மேல் காரியாலயக் கட்டடமாகப் பாவிப்பதற்கு யாழ். நகருக்கு 5 கிலோமீற்றருக்கு உட்பட்டதாகவும் படுக்கையறைகள் (குளியல் அறைகள் இணைந்ததாக) மற்றும் வாகனத்தரிப்பிடம் உள்ள வீடு வாடகைக்குத் தேவை.
செப்ரெம்பர் 9 ஆம் திகதிக்கு முன்னதாகக் கீழ்காணும் முகவரிக்கு விலைகள் தொடர்பான விவரங்களுடன் அறியத்தரவும்.
தொடர்புகளுக்கு:
தலைவர், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை,
இல: 758, 2 வது மாடி, பேஸ்லைன் றோட், கொழும்பு-09,
தொ.பே: 011 2687520, 0112690604

கணக்கு லிகிதர் தேவை
வடமாகாணத்தில் விரிவடைந்து வரும் ஒரு விநியோக நிறுவனத்துக்கு அதன் யாழ்ப்பாண விநியோக மையத்தில் பணியாற்ற ஒரு கணக்கு லிகிதர் தேவை.
B.Com (முகாமைத்துவம் அல்லது கணக்கியல்), அல்லது HND (Accounting Management) பெற்றிருப்போரது விண்ணப்பங்கள் சாதகமாகப் பரிசீலிக்கப்படும்.
கணினியைக் கையாளும் திறமையும் Quick books கணக்கியல் மென்பொருளில் (Accounting Softwears) வேலை செய்த அறிவும் இருப்பது தேவை.
நிர்வாக முன்னனுபவம் இருப்பது விரும்பத்தக்கது.
ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.
காலை 9.00 மணிக்கும் மாலை 5.00 மணிக்கும் இடையில் தொடர்புகொள்ளவும்.
021 2224291, 021 5676733

பணியாளர் வெற்றிடம்
யாழ். மாவட்ட EUT நிறுவனத்துக்கு
01. கணக்காளர்
02. வோல்டர் (Welder) (பயிலுநர்/ அனுபவமுள்ளவர்)
03. வர்ணப்பூச்சாளர் (Painter)
04. தச்சுத்தொழிலாளர்
05. MDF board வேலை தெரிந்தவர்கள்.
06. வேலைத்தள உதவியாளர்கள் (ஆண்/ பெண்)
காலம் : 01.09.2011 வியாழக்கிழமை காலை 10.00 மணி
இடம்: EUT சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.
தொ.பே: 021 2240110

வேலை ஆள்கள் தேவை
இளவரசன் மருந்தகத்துக்கு மருந்து விற்பனை அனுபவமுள்ள இருபாலாரும் தேவை.
No. 462 D, Hospital Road, Jaffna
T.P: 021 222 8083

தவறி விட்டது
நல்லூர் கோயிலில் சிவகுருநாதன் சசிதரன், 640481218 V எனும் இலக்கமுடைய அடையாள அட்டை, லைசன்ஸ், மோட்டார் வாகன இன்சூரன்ஸ் ஆகிய ஆவணங்கள் தவறிவிட்டன. கண்டெடுத்துத் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.
தொ.பே: 021 2225443

German, Swiss
Deutsch மொழிகளுக்கான புதிய பிரிவுகள் குறைந்த கட்டணத்துடன் ஆரம்பமாகின்றன. 01.09.2011 இக்கு முன் கீழ்க்காணும் முகவரியுடனோ, தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும்.
ஆரம்பம்: 01.09.2011 காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை
விக்னா கல்வி நிறுவகம், 52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
Manipay. தொடர்பு: 0775990625, 0771193227

A/L சகல துறையினருக்கும்
3 ஆம் திகதி நடைபெற இருக்கும்
பொதுச் சாதாரணப் பரீட்சை
வழிகாட்டல் கருத்தரங்கு
இன்று (செவ்வாய்) 2 மணி தொடக்கம் 5 மணி வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.